விலை : 20.00
Website : www.valampurii.lk
Registered as a Newspaper in Sri Lanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 13 வியாழக்கிழமை (26.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 159

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# நிலங்களை இன்னமும் திருப்பியளிக்காதது ஏன்?

## சட்டமா அதிபரிடம் உச்ச நீதிமன்றம் கேள்வி



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது கைவிட்டுச் சென்ற நிலங்களை மீண்டும் உரிமையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கும்படி காணி ஆணையாளர் கடந்த 2013 ஆம் ஆண்டு பிறப்பித்த உத்தரவொன்றை இதுவ்ரை அமுல்படுத்த தவறியமை தொடர்பாக விளக்கமளிக்குமாறு உச்ச நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

23 ஆம் பக்கம் பார்க்க....

## கருத்தறியும் குழுவின் அறிக்கை ரணிலிடம்

(கொழும்பு)

நாட்டில் உருவாக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பு தொடர்பில் மக்களின் கருத்தறியும் குழு தனது 300 பக்கங்கள் கொண்ட அறிக்கையை நாளை வெள்ளிக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ள மக்கள் கருத்தறியும் குழு

24 ஆம் பக்கம் பார்க்க....

## மாணவனின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம், அராலி மாவத்தை விளையாட்டு மைதானத்திலுள்ள கிணற்றிலிருந்து மாணவனின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் அராலி தெற்கைச் சேர்ந்த 16 வயதுடைய

23 ஆம் பக்கம் பார்க்க....

## ரயர் வெடித்ததில் கட்டுப்பாட்டை இழந்து கடலில் பாய்ந்தது பேருந்து; 16 பேர் காயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்டைதீவு சந்தியை அண்மித்த பகுதியில் நேற்றைய தினம் மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் 16 பேர் காயமடைந்துள்ளதுடன் இ.போ.ச் பேருந்து ஒன்றும் அதிகளவில் சேதமடைந்துள்ளது.

மண்டைதீவு சந்தியில் இருந்து 200 மீற்றர் தொலைவில் நேற்று மாலை 5 மணியளவில் ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்.வந்த அரச பேருந்தின் ரயர்

24 ஆம் பக்கம் பார்க்க....

### தகாத வார்த்தைப் பிரயோகம்

## அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ பகிரங்க மன்னிப்பு கோரினார்

(கொழும்பு)

தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ நேற்று நாடாளுமன்றத்தில் மன்னிப்பை கோரியுள்ளார்.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதம் ஒன்றின் போது தகாத வார்த்தை பிரயோகத்தை பயன்படுத்தினார் என்று குற்றச்சாட்டு ஹரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இந்தநிலையில் நேற்று அவர் தமது மன்னிப்பை கோரினார்.

நாடாளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாக்கும் பொறுப்பின் அடிப்படையில் இந்த மன்னிப்பை தாம் கோருவதாக ஹரின் பெர்ணா

23 ஆம் பக்கம் பார்க்க....

## ஜீ7 மாநாட்டில் பங்கேற்க மைத்திரி ஜப்பான் பயணம்

(கொழும்பு)

ஜீ7 மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜப்பானிற்கு புறப்பட்டுச் சென்றுள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நேற்று பிற்பகல் 2.25 மணியளவில எமிரேட்ஸ் விமான நிலையத்திற்கு சொந்தமான பயணிகள் விமானத்தில் ஜனாதிபதி உள்ளிட்ட தூதுக் குழுவினர் சென்றுள்ளனர்.

ஜீ7 மாநாட்டின் தற்போதைய தலைவரான ஜப்பான் பிரதமர் சிங்சோ அபேவின் விசேட அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி ஜீ7 மாநாட்டில் கலந்து

23 ஆம் பக்கம் பார்க்க....




## இயற்கை அனர்த்தத்தில் சிக்கி பலியானோர் 101 ஆக உயர்வு!

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற கால நிலை காரணமாக பலியானவர்களின் எண்ணிக்கை 101 ஆக உயர்ந்துள்ளது.

இறந்தவர்களின் எண்ணிக்கை 101 என்றும், காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 100 என்றும் இடர் முகாமைத்துவ மையத்தின் துணை இயக்குநரான பிரதீப் கொடிபிலி கூறினார்.

நிலச்சரிவுகளின் பின்னர் புதையுண்டு காணாமல் போனவர்களில சிலர் சடலமாக மீட்கப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்தும் 100 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அரநாயக்க பிரதேசத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பாக வெளி

24 ஆம் பக்கம் பார்க்க....

### 26 வருடங்களின் பின்னர்


## வறுத்தலைவிளான் பாடசாலை திறப்பு



24 ஆம் பக்கம் பார்க்க....

## போதைப்பொருள் கடத்தலை தடுக்க கரையோர மக்கள் உதவ வேண்டும்

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இப்போது போதைப் பொருட்கள் கடத்தல் மையமாக மாற்றப்பட்டுள்ளது. தினமும் நூற்றுக்கணக்கான கிலோ கஞ்சா போதைப்பொருட்கள் இங்கு கடல் மார்க்கமாக கடத்தி வரப்படுகின்றன.

எனவே, இக் கடத்தலைத் தடுப்பதற்கு கரையோரங்களில் வாழ்கின்ற பொதுமக்கள் எமக்கு கூடுதலாக உதவ வேண்டும் என் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். சென் பற்றிக்ஸ் வீதியில்

24 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நன்றியுடன் பாராட்டுகின்றோம்

எமது வெள்ளிருவை ஞானவைரவர் சனசமூக நிலையத்திற்கு (J.Vc.13 CC. 1198) வட மாகாண சபை நிதியிலிருந்து நிலையத்தின் வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்து வழங்கிய...



வட மாகாண சபை சபாநாயகர் கௌரவ CVK. சிவஞானம் அவர்களையும்



வட மாகாண சபை உறுப்பினர் கௌரவ ச. சுகிர்தன் அவர்களையும்



வட மாகாண சபை உறுப்பினர் கௌரவ M.K சிவாஜிலிங்கம் அவர்களையும்



வட மாகாண சபை உறுப்பினர் கௌரவ வே.சிவயோகன் அவர்களையும்



முன்னாள் கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் கௌரவ பொ.குகதாஸ் J.P அவர்கள் எமது சனசமூக நிலையத்தை உள்ளூராட்சி சபையில் பதிவு செய்வதற்கு உதவியதுடன் மேற்குறித்த நிதியை பெற்றுக் கொள்ள கிராம மக்களின் பிரதிநிதியாக செயற்பட்டமைக்காகவும் நன்றிகளைத் தெரிவித்து பாராட்டுகின்றோம்

வெள்ளிருவை
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

வெள்ளிருவை ஞான வைரவர்
சனசமூக நிலைய
நிர்வாகத்தினரும் பொதுமக்களும்

# இதய அஞ்சலி

எமது கல்லூரி அதிபர்
அருட்தந்தை ஜே.ஏ.ஜேசுதாஸ் அவர்களின் அன்புத் தாயார்




அமரர் விக்டோரியா யோசப் அந்தோனிப்பிள்ளை

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அதிபர் மற்றும் அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை ஹென்றீசியன் குடும்பத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனின் அருளை வேண்டி நிற்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
**புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.**

# சிறிதரன் எம்.பியின் தந்தை காலமானார்



யாழ்ப்பாணம்-கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் தந்தையார் சின்னத்துரை சிவஞானம் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 78.

மண்டைதீவு-அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் வட்டக்கச்சியை வதிவிடமாகக் கொண்டிருந்ததுடன் சில வருடங்கள் பிரான்ஸ் நாட்டில் வசித்து வந்திருந்தார். அண்மையில் தாயகம் திரும்பிய இவர் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் நேற்றுக் காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக் காக வட்டக்கட்சியில் உள்ள அவரது இல் லத்தில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிக் கிரியைகள் எதிர் வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறும். (ந)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை
கலைமாமணி
Dr.S.S. சர்மா குருஜீ
076 725 6024 (C-4662)
நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்

**இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்**
**யாழ்ப்பாண பிராந்திய நிலையம்**
**சிங்கள மொழிப் பாட நெறி-2016/17**

மேற்படி விளம்பரத்தின் விண்ணப்ப முடிவுத்திகதி 31.05.2016 ஆகும். நேற்றைய வலம்புரியில் 2ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் இவ் விண்ணப்ப முடிவுத் திகதி வெளிவரவில்லை. (இ)

பதிவாளர்
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்




மல்லாகம் நீதிமன்றத்தின் நன்னடத்தைப் பிரிவில் கடமையாற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சர்வேஸ்வரன் நளாயினி அவர்களின் தந்தையாரான திரு.சின்னட்டியான் முருகையா (கிளானை, தெல்லிப்பளை) அவர்கள் 24.05.2016 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (C-4693)

நன்னடத்தை அலகு
நீதிமன்றம், மல்லாகம்.

நன்னடத்தை உத்தியோகத்தர்கள்
மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.




சின்னத்துரை சிவஞானம்

எமது இல்லத்திற்கு தேவையான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் குழந்தைகளின் உணவு மற்றும் பராமரிப்பிற்கும் உதவி வரும் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவர்களின் அன்புத் தந்தையார் சின்னத்துரை சிவஞானம் அவர்களின் இவ்வுலக மறைவானது எம்மையும் இல்லக் குழந்தைகளையும் ஆழ்ந்த துயரத்திற்குள்ளாக்கியதோடு அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல உருத்திரபுரிசுவரன் சந்நிதியில் சங்கமமாகி நித்திய வாழ்வு பெற உருத்திரபுரிசுவரனை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
தலைவர்-தி.இராசநாயகம், பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக் குழந்தைகள்,
(C-4695) மகாதேவா சுவாமிகள் சிறுவர்கள் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.

# காணாமற்போனோர் குறித்த பணியகம் அமைக்க அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

**காணாமற்போனோர் சம்பந்தமான சுயாதீன பணியகம் ஒன்றை நாடாளுமன்றத்தில் சட்டம் ஒன்றின் மூலம் ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைவாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம்வழங்கியுள்ளது. காணாமற் போயுள்ளதாக அல்லது கண்டுபிடிக்க முடியாத நிலையில் இருக்கும், நபர்கள் தொடர்பில் கண்டனாங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

அவ்வாறு காணாமற் போயுள்ள நபர்கள் தொடர்பாக விபரங்களை அவர்களது உறவினர்களுக்குப் பெற்றுக்கொடுப்பது அத்தியாவசியமாகும்.

அவ்வாறு காணாமற் போயுள்ள நபர்கள் தொடர்பான உண்மையான தகவல்களை அவர்களது உறவினருக்கு தெரியப்படுத்துவதன் மூலம் பல நன்மைகளை அடைந்து கொள்ளமுடியும்.

அதனடிப்படையில் காணாமற்போன நபர்களை தேடுதல் மற்றும் கண்டறிதல் மற்றும் அதற்குப் பொருத்தமான பொறிமுறையொன்றை இனங்காணல் மற்றும் அந்த நபரகள் காணாமற் போனதற்கான காரணங்கள் மற்றும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமையை தெளிவுபடுத்திக் கொள்ளல்.

"காணாமற் போதல்" நிகழ்வுகள் சம்பந்தமாக எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை முன்வைத்தல்.

காணாமற்போனோர் மற்றும் அவர்களது உறவினர்களின் உரிமைகள் மற்றும் பற்றுதல்களை பாதுகாத்துக் கொள்ளல் காணாமற்போனோர் மற்றும் அவர்களது உறவினர்களுக்குப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடைய நிவாரணங்களை வழங்குவதற்கான செயற்பாடுகளை இனங்காணல் அது சம்பந்தமாக அவர்களது உறவினர்களுக்கு அறிவுறுத்தல். அரச நிறுவனங்கள் மற்றும் வேறு நிறுவனங்கள் மூலம் கண்டுபிடிப்பதற்கு முடியாமற் போன நபர்களின் விபரங்கள் அடங்கிய தரவுகளை திரட்டி. மத்திய தரவு வலையமைப்பொன்றை பன்முகப்படுத்தி கோவைப்படுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள இந்த பணியகத்தை ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-10)

## ஜனாதிபதிக்கு அருகிலிருந்த காணாமற்போன மாணவி யார்?
### கல்விப் பணிப்பாளரிடம் விளக்கம்

ஜனாதிபதிக்கு அருகில் நிழற்படத்தில் நிற்கும் மாணவி தனது மகளென குறித்த மாணவியின் தாயார் தமக்கு முறைப்பாடு செய்திருக்கிறார்.

எனவே அவரை அடையாளம் காண உதவுமாறு காணாமற்போனோர் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

கிழக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் என்.மணிவண்ணன் இது விடயம் தொடர்பாக சுற்று நிருபமொன்றை சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

இச்சுற்று நிருபத்துடன் குறித்த மாணவி மற்றும் சக மாணவிகளுடன் ஜனாதிபதி அளவளாவும் வர்ண நிழற்படப் பிரதியும் இணைக்கப்பட்டுள்ளது. அதிலே மாணவிகளின் கழுத்துப்பட்டி குளோஸ்அப் காட்சியும் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் காணாமற் போனோர் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவரின் கடிதத்தின் பிரதியும் இணைக்கப்பட்டுள்ளது. (இ-10)

## அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பெண்கள், குழந்தைகள் குறித்து விசேட கவனம்

(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலன் கருதி விசேட கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போது ஜனாதிபதி இந்த பணிப்புரையை விடுத்தார்.

இதன்போது குழந்தைகள் பாதுகாப்பு என்ற தேசிய வேலைத்திட்டத்தின் அடிப்படையில் கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்டு இடமாற்றப்பட்ட குழந்தைகள், அதிகளவு துஷ்பிரயோகத் துக்கு உட்படுத்தப்படுவார்கள் என ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. (இ-10)

## ஊடக சுதந்திரத்தை மதிக்க வேண்டுமாம்
### மகிந்த கூறுகிறார்



ஜனநாயகத்தை பாதுகாக்க அனைவரும் ஊடக சுதந்திரத்தை மதிக்க கற்றுக் கொள்ளவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெலியத்தையில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

நாட்டில் யுத்தம் ஒன்று நடந்ததையே சிலர் மறந்து விட்டார்கள் என்று மேலும் கூறினார்.

யுத்தத்துடன் தொடர்புடைய தகவல்களை வெளியிடுவதற்கு எதிராக ஊடக சுதந்திரத்தை கட்டுப்படுத்த அதிகார தரப்பினர் முயற்சித்தார்கள் என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தன்னோடு இருந்து விட்டு தற்போது முன்னைய அரசாங்கத்தை பற்றி கூறி கட்சி தாவும்சிலரின் கருத்துக்களை தொலைக்காட்சி மூலம் பார்க்கும் போது தனக்கு சிரிப்பு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இருப்பினும் தற்போது இவர்கள் தன்னை ஒருகாலும் சந்தித்ததில்லை என்றும் தன்னிடம் எந்த உதவியையும் கோரவில்லை என்றும் சொல்லித்திரிவதாக அவர்மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## புபுது கைது

முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் புபுது ஜெயகொட மற்றும் அந்தக் கட்சியின் உறுப்பினர் சுஜித் குருவிட ஆகியோர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குடிவரவு, குடியகல்வு சட்டத்தை மீறியதாக குற்றம்சாட்டப்பட்டு குமார் குணரத்னம் சிறையில் அடைக்கப்பட்ட பின்னர், கடந்த ஏப்ரல் முதலாம் திகதி அவருக்கு இந்த நாட்டு குடியுரிமையை வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

புஞ்சி பொரளையிலுள்ள குடிவரவு, குடியகல்வு அலுவலகத்தின் முன்னால் முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டத்தின் போது அங்கிருந்த பொருட்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதாக தெரிய வந்துள்ளது.இந்த சம்பவம் தொடர்பிலேயே புபுது ஜெயகொட மற்றும் சுஜித் குருவிட ஆகியோரை மருதானை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர். (இ-10)

## இலங்கையில் ஸ்மார்ட் சிட்டிக்கு தென்கொரியா பாரிய முதலீடு
### ஒப்பந்தம் கைச்சாத்து

இலங்கையில் ஸ்மார்ட் சிட்டியை உருவாக்க 63.2 பில்லியன் அமெரிக்க டொலர்களை (ரூ. 9,346.6 பில்லியன்) முதலீடு செய்ய தென்கொரியா முன்வந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஸ்மார்ட் சிட்டியை நிர்மாணிப்பதற்கு முதலீடு செய்வது தொடர்பான ஒப்பந்தத்தில் தென்கொரிய காணி, தென்கொரியாவின் உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து அமைச்சரான கொங்ஹோஇன் மற்றும் இலங்கையின் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோர் கையெழுத்திட்டுள்ளதாக அந்நாட்டுச் செய்தி தெரிவித்தது.

தென்கொரியாவின்சியோல் நகரிலுள்ள ஹோட்டலில் வைத்து இந்த இருதரப்பு ஒப்பந்தம், நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

விஞ்ஞானம்மற்றும்தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு, கொழும்பின் புறநகர்ப் பகுதியான மாலபேயில் ஸ்மார்ட் சிற்றி நிர்மாணிக்கப்படவுள்ளது. (இ-10)

## இலங்கை விமானப்படை ஹெலிகொப்டர் விபத்து

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான பெல் 206 (bell 206) வகை ஹெலிகொப்டர் ஹிகுரான்கொட விமானப் படை முகாமில் வைத்து நேற்று முற்பகல் விபத்துக்குள்ளாகியுள்ளது.

பயிற்சி நடவடிக்கைகளின் பின்னர் குறித்த ஹெலிகொப்டரை தரையிறக்க முற்பட்டபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும் சம்பவத்தில் விமானி உயிர்தப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## அமெரிக்கா கடந்த வருடத்தில் மட்டும் இலங்கைக்கு 40மில்.டொலர்கள் உதவி

கடந்த வருடத்தில் மாத்திரம் அமெரிக்க அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு 40 மில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்கியது.

எதிர்வரும் வருடங்களிலும் இதே அளவான தொகைக்கான கோரிக்கை நல்லாட்சி அரசாங்கத்தின் அர்ப்பணிப்புக்களுக்காக விடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவு சிறப்பான முறையில் உள்ளது. இந்த நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் அரசாங்கம் அவசியமான அரசியலமைப்பு உருவாக்கம் நல்லிணக்கம், ஐக்கிய நாடுகள் சபையின் யோசனைகளுக்கான அர்ப்பணிப்புக்களை நோக்கி நகர்கிறது.

இந்த நிலையில் அமெரிக்கா, தமது பங்கிற்காக இலங்கை அரசாங்கம் நாட்டை கட்டியெழுப்புவதற்கான உதவிகளை வழங்கிவருகிறது.

அத்துடன் இலங்கையில் உள்ள அனைவரும் சம உரிமையுடன் வாழ அமெரிக்கா துணையாக இருக்கிறது என்றும் கெசாப் தெரிவித்தார்.

அமெரிக்காவின் வெளிநாட்டு உதவி மூலவள அலுவலகத்தின் பணிப்பாளர் ஹரி சாஸ்ட்ரி மற்றும் பிரன்டன் டலாஸ் ஆகியோர் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டு கடந்த வாரம் பொலனறுவைக்கு சென்றிருந்த போதே இந்தக் கருத்துக்களை கெசாப்தெரிவித்துள்ளார். (இ-10)

## பாதிக்கப்பட்டவர்களுக்காக IOC நிறுவனத்தினால் ரூ.5 மில்லியன்

(கொழும்பு)

அனர்த்த நிலைமைகளினால் பாதிக்கப்பட்டவர்களின் நலனோம்புகை நடவடிக்கைகளுக்காக (IOC) நிறுவனம் ஐந்து மில்லியன் ரூபாவை நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்தது.

மேலும் அந்நிறுவன ஊழியர்களின் ஒரு நாள் சம்பளத்தையும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கியுள்ளனர். (இ-10)

# மரண அறிவித்தல்

## சிவப்பிரகாசம் பொன்னம்மா



தம்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவப்பிரகாசம் பொன்னம்மா நேற்று 25.05.2016 புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் அமரர் கிருஸ்ணதாஸ் மற்றும் அமிர்தவல்லி, சுந்தரவல்லி, இன்பவல்லி, இராதா கிருஷ்ணன் ஆகியோரின் அன்புத் தாயாரும் அரியமலர், வசந்தகௌரி, சிதம்பரப்பிள்ளை, அரியகுணராஜா, பாலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் அனுஜா, மேனகா, ஜனார்த்தனன், ஸ்ரீரஞ்சன், மீரா, ஸ்ரீஜெயராம், ஸ்ரீரகுராம், சுமதி, சுசித்திரா, சுதர்சனா, ஜெயகிருஸ்ணா, கோகிலவதனா, கோகிலன், அபிராமி, அர்ச்சனா, கோகுலன் ஆகியோரின் பேர்த்தியாரும் தஜானன், தட்சிகா, அபிநயா, அக்சராவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 26.05.2016 வியாழக்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-4697)

தம்பசிட்டி, பருத்தித்துறை.

தகவல்:- குடும்பத்தினர்
077 899 8790

## மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

# கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | ஒப்பந்த பெயர் | ஒப்பந்த தொகை | வேண்டப்படும் ஆகக்குறைந்த ICTAD தரம்/பதிவு | கேள்விப் பிணைப்பணம், செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|
| KN/EB/11/Con/ ELP/II/2016 | புனரமைப்பு வேலைகள் வாய்க்கால்கள், குளங்கள், நீர்த் தேக்கம் (குடிசார் வேலை) ஆனையிறவு உப்பளம் | 35.3 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C5 or above | ரூபா 360,000.00 வங்கி பிணை 20/10/ 2016 வரை |
| KN/EB/11/Con/ ELP/2016 - | உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி வேலைகள் ஆனையிறவு உப்பளம் | 21.6 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C6 or above | ரூபா 220.000.00 வங்கி பிணை 20/09/ 2016 வரை |

1.பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவார்.

I. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்

II. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.

III. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.

2.ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே.இல.0212285357, பக்ஸ் இல:-0212283966)

3.கேள்வி ஆவணங்களை 01.06.2016ஆம் திகதியிலிருந்து 21.06.2016ஆம் திகதிவரை முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை வேலைநாட்களில் கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாகக்கிளையில் மீளளிக்கப்படாத ரூபா 2000.00 கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

4. இரு அரக்கு முத்திரையிடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும் கேள்வி கோருவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

5.அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் விலாசத்துக்கு 22.06.2016 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கப்பெறல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

6.கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.


7.தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட நிதிச்சுற்றறிக்கை 04/2016க்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கே முன்னுரிமையளிக்கப்படும்.

**சுந்தரம் அருமைநாயகம்**
**திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரும்**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்**
**கிளிநொச்சி மாவட்டம்**

(C-4692)

# கொல்கத்தா அவுட்

## குவாலிபயர் 2இல் ஹைதராபாத் – குஜராத் மோதல்



ஹைதராபாத் அணிக்கு எதிரான ஐ.பி.எல்., 'எலிமினேட்டர்' போட்டியில் 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்த கொல்கத்தா அணி தொடரில் இருந்து வெளியேறியது.

இந்தியாவில் 9ஆவது ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. இதன் இறுதிப் போட்டிக்கு பெங்களூர் அணி முன்னேறிவிட்ட நிலையில் நேற்று டில்லி பெரோஷா கோட்லா மைதானத்தில் நடந்த 'எலிமினேட்டர்' போட்டியில் கொல்கத்தா-ஹைதராபாத் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணித் தலைவர் கம்பீர் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

### தவான் ஏமாற்றம்

ஹைதராபாத் அணிக்கு ஷிகர் தவான்-அணித் தலைவர் வோர்னர் ஜோடி மோசமான ஆரம்பம் கொடுத்தது. மோர்கல் ஓவரில் தொடர்ந்து இரு பவுண்டரிகள் அடித்த தவான(10), அடுத்த பந்தில்போலடானார்.

### சபாஷ் குல்தீப்

வோர்னருடன் இணைந்த ஹென்ரிக்ஸ், சற்று வேகமாக ஓட்டங்கள் சேர்த்தார். 2 சிக்ஸர்கள் அடித்த திருப்தியில் இவர், குல்தீப் 'சுழலில்' சிக்கினார். இவரது அடுத்த பந்தில் அபாயகரமான வோர்னர் (28) போல்டானார். பின் வநத யுவராஜ் சிங், குல்தீப் ஓவரில் தலா ஒரு பவுண்டரி, சிக்சர் அடித்தார். இவருக்கு கைகொடுத்த ஹூடா (21) ரன் அவுட்டாக, வந்த வேகத்தில் கட்டிங் 'டக்' அவுட்டானார். சில நிமிடங்களில் 44 ஓட்டங்கள் எடுத்த யுவ்ராஜ் சிங், ஹோல்டர் பந்தில் போல்டானார்.

ஹைதராபாத் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கு 162 ஓட்டங்கள் எடுத்தது. பிபுல் சர்மா (14) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் கொல்கத்தா அணி சார்பில் குல்தீப் 3, மோர்கல், ஹோல்டர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

### கம்பீர் 'அவுட்'

பின் சவாலான இலக்கை துரத்திய கொல்கத்தா அணிக்கு உத்தப்பா (11), கம்பீர் (28), முன்ரோ(16) ஏமாற்றினர். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட யூசுப் பதான், 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, சிக்கல் ஏற்பட்டது. சூர்யகுமார் (23), மணிஷ் பாண்டே (36) சீரான இடைவெளியில் வெளியேறினர். கொல்கத்தா அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 25 ஓட்டங்கள் தேவைப்பட்டன. புவ்னேஷ்வர் வீசிய இந்த ஓவரில் சதீஷ் (8), ஹோல்டர் (6) ஆட்டமிழந்தனர்.

கொல்கத்தா அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கு 140 ஓட்டங்கள் மட்டும் எடுத்து 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்து தொடரில் இருந்து வெளியேறியது. வெற்றி பெற்ற ஹைதராபாத் அணி நாளை நடக்கும் தகுதிச்சுற்று 2க்கு முன்னேறியது.

பந்துவீச்சில் ஹைதராபாத் அணி சார்பில் புவ்னேஸ்வர் குமார் 19 ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக ஹைதராபாத் அணியின் ஹென்ரிக்ஸ் தெரிவானார்.

### இரண்டு 'தவான்'


கொல்கத்தா அணி துடுப்பாட்டம் செய்த போது திடீரென ஹைதராபாத் வீரர் தவான், கலரியில் நின்று மீசையை முறுக்கிக் கொணடிருந்தார். களத்தடுப்பு செய்ய வேண்டிய இவர், இப்படி வெளியில் உள்ளாரே என, எல்லோரும் ஒரு கணம் 'ஷாக்' ஆகினர். பின்தான் தெரிய வந்தது. அவர் போட்டியை பார்க்க வந்த ஒரு ரசிகர் என்று. இவர் பார்ப்பதற்கு தவான் போலவே இருந்தார். மைதானத்துக்குள் 'ஒரிஜினல்' தவான் வழக்கம்போல 'களத்தடுப்பு செய்து கொண்டிருந்தார்.

### குஜராத்-ஹைதராபாத் மோதல்

ஐ.பி.எல்., தகுதிச்சுற்று 1ல் தோற்ற குஜராத் அணி, நாளை நடக்கும் தகுதிச்சுற்று 2ல் 'எலிமினேட்டர்' போட்டியில் வென்ற ஹைதராபாத் அணியை சந்திக்கும். இதில் வெல்லும் அணி மே 29ல் நடக்கவுள்ள பைனலில் பெங்களூரை எதிர்த்து விளையாடும்.(க)

# ஒரு ஓவரில் 6 சிக்ஸர்கள்

## நியூசிலாந்து வீரர் சாதனை!



இங்கிலாந்தில் நடந்த உள்ளூர் போட்டியில் 19 வயது நியூசிலாந்து வீரர் ஒருவர் ஒரு ஓவரில் 6 சிக்ஸர்கள் அடித்து சாதனை படைத்துள்ளார்.


சர்வதேச கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க வீரர் ஹெர்செல்லே கிப்ஸ், இந்திய வீரர் யுவ்ராஜ் சிங் ஆகியோர் மட்டுமே ஒரு ஓவரில் 6 சிக்ஸர்கள் விளாசி சாதனை படைத்துள்ளனர்.

இந்நிலையில் இங்கிலாந்தில் மெர்ல்ன்போர்ன் கிரிக்கெட் கிளப்பாக ஆடிய 19 வயதேயான கிளென் பிலிப்ஸ் ஒரு ஓவரில் 6 சிக்ஸர்கள் விளாசி இவர்கள் சாதனையை சமன் செய்துள்ளார்.

தொடர்ந்து அசத்திய அவர் Duke of Norfolk XI அணிக்கு எதிரான அந்தப் போட்டியில் 123 பந்தில் 201 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

தென்னாபிரிக்காவில் பிறந்து நியூசிலாந்தில் வளர்ந்தவரான கிளென் பிலிப்ஸ், அண்மையில் பங்களாதேஷில் நடந்த 19 வய துக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ண தொடரில் நியூசிலாந்து அணிககாக விளையாடினார். ஆக்லாந்து அணிக்காக 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடி சதமும் விளாசியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)






வண்ணை திருவருள்மிகு

# ஸ்ரீ வீரமாகாளியம்பாள் ஆலய

## வருடாந்த கொடியேற்ற பெருந்திருவிழா-27-05-2016

நாளை 27/05/2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அகில இலங்கை இந்திய புகழ்பூத்த நாதஸ்வர தவில் வித்துவான்களின் இசைமாரி முழக்கத்துடன் கொடியேற்றப் பெருந்திருவிழா மிகச் சிறப்பாக இடம்பெறவுள்ளது. அம்பிகை அடியவர்கள் அனைவரும் அலை அலையாக வருகை தந்து அம்பிகையின் கொடியேற்ற வைபவத்திலும் நண்பகல் நடைபெறும் மகேஸ்வர பூசையிலும் (அன்னதானத்திலும்) கலந்து சிறப்பித்து அம்பிகையின் அருட்கடாட்சத்தினைப் பெற வாரீர் வாரீர்.

கொடியேற்றப் பெருந்திருவிழா உபயகாரர்கள்.

கிருஷ்ணா ஜீவல்லறி
இல.09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

கிருஷ்ணா அடைவு கடை,
இல.370,கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4687)


## விண்ணப்பம் கோரல்

நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை கள உதவியாளர்களைப் பயிற்று விப்பதற்காக நடத்தப்படும் தேசிய தொழில் தகைமை மட்டம் 2/3/4 (NVQ level 2/3/4) பாடநெறிக்காகக் கீழ்க்காணும் தகைமை கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வயது: 18 வருடங்களுக்கும் 45 வருடத்திற்கும் இடைப்பட்ட வயதுடையவராக இருத்தல் வேண்டும்.

கல்வித்தகைமை: இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் க.பொ.த (சாதாரண) தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

விண்ப்பங்கள் 2016.06.10 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கதாக கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பரீட்சைகள்), பரீட்சைகள் கிளை, நில அளவையாளர் நாயக அலுவலகம், த.பெ.இல 506, கொழும்பு 05.

மேலதிக தகவல்களுக்கு 20.05.2016 இல் வெளிவந்த வர்த்தமானியை பார்வையிடலாம். (இ


## அரசாங்க அறிவித்தல்
## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
## கேள்வி கோரல்

யாழ். மாவட்டச் செயலகம் பின்வரும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பொருத்தமான வழங்குநரிடமிருந்து கேள்விகளை கோருகின்றது. இது தொடர்பான மேலதிகமான தகவல்களினையும் விண்ணப்பப் படிவத்தினையும் செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் 2016.05.27 ஆம் திகதி தொடக்கம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

Desktop Computer, Laptop, Server, Photo Copier, UPS, Printer, Scanner, Multimedia Projector, Fax, Access Point, Cat 6 Cable, Computer Table, Office Chair, Computer Lap Wheel Chair (with out Hands), Linoeum Sheet, Water Dispensor

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களினை 2016.06.09 ஆம் திகதி பி.ப1.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் வழங்கலின் விபரத்தினைக் குறிப்பிட்டு "தலைவர், பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும் அல்லது நேரடியாக செயலக நிதிக்கிளையிலுள்ள கேள்விப்பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் 2016.06.09 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 2.30 இற்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

முக்கியகுறிப்பு

1. தங்களது வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்களுக்கு மட்டுமே தாங்கள் கூறுவிலைகள் வழங்குதல் வேண்டும்.
2. பொருட்களை வழங்குவதற்கு தெரிவு செய்யப்படும் வழங்குநர் வெளி மாவட்டத்தினைச் சேர்ந்தவராக இருப்பின், இந் நிறுவனத்திற்கு யாழ்.மாவட்டத்தில் முகவரோ அன்றி விநியோகஸ்தரோ இருத்தல் வேண்டும். இதனை உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் யாவும் 31/12/2016வரை வலுவில் இருத்தல் வேண்டும்.

நா.வேதநாயகன் மாவட்டச் செயலரும்
அரசாங்கஅதிபரும், யாழ். மாவட்டம்

(சி-4688)



## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



(6489)

பிறப்பு
13/06/1981

இறப்பு
06/06/2015

### அமரர் நடராசா ரகுநாதன்

தாய் தந்தை எனும் சிற்பி தரணியிலே
உமைவடித்து பாதியிலே தாய்பிரிய
பாசத்துடன் உம் உறவை நோய் நொடி
பாராது நோக்கம் கைவிடாது அன்னையாய்
அரவணைத்து அண்ணனாய் அறிவூட்டி
தன்னலம் பாராது தங்கைக்காய் வாழ்ந்தீரே!
ஞாலத்தில் நாம் வாழ மட்டும் இனி யார் துணைநிற்பர்
பாரினில் நாம் வாழு மட்டும் உம் நினைவை
நெஞ்சத்தே சுமந்து பாதம் தொழுது நிற்போம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

26.05.2016 இன்று அவரது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் இடம்பெறும்.

கற்கோவளம்
பருத்தித்துறை

(சி-4689)

குடும்பத்தினர்.


## இராசி பலன்

26.05.2016
(வைகாசி 13, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
சதுர்த்தி காலை 5.56 மணிவரை
பஞ்சமி பின்னிரவு 5.24 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 1.48 மணிவரை
சுபநேரம் 7.22-8.52 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | புத | சூரி சுக் | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவாதிரை,புனர்பூசம் காலை 7.43 இற்கு மக-சந் | | |
| சந் | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மேடம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.

**இடபம்** மனக்குழப்பம் அகன்று மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள், திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், திடீர் செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்** அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி** உதிரி வருமானங்கள் பெருகும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**துலாம்** வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், உடன் பிறப்புக்கள் உதவிக் கரம் நீட்டுவர், பயணங்களால் பலனுண்டு, வருமானம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு** நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு, நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, தொலைபேசிச் செய்திகள் மகிழ்ச்சி தரும்.

**மகரம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறும், வருமானத்தை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**கும்பம்** பயணத்தால் பலன்கிடைக்கும், இறைவழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சிறிய வேலையொன்றுக்காக சற்று அலைய நேரிடலாம், உடல் நலம் சீராகும்.

**மீனம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், நட்பு வட்டம் விரிவடையும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

# ரூ.1.2 மில்லியன் நிதியொதுக்கீட்டில் முருகமூர்த்தி ஆலய வீதி புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு சொந்தமான அராலி மத்தி தறணன் முருகமூர்த்தி ஆலய வீதிப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ் வீதிப்புனரமைப்புப் பணிகள் மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதியில் இருந்து சுமார் 1.2 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ் வீதியானது சுமார் 80 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாது காணப்பட்டது.

குறித்த வீதியினை விவசாயிகள்,குடிநீர் பெறுவோர், ஆலய அடியார்கள்,மக்கள் ஆகியோர் நாளாந்தம் பயன்படுத்துகின்றனர்.

வீதியினை புனரமைத்துத் தரும்படி பல வருடங்களாக பிரதேச சபையிடம் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்தும் நிறைவேற்றப்படவில்லை.

எனினும் கடந்த வருடம் குறித்த பகுதிக்கு விஜயம் செய்த வடக்கு போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனிடம் அப்பகுதி மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் விடுத்த கோரிக்கைக்கு இணங்க குறித்த வீதிப் பிரச்சினை இவ் வருடம் நிவர்த்தி செய்யப்படும் என மாகாண அமைச்சரால் உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது.

அதற்கிணங்க தற்சமயம் குறித்த வீதியினை புரைமைப்பதற்கு பொருட்கள் பறிக்கப்பட்டுள்ளன. இவ் வீதிப்புனரமைப்புப் பணிகள் இன்னும் சிலநாட்களில் மாகாண அமைச்சரினால் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. (இ-91)

# சமஷ்டி கோரிக்கையை விட்டுக்கொடுக்க முடியாது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் தீர்வுத் திட்டத்திற்கு மாகாண சபையின் சிங்கள உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் மற்றும் உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் ஆகியோர் தெரிவித்துள்ளனர். பேரினவாதிகளின் கூச்சலுகளுக்காக எமது தலைவர்கள் வலியுறுத்தி வந்த வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி கோரிக்கையை விட்டுக் கொடுக்க முடியாது எனவும் அவர்கள் திட்ட வட்டமாக தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண சபையினால் தயாரிக்கப்பட்ட தீர்வு திட்டம் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நேற்று முன்தினம் நண்பகல் பன்னிரெண்டு மணியளவில் நடைபெற்றது.இதன் போதே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அரசியல் அமைப்பை மீறும் எந்த செயற்பாடுகளிலும் வடக்கு மாகாண சபை ஈடுபடவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் இணைந்த சமஷ்டி அடிப்படையிலான தீர்வையே நாம் கோரியுள்ளோம். சமஷ்டியை நாம் ஒன்றும் புதிதாக கோரவில்லை. எமது தலைவர்களான தந்தை செல்வா கோரியிருந்தார், அதேபோல் அகில இலங்கை தமிழ் காங்கிரசின் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் சம அந்தஸ்தை கோரியிருந்தார்.

இது தவிர சிங்கள தரப்பில் முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டார நாயக்கவும், கனேடிய இராசதானியும் சமஷ்டியை முன்வைத்திருந்தன.

ஆகவே நாங்கள் தான் புதிதாக கேட்டோம் என்று கொந்தளிப்பது பயனற்றது. எமக்கான நிரந்தர அரசியல் தீர்வாக எமது தலைவர்களால் கோரப்பட்டு வந்த சமஷ்டியை எந்த எதிர்ப்புக்காகவும் யாருக்காகவும் வடக்கு மாகாண சபை விட்டுக்கொடுக்காது என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (இ-4)

# அனுமதியின்றி இடம்பெறும் கல் அகழ்வுப் பணிகள்

தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பலாலி வடக்கு ,பலாலி கிழக்கு, பலாலி தெற்கு ஆகிய கிராம அலுவலகப்பிரிவுகளில் கல் அகழ்வுப்பணிகள் இயந்திரங்கள் மூலமாக துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

நீண்டகாலமாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து அண்மைக்காலத்தில் மக்களின் மீள்குடியமர்வுக்கு விடுவிக்கப்பட்ட பகுதிகளிலேயே இவ்வாறான கல் அகழ்வுப்பணிகள் இடம்பெறுகின்றன.

எந்தவிதமான அனுமதியினையும் பெறாது அளவுக்கு மீறிய கல் அகழ்வுப் பணிகளே இடம் பெறுகின்றன.

நாளாந்தம் சுமார் 10இற்கும் மேற்பட்டபெக்கோ இயந்திரங்கள் இவ் கல் அகழ்வுப் பணியில் ஈடுபடுகின்றன.

இவ்வாறு வரையறையின்றிய கல் அகழ்வுப்பணிகள் இடம்பெறுவதனால் சுற்றாடல் பாதிப்புக்கள் ஏற்படக்கூடிய அபாயமுள்ளது. இதன் காரணமாக கடல் நீர்உட்புகுவதன் மூலம் நன்னீர் உவர் நீராக மாறும் அபாயமுள்ளது. இது தொடர்பில் பிரதேச அரச அதிகாரிகள் பாராமுகமாக இருக்கின்றனர்.

குறித்த பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள வேண்டியதேவை இருந்தும் நாளாந்தம் நூற்றுக்கணக்கான கனரக வாகனங்கள் மூலம் கற்கள் வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

எனவே இது தொடர்பில் மாகாண சுற்றாடல் அமைச்சும் அரச அதிகாரிகளும் உடனடியாக நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-91)




## வலிகாமம் மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று 26 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வலி.மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்,சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராசா, ஈ.சரவணபவன் மற்றும் அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் இணைத் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் பிரதேச அபிவிருத்தி சம்பந்தமான முடிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.குறிப்பாக கிராமத்திற்கு ஒரு மில்லியன் அபிவிருத்தித் திட்டம் தொடர்பான இறுதி முடிவுகள் எடுக்கப்படவுள்ளதாக தெரிய வருகின்றது.

இக் கூட்டத்திற்கு கலந்து கொள்வதற்காக சமூக மட்ட அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ-91)

# வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலய விசாகப் பொங்கல்-மடை

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலய விசாகப் பொங்கல் வழிபாடு எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள வயாவிளான் மற்றும் அதனைச் சூழவுள்ள சுமார் 6000 ஏக்கர் காணியில் பரம்பரை பரம்பரையாகக் குடியிருந்த மக்கள் இடம் பெயர்ந்து 30 வருடங்களாகியுள்ள போதிலும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற முடியாத நிலை தொடர்கின்றது.

கிராமமக்களின் தொடர் முயற்சியினால் அமைச்சு மட்டத்திலும் இராணுவ உயர்மட்டத்திலும் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின் இந்த அனுமதி கிடைத்தது.

பொங்கல் வழிபாட்டில் இந்து கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம்,இந்துமத அலுவல்கள் அமைச்சின் இணைப்புச் செயலாளர் ஜே.பிரமிளஸ் கொஸ்தா பிரதம விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கடந்த வருடம் இடம்பெற்ற பொங்கல் மடைக்கு வருகை தந்தவர்களைக் காட்டிலும் அதிகமான மக்கள் இம்முறை ஒன்றுகூடுவார்கள் என்பதால் அதற்கான வசதிகளை செய்து கொடுப்பதற்கான ஏற்பாடுகள் விரிவாகச் செய்யப்பட்டுள்ளன.

மக்கள் தங்குவதற்கான கூடாரங்கள், போதுமான இருக்கைகள், குடிநீர் வசதிகள், ஆண்-பெண்களுக்கான தனித்தனி மலசல கூடங்கள்,போக்குவரத்து வசதிகள் என்பன இவ்வேற்பாடுகளில் உள்ளடக்கம்.

தவிரவும் முதலுதவி வண்டியுடன் கூடிய வைத்திய வசதிகளும் செய்து தருவதாக படைத்தரப்புடன் இணக்கம் காணப்பட்டுள்ளது.

வழமை போன்றே ஆலயத்தின் பிரதம குருக்களும் கலந்து கொள்ளவுள்ளதால் பொங்கலுக்குத் தேவையான பொருட்களுடன் மடை பரவுதல்களுக்கான பழவகைகளுடன் கற்பூரம் போன்றவற்றையும் தாராளமாக எடுத்து வரலாம்.பிற்பகல் 2 மணிக்கு முன் நிகழ்வு முடிவடையக் கூடியதாக நிகழ்ச்சி நிரல் அமைக்கப்பட்டுள்ளது. முடிவில் பழவகை, பொங்கல் உட்பட தத்தமது பொருட்களை தம்முடன் எழுத்துச் செல்வதற்கான வசதியும் செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய எமது தொடர் ஆலய பிரசன்னம் என்பது வெறும் தெய்வ தரிசனத்திற்கு அப்பால் எமது வயாவிளான் கிராமத்தின் மீள்குடியேற்றத்திற்கான முயற்சியாகவும் பார்க்கப்படுகிறது.

எனவே மிக அதிக அளவில் மக்கள் பாகுபாடின்றி இந்நிகழ்வில் பங்குபற்றுதல் எமது நோக்கங்களை நிறைவேற்ற உந்துசக்தியாக அமையும் என நம்புகிறோம்.

கலந்து கொள்ளும் மக்கள் காலை 8 மணிக்கு வயாவிளான் மத்திய கல்லூரிக்கு முன்பாக ஒன்று கூடும்படி ஆலயத்தின் செயற்குழு கேட்டுக்கொள்கிறது. (இ-10)

# வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் ஆலோசனைக் குழு நியமனம்

யாழ்.நகர அபிவிருத்தியில் பிரதேசங்களை வலயப்படுத்துவதற்கென ஆலோசனை குழு ஒன்று நேற்று முன்தினம் வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் நியமிக்கப்பட்டுள்ளது. யாழ். மாநகர அபிவிருத்தி திட்டத்தை துரித கதியில் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் யாழ். மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்று வந்தது.

இந்த நிலையில் இத் திட்டத்தை ஆரம்பிப்பதற்காக எதிர்வரும் 31 ஆம் திகதி உலக வங்கித் தலைவர்கள் நியூயோர்க்கில் அனுமதியை கொடுக்கவுள்ளார்கள். 55 மில்லியன் அமெரிக்க டொலரில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தத் திட்டத்தை முன்னெடுக்கும் காலகட்டத்தில் இலகுவாக மேற்கொள்வதற்கு நிர்வாகம், குடியிருப்பு, தொழிற்சாலைகள், போக்குவரத்து போன்றவற்றுக்குரிய பிரதேசங்கள் என்பவற்றை அடையாளம் கண்டு வலயப்படுத்துவதற்காக மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளை உள்ளடக்கி ஆலோசனை வழங்குவதற்கென இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. (இ-9)



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் இயங்கும் இளைஞர் கழகங்கள் தமக்கு நிதி சேகரிப்பதற்காக நடைமுறைப்படுத்தும் இளைஞர் கொடி வாரம் நேற்றைய தினம் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டது. இதன்ஒருஅங்கமாக யாழ்ப்பாண மாவட்ட அலுவலகம் கொடியினை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன்,வடமாகாண இளைஞர் விவகார அமைச்சர் குருகுலராஜா மற்றும் வடமாகாண ஆளுநரின் செயலாளர், வடமாகாண இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர், பாராளுமன்ற உறுப்பி னர் சரவணபவன் உள்ளிட்ட விருந்தினர்களுக்கும் அணிவித்து உத்தியோகபூர்வமாகஆரம்பிக்கப்பட்டது.இந்த கொடிவாரமானது எதிர்வரும் 30ஆம்திகதி வரை இடம்பெறவுள்ளதாகவும்பொதுமக்கள் இந்நிகழ்விற்கு இளைஞர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கோரியுள்ளனர்.

# நிவாரணப் பணிகளுக்காக ரூ.14,500 கோடி ஒதுக்கீடு

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

**சீரற்ற காலநிலையால் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க 14,500 கோடி ரூபாவை அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது. சர்வதேச நாடுகளின் நிதியுதவி மற்றும் நிவாரண உதவிகளையும் சேர்த்தால் இழப்பீடுகளை சரிசெய்ய போதுமான நிதி உள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

மேலும் சர்வதேச நாடுகளின் பண உதவிகளை அந்நாட்டு நாணயங்களில் செலுத்தவும் மத்தியவங்கி விசேட ஏற்பாடுகளை செய்துள்ளதாகவும் தெரிவித்தது.

நாட்டில் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களை சரிசெய்ய போதுமான நிதியொதுக்கீடு இல்லையென எதிரணியினர் குற்றம் சுமத்தியுள்ள நிலையில் அரசாங்கம் எவ்வாறான வகையில் இவற்றை கையாள்கின்றது என வினவிய போதே அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீரற்ற காலநிலையால் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணங்களை அரசாங்கம் துரிதமாக வழங்கி வருகின்றது. கடந்த ஒருவார காலமாக அரசாங்கம் பாதுகாப்பு படைகளுடன் இணைந்து சகல மக்களுக்குமான நிவாரண உதவிகளையும் அவர்களுக்கான பாதுகாப்பையும் வழங்கி வருகின்றது.

உடனடியாக அவர்களை பாதுகாப்பான முகாம்களுக்கு நகர்த்துவதும், மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கில் சிக்கிய மக்களை மீட்கும் நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுத்து வருகின்றோம்.



முகாம்களில் இருக்கும் மக்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளையும், கர்ப்பிணிப்பெண்கள் மற்றும் சிறுவர்கள் அனைவருக்கும் உடனடி மருத்துவ ஏற்பாடுகளையும் செய்துகொண்டுத்து வருகின்றோம்.

இராணுவத்தினதும், பொலிஸ் மற்றும் கடற்படையின் மருத்துவ பிரிவினர் சகல முகாம்களிலும் இருபத்து நான்கு மணிநேர மருத்துவ வசதிகளை செய்துகொடுத்து வருகின்றனர்.

அனர்த்தத்தில் ஏற்பட்ட சேதாரங்கள் சுமார் 20 கோடி ரூபாய்களை தாண்டியுள்ளது. இந்த அனர்த்தத்தில் மாத்திரம் இதுவரையில் நான்காயிரம் வீடுகள் முற்றாகவும் 3ஆயிரம் வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன.

எனவே முற்றாக சேதமடைந்த வீடுகளுக்கு 25 இலட்சம் ரூபாவும் பகுதி அளவில் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு ஒரு இலட்சத்தில் இருந்து சேதாரத்திற்கு ஏற்ற வகையிலான பணமும் வழங்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அதற்கமைய நிதி ஒதுக்கீடுகளை நிதி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது. அதேபோல் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் நிவாரணங்களை வழங்கவும் அவர்களுக்கான இழப்பீடுகளை வழங்கவும் அரசாங்கம் 14. 500 கோடி ரூபாய் தொகையை ஒதுக்கியுள்ளது. மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாடளாவிய ரீதியில் இருந்தும் சர்வதேச ரீதியில் இருந்தும் பல்வேறு நிவாரணங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அந்த நிதியையும் இணைத்துகொண்டால் ஏற்பட்டுள்ள சேதாரங்களை சரிசெய்யும் அளவிற்கு அல்லது அதற்கும் அதிக மான தொகை இப்போது அரசாங்கத்திடம் உள்ளது. இந்த நிதியின் மூலமாக பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் நிவாரணங்களை வழங்க முடியும்.

அதேபோல் சர்வதேச நாடுகளில் உள்ள இலங்கையர்கள் நிதியுதவி செய்ய விரும்பும் பட்சத்தில் அதற்கான வசதிகளையும் மத்திய வங்கி செய்து கொடுத்துள்ளது. சர்வதேச நாடுகளை சேர்ந்த நபர்கள் தாம் விரும்பும் பணத்தை அவர்களின் நாட்டு பணமாகவே செலுத்தும் வகையில் ஐந்து வங்கிக் கணக்குகளை மத்தியவங்கியின் உதவியுடன் ஆரம்பித்துள்ளோம். அமெரிக்க டொலர்களையும், ஸ்ரேலிங் பவுண், அவுஸ்திரேலியா டொலர், யூரோக்கள் மூலமாகவே தமது பண உதவிகளை வழங்க முடியும்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## இடைக்கால வரவு-செலவு தேவையா? இல்லையா?

(கொழும்பு)

இடைக்கால வரவு-செலவுத் திட்டம் அல்லது பாதீடு ஒன்றுக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், அது தேவை யானதா, இல்லையா என்பது குறித்துத் தீர்மானிக்குமாறு, அரச நிதிச் செயற்குழு, பாதீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் கேட்டுள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத்தின் அரச நிதிச் செயற்குழு, இது தொடர்பாக ஆராய்ந்துள்ளது. இக்கூட்டத்துக்கு, பாதீட்டுப் பணிப்பாளரும் அழைக்கப்பட்டிருந்தார்.

ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டிலிருந்து அரசாங்கம் ஏராளமாக விலகியுள்ள நிலையில், நடப்பு நிதியாண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டின் வருமான முன்மொழிவுகள் பயனற்றுப் போயுள்ளதால், இடைக்காலப் பாதீடு ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு, ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன, முன்னதாகக் கோரியிருந்தார்.

வரி மாற்றங்களை அரசாங்கம் கொண்டுவந்துள்ளமையே, தினேஷ் குணவர்தனவின் கோரிக்கைக்கான முக்கியமான காரணமாக அமைந்தது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அரச நிதிச் செயற்குழுவின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், ஆரம்பப் பாதீட்டிலிருந்து அரசாங்கம் எவ்வளவு விலகியுள்ளது என்பதைத் தீர்மானித்து, அறிக்கையொன்றைத் தனது செயற்குழுவுக்குச் சமர்ப்பிப்பதற்கு, மேலும் இரண்டு வாரகால அவகாசமொன்றைப் பாதீட்டுப் பணிப்பாளர் கோரியுள்ளதாகத் தெரிவித்தார்.

அதன் பின்னரே, இடைக்காலப் பாதீடு தேவையானதா, இல்லையா என்பதைக் கண்டறிய முடியுமெனவும் அவர் தெரிவித்தார். கடந்த வாரம் ஒன்றுகூடிய குறித்த செயற்குழு, நாடாளுமன்றத்துக்கான பாதீட்டு அலுவலகமொன்றை உருவாக்கி, வருடாந்தப் பாதீடுகள் தொடர்பான தகவல்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெறுவதற்கு வாய்ப்பேற்படுத்திக் கொடுப்பதற்குத் தீர்மானித்ததாகத் தெரிவித்த சுமந்திரன் எம்.பி, அந்த அலுவலகம் உருவாக்கப்பட்ட பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தகவல்களைத் தொடர்ச்சியாகப் பெறக்கூடியதாக இருக்குமெனத் தெரிவித்தார்.

குறித்த அலுவலகத்தை உருவாக்குவது தொடர்பாகவும் அதற்கான ஊழியர்களை உள்வாங்குவது தொடர்பாகவும், சபாநாயகருடன் இணைந்து, அரச நிதிச் செயற்குழு செயற்படுமெனவும் சுமந்திரன் எம்.பி மேலும் தெரிவித்தார். (இ)

## 20 பேரின் உடற்பாகங்கள் மீட்பு

கேகாலை மாவட்டத்தின் அரநாயக்க பிரதேசங்களில் இடம்பெற்ற மண்சரிவில் புதையுண்டவர்களை தேடும்பணிகள் கடும் சவாலுக்கு, மத்தியிலும் தொடரும் என்று மீட்பு பணிகளில் ஈடுபடும் படையினருக்கு தலைமை தாங்கும் அதிகாரி தெரிவித்தார். இந்நிலையில் அரநாயக்கவில் இதுவரை 20 பேரின் சடலங்களும் மேலும் 20 பேரின் உடற்பாகங்களும் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் அரநாயக்க பகுதியில் காணாமற் போன 132 பேரை தேடும் பணிகள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இராணுவத்தினராலும் விசேட அதிரடிப் படையினராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரநாயக்க பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சாமபுர என்ற மலையிலிருந்து ஏற்பட்ட மண்சரிவில் மூன்று கிராமங்கள் மண்ணில் புதையுண்டுபோயின. சிறிபுர, எலங்கபிட்டிய மற்றும் பல்லே பாகே ஆகிய கிராமங்களே இவ்வாறு மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மிகப் பெரிய நிலப்பரப்பில்ஏற்பட்ட இந்த மண்சரிவில் 80 க்கும் மேற்பட்ட வீடுகள் முற்றாக மண்ணில் புதையுண்டன. (இ-10)


இவர்களுக்கு மணமகள் தேவை

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா:23
உயரம்: 6’
தகைமை/தொழில்A/L/தனியார் தொழில்
தொ.இ: B/5869

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 30
உயரம்: 5’8"
தகைமை/தொழில்BSc/பொறியியலாளர்
தொ.இ: B/5874

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 20 செவ் 2 இல்
உயரம்: 5’2"
தகைமை/தொழில்:BBA/அரசதொழில்
தொ.இ: B/5876

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 24 செவ் 2 இல்
உயரம்: 5’11"
தகைமை/தொழில்:A/L ஜேர்மனி PR
தொ.இ: B/5879

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 5.75
உயரம்: 5’5"
தகைமை/தொழில்:BSc, CIMA/ கணக்காளர் கனடா PR
தொ.இ: G/5390

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 17
உயரம்: 158cm
தகைமை/தொழில்:BSc, MSc
தொ.இ: G/5391

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 29 செவ் 2 இல்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
தொ.இ: G/5393

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 15
தகைமை/தொழில்:பட்டதாரி/ஆசிரியர்
தொ.இ: G/5394

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# இடைப்போகமாக 103 1/2 ஏக்கரில் பயிர்ச்செய்கை

## ஒலுமடு கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவிப்பு

(மல்லாவி)

**ஒலுமடு கமநலசேவை நிலையத்தின் கீழ் இடைப்போகமாக 103 1/2 ஏக்கரில் பயிர்ச்செய்கை நடைபெறுவதாக ஒலுமடு கமநலசேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் நா.சுஜீபரூபன் தெரிவித்துள்ளார்.**

ஒலுமடு கமநல சேவைநிலையத்திற்குட்பட்ட நீர்ப்பாசனக் குளங்களின் நீர் மட்டம் அண்மையில் பெய்த மழைவீச்சியையடுத்து உயர்வடைந்துள்ளது.

இதன்காரணமாக விவசாயிகளின் நலன்கருதி இடைப் போகமாக 86 1/2 ஏக்கரில் நெல் பயிர்ச்செய்கையும் 17 ஏக்கரில் கச்சான் செய்கையுமாக மொத்தம் 103 1/2 ஏக்கரில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் நா.சுஜீபரூபன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஒலுமடு குளத் தின் கீழ் 32 ஏக்கரில் நெல், அம்பகாமம் குளத்தின் கீழ் 32 1/2 ஏக்கரில் நெல், 6ஏக்கரில் கச்சான், தச்சட ம்பன் குளத்தின் கீழ் 22 ஏக்கரில் நெல், 11 ஏக்கரில் கச்சான் என மொத் தம் 103 1/2 ஏக்கரில் இடைப்போகப் பயிர்ச்செய்கை நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (2-15)




## வடக்கு மாகாண ஆளுநருக்கும் கட்டளை தளபதிக்கும் இடையில் பேச்சு

வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, வன்னி மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பேரேரா ஆகியோருக்கிடையில் வன்னிபாதுகாப்பு படைத்தலைமையகத்தில், நேற்று முன்தினம் பிற்பகல் சந்திப்பொன்று இடம் பெற்றது.

வன்னி மாவட்டத்தில் தற்போதைய பாதுகாப்பு நிலைமை மற்றும் இராணுவம், பொதுமக்கள் இணைந்து மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசிப்பதற்காக இந்த சந்திப்பு இடம் பெற்றது.

மீள்குடியேறிய மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இராணுவத்தினர் முன்னெடுத்த நிவாரண உதவிகள் தொடர்பில், இதன்போது ஆளுநருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இதுதவிர, வவுனியாவில் மீள்குடியேறியுள்ள மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்தல், ஏனைய வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவற்றில் இராணுவத்தினரின் பங்களிப்பு குறித்தும் ஆளுநருக்கு விளக்கமளிக்கப்பட்டது. (2)

## தரம்-4 மாணவர்களுக்கான பரீட்சை இரண்டு தினங்கள் நடைபெறும்

வடக்குமாகாண கல்வித்திணைக்களத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்ற தரம் 4 மாணவர்களுக்கு தமிழ், கணிதம், சுற்றாடல் ஆகிய பாடங்களுக்கான பரீட்சை நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மேற்படி பரீட்சையில் சுற்றாடல் பாடத்திற்கான பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதிவெள்ளிக்கிழமையும் தமிழ், கணிதம் ஆகிய பாடங்களுக்கான பரீட்சை மறுநாள் சனிக்கிழமையும் தினமும் காலை 9 மணி தொடக்கம் மாணவர்கள் கல்வி பயின்று வருகின்ற பாடசாலைகளில் நடைபெறுமென அவர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல் பெற விரும்புவோர் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்று நிருத்தை பார்வையிடுவதன் மூலம் அறிந்து கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)









முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறுகோரி நேற்று காலை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.குறித்த ஆர்ப்பாட்டம் காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்டு வலயக்கல்வி அலுவலகம் வரைஇடம்பெற்றது. வருகைதந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் தங்களின் குறைகளை கூறி மகஜரொன்றை கையளித்தனர். இதேவேளை முதலமைச்சருக்கான மகஜரை வடக்கு மாகாணசபை பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன் பெற்றுக்கொண்டார். (படங்கள்: -பனிக்கன்குளம் செய்தியாளர்)

## தண்டப்பணம் செலுத்த முடியாத 42 பேர் சமுதாயம் சார் சீர்திருத்தப்பணிகளுக்கு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்குகளுடன் தொடர்புபட்ட 42 பேர் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைச் சட்டத்தின் கீழ் சமுதாயம்சார்சீர்திருத்தப்பணிகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மதுபோதையில் பொது இடங்களில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டமை, மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, கசிப்பு வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களில் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டு தண்டப்பணம் செலுத்த முடியாத 42 பேர் சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைச்சட்டத்தின் கீழ் சமுதாயம் சார் சீர்திருத்தப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக சமுதாயம் சார் சீர்திருத்த திணைக்களத்தின் மாவட்ட பணிப்பாளர் செ.யோ.றொசாந் கருத்து தெரிவிக்கையில்,

கிளிநொச்சி நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கசிப்பு வைத்திருந்தமை, மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, மதுபோதையில் பொது இடங்களில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுடன் தொடர்புபட்ட 42 பேர் கடந்த ஜனவரி மாதம் முதல் 1999 ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைச்சட்டத்தின் கீழ் சமுதாயஞ் சார் சீர்திருத்த பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான குற்றங்களுடன் தொடர்புபட்டவர்களுக்கு இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்களால் விழிப்புணர்வு கருத்துக்கள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் உளவளத்துறை தொடர்பான கருத்துரைகளும் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## இயற்கை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வவு.புகையிரதக்கடவை காப்பாளர் சங்கம் உதவி

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட புகையிரத கடவை காப்பாளர் சங்கம் இயற்கை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக அனைத்து ஊழியர்களினதும் ஒருநாள் கொடுப்பனவான 250 ரூபாவை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க முன்வந்துள்ளதாக வவுனியா மாவட்ட புகையிரத கடவை காப்பாளர் சங்கத்தின் தலைவர் ஏஸ்.கே. றொகான் ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், புகையிரத கடவை ஊழியர்களுக்கு பொலிஸ் திணைக்களம் ஊடாகவே சம்பளம் வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் வெள்ள அனர்த்தம் காரணமாக அசாதாரண சூழ்நிலைக்குள் சிக்கித் தவிக்கும் எம் உறவுகளுக்கு உதவும் முகமாக வவுனியா மாவட்டத்தில் பணியாற்றும் 75 ஊழியர்களின் விருப்பத்திற்கு அமைவாக தலைவர்,செயலாளர் ஆகியோரின் தீர்மானத்திற்கு இணங்க ஒருநாள் கொடுப்பனவை அனர்த்த நிவாரண முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறு வவுனியா பொலிஸ் அத்தியட்சகரை கடிதம்மூலம் கோரியிருந்தார். பொலிஸ் அத்தியட்கர் இச்செயற்பாட்டுக்கு பாராட்டு தெரிவித்ததுடன் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு பணத்தை நிவாரணத்திற்கு அனுப்பி வைப்பதாக உறுதியளித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். (2-250)

## உணவுக் களஞ்சியம் அமைக்க நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் நிதியமைச்சின் 50 மில்லியன் ரூபாய் நிதிச் செலவில் உணவுக் களஞ்சியம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், கிளிநொச்சி மாவட்டம் ஒரு விவசாய மாவட்டமாக காணப்படுகின்றது. மாவட்ட விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படுகின்ற நெல்லைக் களஞ்சியப்படுத்த, போதிய வசதிகள் இல்லாமையால், விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்வது பிரச்சினையாகவுள்ளது.

இதனை கவனத்தில் எடுத்த நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, தனது அமைச்சின் ஊடாக நிதி ஒதுக்கியுள்ளார். இதன் மூலம் மாவட்டத்தின் உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைக்கக் கூடிய வகையில் களஞ்சியம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். நிதி அமைச்சின் ஊடாக கிளிநொச்சி மாவட்டம் உள்ளிட்ட நாட்டிலுள்ள 3 மாவட்டங்களில் தலா 50 மில்லியன் ரூபாய் செலவில் இவ்வாறு உணவுக் களஞ்சியம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# ராணுவத்தின் பயன்பாட்டில் இருந்த காணி நிர்வாகத்திடம் ஒப்படைப்பு

(மல்லாவி)

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்த விவசாயக் கல்லூரி காணி விடுவிக்கப்பட்டு உரிய நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பரந்தன் ஏ-9 வீதியில் அமைந்துள்ள விவசாயத்திணைக்களத்தின் விவசாயக் கல்லூரியின் காணி கடந்த 2010ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்து வந்த நிலையில் குறித்த காணியை விடுவித்து கல்லூரியின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்தித் தருமாறு விவசாயக்கல்லூரியின் அதிபர் கோரிக்கை விடுத்தார். இதனையடுத்து கல்லூரி வளாகத்தின் ஒரு பகுதி இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டு கடந்த வாரம் கல்லூரி உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை குறித்த கல்லூரிக்கு சொந்தமான குறிப்பிட்ட மேலும் ஒரு பகுதி இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்து வந்த நிலையில் கல்லூரி வளாகத்தில் இருந்த இராணுவத்தினர் முழுமையாக வெளியேறி கல்லூரி வளாகத்தினை அதன் நிர்வாகத்திடம் இராணுவத்தினர் கையளித்துள்ளனர்.

இதேவேளை விடுவிக்கப்பட்ட விவசாயக்கல்லூரி வளாகத்தில் கல்லூரி மாணவர்களால் நேற்று முன்தினம் சிரமதானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அண்மையில் இராணுவத்தினரிடமிருந்து விடுவிக்கப்பட்ட விவசாயக்கல்லூரி வளாகத்தில் கல்லூரி மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் இணைந்து நேற்றுமுன்தினம் காலை முதல் மதியம் வரையும் சிரமதானப்பணிகள் மூலம் துப்புரவு செய்துள்ளனர். (2-15)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் கொடிவாரம் நேற்று ஆரம்பம்



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் இயங்கும் இளைஞர் கழகங்கள் தமக்கு நிதி சேகரிப்பதற்காக நடைமுறைப்படுத்தும் இளைஞர் கொடிவாரம் நேற்றைய தினம் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் ஒரு அங்கமாக முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்தில் முதலாவது கொடியினை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனுக்கு அணிவித்து கொடிவாரம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்தக் கொடி வாரமானது எதிர்வரும் 30ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாகவும் பொதுமக்கள் இந்நிகழ்விற்கு இளைஞர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர். (2-281)

# ஒப்பந்த அடிப்படையிலான தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்தல்

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சினால் வடக்கு, கிழக்கில் உள்நாட்டில் இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த மற்றும் இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்களுக்காக 2016ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்புத்திட்டத்தின் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள வீடுகளை தொழில்நுட்ப மேற்பார்வை செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

தேசிய பயிலுனர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ் அல்லது கல்வி உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் சான்றிதழ் (சிவில்) தகைமையுடன் ஆகக்குறைந்தது இரண்டு வருட முன் அனுபவமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது சுய விபரக்கோவையினை(தங்கள் தொலைபேசி இலக்கத்துடன்) 30.05.2016 ஆம் திகதிக்கு முன்னர் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலகம், முல்லைத்தீவு எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். நேர்முகப்பரீட்சைக்கான திகதி தபால் மூலம் அறியத்தரப்படும் என அவர் அறிவித்துள்ளார். (2)

# குருபூசைத் தினத்தையொட்டி சைவநெறிப் போட்டி

திருஞானசம்பந்த பெருமானின் குருபூசை தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.பி நடராஜின் அனுசரணையில் வவுனியா மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு சைவநெறி அறிவுப் போட்டி ஒன்றை எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் இந்து அறநெறிப் பாடசாலைப் பேரவையானது நடத்தவுள்ளது. எனவே இப்போட்டியில் கலந்து பயன்பெறுமாறு அறநெறிப் பாடசாலை மாணவர்களிடம் பேரவைச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (2)




# மதகு சேதம்; பயணிப்போர் அச்சம்



கிளிநொச்சி ஸ்ரீ மனோன்மணி அம்மன் வீதியில் அமைக்கப்பட்டுள்ள மதகு நடுவில் சேதம் அடைந்து காணப்படுவதாக அவ்வழியாகப் பயணிப்போர் அச்சத்துடன் செல்வதாக தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இவ் வீதி வழியாக கிளி/கனகபுரம் மகாவித்தியாலய மாணவர்கள், பொதுமக்கள் அறிவியல் நகரில் அமையப் பெற்றுள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு நாளாந்தம் சென்று திரும்பும் பணியாளர்கள், வாகனங்கள், நோயாளர் காவு வண்டி என்பன பயணித்து வருகின்றன. குறித்த பகுதி கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்டதாகும்.

இவ்விடத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு உடனடியாக சீர்செய்ய வேண்டுமென கோரிக்கை விடப்படுகின்றது. (2-271)

# இவ்வாண்டு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கில்லை

## சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

(குருமன்காடு)

2016 இல் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை தனிப்பட்ட ரீதியில் எனக்கில்லை என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான த. சித்தார்த்தன் தெரிவித்தார்.

புளொட் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு வவுனியாவில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

தமிழ் தேசியக்கூட்டமைப்புக்குள் உள்ள கட்சிகள் எல்லாம் தங்களுடைய கட்சிகளை பலப்படுத்தும் செயற்பாட்டை செய்து வருகின்ற போது அது தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஒட்டுமொத்தமாக பலப்படுத்துமா என்ற பயம் மக்கள் மத்தியிலே இருக்கின்றது. இருந்த போதிலும் மற்றைய கட்சிகள் தங்களுடைய கட்சியை பலப்படுத்தும் போது எங்களுக்கும் அந்த ஒரு தேவை இருக்கின்றது.

இந்த நேரத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உடைந்து விடாமல் நாங்கள் ஒவ்வொருவரும் கவனமாக பார்த்துக்கொள்ளவேண்டும். சில கட்சிகள் தங்களுடைய கட்சிகளை பலப்படுத்துவது மாத்திரமல்ல மற்றைய கட்சிகளை பலவீனப்படுத்தும் செயற்பாடுகளை செய்து வருகின்றமை தமிழ் மக்களின் ஒட்டுமொத்த நலன்களுக்கும் பலன் அளிக்கமுடியாது என்ற நிலைப்பாட்டையும் எங்கள் கட்சி எடுத்துள்ளது.

கூட்டமைப்பில் உள்ள நான்கு கட்சிகளும் ஒற்றுமையாக இல்லாவிட்டால் அரச தரப்பினர் தீர்வில் இருந்து மிக இலகுவாக தப்பிக் கொள்வதற்கும் தமிழர்கள் அதனூடாக பாதிப்படைவதற்குமான நிலைமையை உருவாக்கக்கூடாது. இந்த அரசோ அல்லது தெற்கு அரசியல் கட்சிகளோ தீர்வை தருவதற்கு தயாராக இருக்கின்றனர் என நான் நம்பவில்லை. அவர்கள் எமது பிரச்சினையில் பெரிய அக்கறையை காட்டுவதாகவும் நான் நம்பவில்லை. எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ள வேறுபாடுகளை அவர்கள் சாட்டாக பயன்படுத்த விடக்கூடாது.

அடிப்படை பிரச்சினைகளாக பார்க்கக்கூடிய இராணுவ ஆக்கிரமிப்புகள், பொதுமக்களின் காணிகளை மீள ஒப்படைத்தல், காணாமற்போனோர் விடயங்கள், சிறைச்சாலைகளில் உள்ள அரசியல் கைதிகள் 130 பேர் மாத்திரமே இருந்தாலும் கூட அவர்களில் ஒருவர் கூட அங்கு இருக்கக்கூடாது என்கின்ற விடயங்கள் மற்றும் பல ஆயிரம் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உட்பட முன்னாள் போராளிகள் எவ்வாறு தமது பொருளாதாரத்தை கொண்டு செல்வது என்று தெரியாது இருக்கின்ற நிலை காணப்படுகின்றது.


எனவேதான் நாம் எமது மாநாட்டிற்கு புலம்பெயர் தேசத்தில் உள்ள அமைப்புகளை வரவழைத்து இந் நிலைப்பாடுகளை எடுத்துக்கூறியிருக்கின்றோம்.

அத்துடன் அரசியல் தீர்வு என்ற விடயத்திலும் ஒன்றுபட்ட வடக்கு கிழக்கில் சமஷ்டி தீர்வு என்ற எங்களை நாங்களே மத்திய அரசின் தலையீடு இன்றி பார்க்கக்கூடிய வகையில் அதிகாரபகிர்வு வரவேணடும். அதற்கான அழுத்தத்தையும் புலம்பெயர் தமிழர்கள் அந்தந்த நாடுகளில் உள்ள அரசியல் தலைவர்களுக்கு கொடுப்பதனூடாக அத்தலைவர்கள் இந்த நாட்டின் அரசியல் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுத்து சாதகமான நிலையை உருவாக்க வேண்டும்.

இந்நிலையில் 2016 ஆம் ஆண்டு தீர்வு கிடைக்கும் என்று நாங்கள் சார்ந்திருக்கின்ற கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சொல்லியிருக்கின்றார். அவர் மத்தியில் இரண்டு கட்சிகளும் ஒன்றாக இணைந்துள்ளது. சர்வதேச நிலைமை சாதகமாக உள்ளது. எனவே தீர்வு கிடைக்கும் என கூறியிருக்கலாம். ஆனால் நான் ஒருபோதும் அவ்வாறு கூறவில்லை. எனினும் நாங்களும் அவர் கூறும் கூற்றை அல்லது அவர் எடுக்கும் அந்த முயற்சியை குழப்பக்கூடாது என்பதில் மிக அவதானமாக இருக்கின்றோம். ஆனால் தனிப்பட்ட முறையில் அதில் எனக்கு நம்பிக்கை இல்லை என தெரிவித்தார். (2-250)







தமழநாடு தருவையாறு ஐயா கலவநிலையம , வவுனியா கோவலகுளம அருளமகு ஸ்ரீ அகலாணடேஸவரி சமேத அகலாணடேஸவரர தருககோவல மறறும வவுனியா தேசிய கலவயியற கலலூரி ஆகயவறறின அனுசரணையோடு 14 ஆவது அனைததுலக தமழ உரைநடை ஆயவு மாநாடடு கருததரஙகு கடநத 22ஆம தகதி ஞாயறறுககழமை காலை 9 மணியலருநது வவுனியா பூநதோடடததல அமைநதுளள வவுனியா தேசிய கலவயியற கலலூரியல அனைததுலக உரைநடைத தமழ மாநாடடின இலஙகைககான இயககுநர பேராசிரியர முனைவர கனகசபாபதி நாகேஸவரன தலைமையல இடமபெறறது.மேறபடி நகழவல பரதம வருநதனராக யாழ.மாவடட உயரநதமனற நதயரசர மாணககவாசகர இளஞசெழியன,சறபபுவருநதனராக இநதய துணைததூதர ஏ.நடராஜன கலநது கொணடனர. (படஙகள:-பனககனகுளம செயதயாளர)

# UNIVERSITY OF JAFFNA, SRILANKA
# VACANCIES

Applications are invited by me up to 30th June 2016 from suitably qualified persons for the following posts.

**1. POST OF WORKS ENGINEER [CIVIL] GRADE III (Vavuniya Campus)**

**QUALIFICATIONS:**

(A) Should possess a B.Sc Engineering Degree specializing in Civil Engineering from a recognized University / Higher Educational Institution.

**OR**

(B) Should possess a National Diploma in Technology specializing in Civil Engineering or equivalent, with at least seven (07) years of experience in Civil Engineering works in a recognized establishment.

**NOTE**: - The in-plant training period shall not be counted for the period of experience.

**Salary Scale**: U- EX1 (II) -Rs. 26,020-3X585-27,775(EB) 28,420;12X645-36,160/- p.m.

**Selection** : By structured interview.

**2. ASSISTANT REGISTRAR (LEGAL & DOCUMENTATION) (University of Jaffna)**

**Qualifications:**

Should possess a Bachelor of Law Degree from a recognized University/HEI or Attorney-at-Law with not less than three (03) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/Corporation or Reputed Private Sector Organization or official bar.

**Salary Scale** : U-EX 1(II) - Rs. 26,020 – 3x585 – 27,775 (EB) 28,420; 12 x645– 36,160/- p.m.
**Selection** : By Structured Interview.

**3. UNIVERSITY MEDICAL OFFICER (University of Jaffna/ Kilinochchi Premises / Vavuniya Campus)**

The University is looking for a highly motivated individual. Training in counseling will be an added qualification.

**Qualifications:**

Medical Degree of a recognized University with at least 3 years experience as Medical Practitioner.

**NOTE**: One year period of service as Intern Medical Officer will be considered for the required period of experience.

Granting of study leave to the selected candidates to obtain postgraduate qualifications or experience according to the requirements of the University may be considered, subject to exigencies of service.

**Salary Scale** : U- MO 1 (II) - Rs. 28,360 – 10 x 645 ; 1 x 790 – 35,600/- p.m.
**Selection** : By Interview.

**4. CURATOR (LANDSCAPE) GRADE III (University of Jaffna/ Vavuniya Campus)**

**Qualifications:**

1. Should possess a four year special Degree in Agriculture or Agricultural Technology & Management and majoring in Crop Science/Horticulture/Floriculture/Forestry from a recognized University /HEI with not less than one (01) year of experience in landscaping in a State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**OR**

2. Should possess a four year special Degree in Botany of a recognized University/ HEI with not less than two (02) years of experience in Landscaping in State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**Salary Scale**: U-EX1 (II) -Rs. 26,020-3X585-27,775(EB) 28,420;12X645 -36,160/- p.m.
**Selection** : By Structured Interview.

**5. POST OF SUB WARDEN (FULL TIME) – FEMALE (University of Jaffna)**

**Qualifications :**

A graduate of a recognized University. Preference will be given to those with experience in administration and management of hostel.

**Salary Scale** : U-MN 3 (II) - Rs.22,240-18x320-28,000 p.m
**Selection** : By Interview

**SERVICE CONDITION**

Full-time Sub-Wardens shall reside in the halls of residence to which they are appointed. A sum to be stipulated by the Higher Educational Institution will be recovered from their salaries to meet the cost of Board.

**6. SUPERVISOR (CIVIL), GRADE III (University of Jaffna)**

**Qualifications:**

a) National Certificate in Technology or equivalent qualifications with 3 years experience may be obtained while following the NCT course;

**OR**

b) G.C.E(Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with at least 5 years' experience as a Supervisor in the relevant field in a Government, Local Government or State Corporation or a recognized Engineering Establishment.

**Salary Scale**: U-MT1 (IIIA) - Rs.16,535 - 7x155; 10x185 - 19,470 p.m
**Selection** : By Interview

**7. SUPERVISOR (LANDSCAPE) GRADE III (Vavuniya Campus)**

**Qualifications:**

i) G.C.E (Ordinary Level) Examination in six subjects at not more than two sittings.

**AND**

ii) Successful completion of one year's practical training course in Agriculture conducted by the Department of Agriculture or equivalent.

**Salary Scale**: U-MT1 (IIIA) - Rs.16,535 - 7x155; 10x185 - 19,470 p.m
**Selection** : By Interview

**8. PUBLIC HEALTH INSPECTOR GRADE III (University of Jaffna)**

**Qualifications:**

Should have passed the Public Health Inspectors examination conducted by the Department of Health.

**Salary Scale** : U-MT 1 (III A) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.
**Selection** : By Interview

**9. PUBLIC HEALTH NURSE (University of Jaffna)**

**Qualifications:**

a) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council and 12 years experience as a Nurse of which 8 years should be either in Student Health Service or Public Health Service in a recognized Institution.

**OR**

b) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council and 10 years experience as a Nurse and possessing post primary qualifications in any aspects of nursing.

**Salary Scale** : U-MT 1(II) - Rs. 18,360 – 7x185; 9x245 – 21,860 p.m.
**Selection** : By Aptitude Test and Interview

**10. NURSING OFFICER GRADE II (University of Jaffna/ Vavuniya Campus)**

**Qualifications:**

(i) GCE (Ordinary Level) Examination in Six subjects at not more than two sitting with credit passes in three subjects.

**AND**

(ii) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council.

**Salary Scale** : U-MT 1(IIIA) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.
**Selection** : By Aptitude Test and Interview

**11. ELECTRICIAN, GRADE II ( University of Jaffna)**

**Qualifications:**

i. Pass in the 8th standard.
ii. Should be conversant with
a) Detecting faults, repairs and assembly of materials, transformers and all types of machinery and appliances, cables, wires and their ratings, measuring instrument and their uses various types of wiring, joining, testing meters and small transformers ;
b) Reading and understanding drawings and diagrams. Reading scales and record fractional dimensions;
c) Care and the use of the tools in the trade.
iii. Not less than 2 years' experience as an electrician in a government department, State Corporation or in a recognized establishment.

**Salary Scale** :U-PL 3 (III) Rs.15, 650 – 16x140 -17,890.p.m
**Selection** : By trade test and interview

**12. MASON GRADE II (Vavuniya Campus)**

**Qualifications:**

i. Pass in the 8th standard
ii. Should be conversant with –
a. Brick work and the different types of courses used in the construction of wall footings, wall arches, taper pillars, chimneys, sewer chambers etc.;
b. All types of plaster, mixing and laying of reinforced concerted;
c. Reading plans and setting out foundations for simple constructions;
d. Colour washing including use of emulsion paint.
iii. Not less than 2 years' experience in masonary

**Salary Scale** :U-PL 3 (III) Rs.15, 650 – 16x140 -17,890.p.m
**Selection** : By trade test and interview

**13. PLUMBER, GRADE II (Vavuniya Campus)**

**Qualifications:**

i. Pass in the 8th standard.
ii. Should be conversant with
a) Reading scales up to 1/64"and maintenance and current use of tools;
b) Laying C.I and G.I and lead pipes including various joints and their testing;
c) Repair of ball-valves, cisterns etc., and reading and understanding of simple drawings.
iii. Not less than 2 years' experience in plumbing.

**Salary Scale** :U-PL 3 (III) Rs.15, 650 – 16x140 -17,890.p.m
**Selection** : By trade test and interview

**AGE LIMIT : Not more than 45 years for the above all posts.**
**Note: *Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statutory bodies.***

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Application should be made on the forms available in the office of the Senior Assistant Registrar/ Establishments (Non–Academic) of this University on payment of Rs.100/- for each application form at the Shroff's counter of this University or the forms available in the University website (www.jfn.ac.lk) annex with the Money Order/ Postal Order to the value of Rs.100/-. Those who wish to obtain the forms by post should send a Money Order/ Postal Order to the value of Rs.100/- in the name of the Bursar, University of Jaffna, together with a self-addressed Rs.10.00 stamped envelope of 23x10cm. in size. Only Applications sent on the specified form will be accepted.
**(Please attach copies of relevant documents)**

Applicants from Government Departments/ State Corporations/ Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/ Boards.

Applications received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

**REGISTRAR**
**24/05/2016**

# மாணவரின் புத்தாக்கச் சிந்தனை மேம்பாட்டில் ஆசிரியரின் வகிபங்கு



தர்மலிங்கம் சிறீகரன்
ஆசிரியர்,
யா/ ஆவரங்கல் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

மாணவரின் புத்தாக்கத் திறன்களை இனங்கண்டு வளர்ப்பதற்கான இடமாகவும் புதிய கண்டுபிடிப்பு ஆற்றல் மேம்பாட்டிற்கான களமாகவும் பாடசாலைகள் காணப்படுவதனால் ஆசிரியரின் பொருத்தமான வழிகாட்டலும் தூண்டலும் மாணவரின் புத்தாக்கச் சிந்தனை வளர்ச்சிக்குப் பெருமளவிற்கு உதவ முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இன்றைய கால கட்டத்தில் புத்தாக்குநர்களை இனங்கண்டு அவர்களுக்கு கல்வியறிவூட்டி புத்தாக்கம், புதிய கண்டுபிடிப்பு, நவீனத்துவம் என்பன தொடர்பாக மாணவர்களுக்கு அறிவைப் பெற்றுக்




கல்வித் தரிசனம்

கொடுக்கும் முன்னோடி மாற்றாளராகவும் புத்தாக்கம் மிக்க கருத்துக்களை செயலுருவாக்கம் செய்யும் வகையில் அதற்கான வளங்கள், வசதிகள், வாய்ப்புகள் மற்றும் வழிகாட்ட ல்களை வழங்கும் செயற்பாட்டில் முன்னோடியாகவும் புத்தாக்கம் மற்றும் புதிய கண்டுபிடிப்பு அனுபவங்களை வழங்கி புத்தாக்கப் படைப்பின் வழிகாட்டியாகவும் ஆசிரியர் விளங்க வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் மனித வாழ்க்கையுடன் தொழில்நுட்பம் பின்னிப் பிணைந்திருப்பதோடு இன்றியமையாத ஒரு கருவியாகவும் பயன்படுத்தப் பட்டு வருகின்றது. தற்போது நுட்பமான கருவிகள் உபகரணங்களுக்கு அதிக செலவீனம் ஏற்படுவதனால் மனித உழைப்பையும் நேரத்தையும் மீத ப்படுத்தக்கூடிய கருவிகள் மற்றும் உபகரணங்களை புத்தாக்கம் செய்து தயாரிப்பதற்கு பாடசாலைப் புத்தாக்குநர்களைத் தூண்ட வேண்டும். மாணவர் தரம் வாழும் பிரதேசத்தில் இலகுவாகக் கிடைக்கின்ற வளங்கள், வசதிகள், வாய்ப்புக்களைப் பயன்படுத்தி சூழல் நேயமான சக்தியை மீதப்படுத்தக்கூடிய விதத்தில் இயங்கக்கூடிய இயந்திரங்கள், கருவிகள் , உபகரணங்கள் மற்றும் கட்டமைப்புக்களை புத்தாக்கம் செய்வதன் மூலம் நாளாந்த மனித வாழ்க்கையை இலகுபடுத்தக்கூடியதாக இருப்பதோடு பல்வேறு தொழில் துறைகளில் முக்கியமாக கைத்தொழில் துறைகளில் அதிகரித்த வருமானத்தை ஈட்டக்கூடியதாக இருக்கும். மேலும் இத்தகைய புத்தாக்கம்சார் முயற்சிகள் நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கான சிறந்த சேவையாகவும் அமையும்.

சோளப் பொத்திகளிலிருந்து சோள மணிகளை சேதங்கள் ஏற்படாத வகையில் பிரித்தெடுக்கும் இயந்திரத்தை இலங்கை மாணவன் ஒருவன் புத்தாக்கம் செய்ததன் மூலம் ஏற்பட்ட விழிப்புணர்வினைத் தொடர்ந்து இன்று பல பாடசாலை மாணவர்களால் கணிசமான அளவிற்கு புத்தாக்கம் சார் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. புத்தாக்குநர் என்கின்ற விசேட மனிதப் பிரிவினருள் பல மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். எனினும் பல மாணவர்கள் இன்னும் இலைமறை காயாக இருந்து வருகின்றனர். புத்தாக்கச் சிந்தனைகளைக் கொண்டவராக இருந்தும் போதிய ஊக்குவித்தல் இன்மையால் அம்மாணவனது சிந்தனைகள மழுங்கடிக்கப்படுகின்றன. இத்தகைய புத்தாக்கத் திறனும் புதிய கண்டுபிடிப்பு ஆற்றலும் திறனும் புதிய கண்டுபிடிப்பு ஆற்றலும் கொண்ட விசேட மனிதப் பிரிவினரான புத்தாக்குநர்களை இனங்காணும் நிகழ்ச்சித் திட்டமொன்றை முன்னெடுத்து



அவர்களை இனங்கண்டு அவர்களுக்கான அறிவுசார் கல்வியை ஆய்வு கூட வசதிகளை, வளங்களை வழங்கி அவர்களை ஊக்குவித்து, உற்சாகப்படுத்தி அவர்களது கண்டுபிடிப்புக்களுக்கு ஆக்க உரிமையைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சியாண்மைக்கு வழிப்படுத்துவது புத்தாக்க சிந்தனை கொண்ட ஒவ்வொரு ஆசிரியர்களதும் கடமையாகும்.

தேசத்தின் புத்தாக்கங்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களுக்கான ஆற்றலை முன்னெடுத்துச் செல்பவராகவும் புத்தாக்கங்களைப் படைப்பதற்கு மாணவர்களைன் கவனயீர்ப்புச் செய்பவராகவும் மாணவர்கள் தமது சுய ஆற்றல்கள் மீது ஏற்படுத்திக் கொள்ளும் நம்பிக்கைகளின் அடிப்படையில் பயனுறுதியுள்ளவாறு புத்தாக்கங்களின் பால் வழிப்படுத்தக்கூடியவராகவும் ஆசிரியர் விளங்குவதோடு பாடசாலைகளில் காணப்படும் தொழில்நுட்ப பாட அலகுகளையும் தொழில்நுட்பவியல் ஆய்வு கூடங்களையும் கண்டுபிடிப்பு நிலையங்களாக மாறக் கூடிய வகையிலும் ஆசிரியரின் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

புதிய புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளாத சமூகங்கள் உலகில் வெற்றி பெறுவதில்லை. புத்தாக்கம் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்வதற்கு புத்தாக்கச் சிந்தனையும் இருக்கின்ற அறிவு முறையைக் கேள்விக்குட்படுத்தும் மனிதர்களாலுமே சாத்தியப்படக் கூடியதாக இருப்பதனால் புதிய தொழில்நுட்ப முறைகளைக் கண்டறிவதற்கும் அதற்கான திறன்களை விருத்தி செய்வதற்கும் மாணவரை ஆசிரியர் வழிப்படுத்த வேண்டும். இதற்கென புதிய முறைகள், பிரதியீட்டுப் பதார்த்தங்கள தொடர்பான ஆய்வினூடாக பெறப்படும் பெறுபேறுகளினூடாக சிறந்த புத்தாக்க சிந்தனை கொண்ட முயற்சியாளனாக மாணவனை மாற்றுவதற்கு ஆசிரியரால் உதவ முடியும். மரபு ரீதியான தொழில்நுட்ப முறைகளினூடாக புதிய தொழில்நுட்ப முறைகள் தொடர்பில் மாணவரின் தேர்ச்சிகள், திறன்களை விருத்தி செய்வதோடு மரபு ரீதியான தொழில்நுட்ப முறைகளிலிருந்து அதனிலும் மேம்பட்ட புதிய முறைகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு மாணவர்களுக்கு ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்.

புத்தாக்கம்சார் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களை வகுப்பறையிலிருந்தே முன்னெடுப்பதோடு ஒவ்வொரு பாடத்துறையிலும் அத்துறைசார் புத்தாக்கங்களை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை ஆசிரியர் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இது மட்டுமின்றி ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஆர்வமுள்ள மாணவர்களை ஒன்றிணைத்து புத்தாக்குநர் கழகங்களை அமைத்து பாடசாலை மட்டப் புத்தாக்கப் போட்டிகளை நடத்த வேண்டும். இதுதவிர இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழுவி னால் மாகாண தேசிய மட்டப்புத்தாக்கப் போட்டிகளில் பங்கேற்பதற்கு மாணவரை வழிப்படுத்துவதோடு அவ்வாணைக்குழுவால் ஒழுங்கு செய்யப்படும் புத்தாக்கம் சார் செயலமர்வுகளில் பங்குபற்றுவதற்கு வழியேற்படுத்திக் கொடுப்பதும் வழிகாட்டி என்ற வகையில் ஆசிரியரது கடமையாகும். மேலும் புத்தாக்கம் சார் பயிற்சி பட்டறைகளை ஒழுங்கு செய்வதும் தொழில் சார் நிபுணர்களுடன் கலந்துரையாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதும் ஆசிரியரின் கடமையாகும்.

மாணவர்களின் புத்தாக்கச் செயற்பாடுகள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருப்பதனால் அது குறித்த அதிக கரிசனையுடன் ஆசிரியர் செயற்படுவது பொருளாதார மேம்பாட்டிற்கான ஆசிரியரின் சிறந்த சேவையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவரின் புத்தாக்க முயற்சிகளும் புதிய கண்டுபிடிப்புகளும் இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு பெருமளவிற்கு மென்மெலும் துணை புரிவதனால் ஈற்றில் இப்புத்தாக்கங்கள் மூலம் நம் நாட்டுப் பொருளாதாரம் மென்மேலும் வலுவடையலாம். வர்த்தகமயமாக்கப்பட்ட பெறுமதிமிக்க ஓர் புத்தாக்கம் நம் நாட்டு அபிவிருத்திக்கு முக்கிய பங்களிப்பை வழங்குவது மட்டுமன்றி இலங்கையரின் முன்னேற்றம் திறன் மற்றும் புத்தாக்கச் சிந்தனை வளர்ச்சி என்பவற்றை வெளிக் கொணர்கின்ற கௌரவமிக்க செயற்பாடாக அமைகின்றது. அவ் உன்னத பணிக்காக மாணவரைத் தூண்ட வேண்டும். மாணவர்களின் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்களும் புத்தாக்கங்களும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கை கொடுப்பதனால் மாணவர்களது புத்தாக்கங்களை வர்த்தக மயமாக்குவதன்மூலம் அவர்களது புத்தாக்கங்களுக்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தை வாய்ப்புக்களையும் பெற்றுக்கொள்ளமுடியும். மாணவர்களது புத்தாக்கங்களுக்கான அபிவிருத்தி, தொழில்நுட்ப உதவி மற்றும் வர்த்தக மயமாக்கல் செயற்பாடுகளை இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு மேற்கொண்டு வருவதனால் அவ்வாணைக்குழுவுடன் தொடர்புகளைப் பேணி மாணவரின் புத்தாக்க அபிவிருத்திக்கான அர்ப்பணிப்புமிக்க பங்களிப்பை ஆசிரியரால் வழங்கமுடியும்.

ஆகவே இன்றைய இளம் சிறார்களிடையே மிகுதியாகக் காணப்படுகின்ற புத்தாக்க சிந்தனையை நவீன உலகின் சவால்களை எதிர் கொண்டு வெற்றி கொள்ளத்தக்க வகையில் மாணவனது புத்தாக்கத் திறன்களை வெளிக்கொணர்ந்து அதனை வளர்த்தெடுப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குபவராக, புதிய கண்டு பிடிப்புக்களை ஊக்குவிப்பராக ஆசிரியர் செயற்பட வேண்டும்.

எனவே மாணவரிடத்தில் புத்தாக்கத் திறன் மற்றும் புதிய கண்டுபிடிப்பு ஆற்றல்களை கலைத்திட்டச் செயற்பாடுகளின் வழியாக வளர்த்தெடுக்கும் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக மென்மேலும் சிந்திப்பதும் புத்தாக்க சிந்தனை வளர்ச்சிக்கான பாட உள்ளடக்கம் பற்றி தீர்மானிப்பதும் புத்தாக்கத் திறனும் புதிய கண்டுபிடிப்பு ஆற்றலும் கொண்ட மாணவர் சமுதாயத்தை உருவாக்கி பொருளாதார ரீதியில் நம்நாட்டை முன்கொண்டு செல்வதும் ஒட்டுமொத்த கல்விச் சமூகத்தின் பொறுப்பும் கடமையுமாகும்.

# சுகாதார ஸ்தாபனங்கள் மீதான தாக்குதலை ஆவணப்படுத்துமாறு ஐ.நாவிடம் கோரிக்கை

(ஜெனீவா)

**19 நாடுகளில் மருத்துவத்துறை தொழிலாளர்கள் மற்றும் சுகாதார நிலையங்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்கள் தொடர்பில், ஒரு புதிய அறிக்கை ஆவணப்படுத்த ஐ.நாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

மோதல் இடம்பெறும் இடங்களில் சுகாதாரத்தை பாதுகாக்கும் கூட்டணி (Safeguarding Health in Conflict Coalition) என்ற அமைப்பு, அண்மைக் காலத்தில் முறையற்ற வகையில் நடத்தப்பட்ட தாக்குதல்களில், சுகாதாரப் பணியாளர்கள், நோயாளிகள் கொல்லப்படுகிறார்கள், சுகாதாரக் கட்டமைப்பு அழிக்கப்பட்டுள்ளது.

எண்ணிலடங்கா பொது மக்களுக்கு இன்றியமையாத மருத்துவ வசதிகள் மறுக்கப்பட்டுள்ளன என்று கூறியது.

30 இற்கும் மேற்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இணைந்த இந்தக் குழு முன்வைத்துள்ள பரிந்துரைகளில், பல்வேறு நாடுகளின் அரசுகள் இந்த செயல்களை தடுப்பதில் தோல்வியடையும் போது, தாக்குதல்களை ஐ.நா. முறையாக ஆவணப்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு பேரவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இந்த செயல்களை விசாரிக்க பரிந்துரைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. (இ-10)




# ரஷ்ய விமானப்படைத்தளம் மீது ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல்



(டமாஸ்கஸ்)

சிரியாவில் ரஷ்ய விமானப்படை தளம் மீது ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ஹெலிகொப்டர்கள், லொறிகள் தீயில் எரிந்து நாசமாயின.

சிரியா மற்றும் ஈராக்கில் 2011 ஆம் ஆண்டில் பெரும்பாலான பகுதிகளை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றினர். அந்தப் பகுதிகளை தாக்குதல்கள் மூலம் சிரியா, ஈராக் இராணுவங்கள் மீண்டும் கைப்பற்றி வருகின்றன.

சிரியாவில் பல்மைரா, ஹோம்ஸ் நகரங்கள் ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்து இராணுவம் கைப்பற்றியுள்ளது. இந்த நகரங்களுக்கு இடையில் டி-4 இராணுவ தளம் உள்ளது. தற்போது இது ரஷ்யாவின் வசம் உள்ளது. அங்கு ரஷ்ய இராணுவம் முகாமிட்டுள்ளது.

நேற்று முன்தினம் இந்தத்தளம் மீது ஐ.எஸ். தீவிரவாதிகள் அதிரடி தாக்குதல் நடத்தினார்கள். குண்டுகள் மற்றும் ரொக்கெட்டுகள் வீசப்பட்டன. அதில் ரஷ்யாவுக்கு சொந்தமான 4 எம்.ஐ.-24 ரக ஹெலிகொப்டர்கள் தீயில் எரிந்து நாசமாகின.

மேலும் 20 லொறிகளும் தீப்பிடித்து எரிந்தன. அவற்றில் இராணுவ தளபாடங்கள், ரொக்கெட்டுகள் மற்றும் வெடிகுண்டுகள் நிரப்பி வைக்கப்பட்டிருந்தன.

தீவிரவாதிகள் இத்தாக்குதல்களில் சிரியாவின் மிக்-25 ரக போர் விமானமும் பலத்த சேதம் அடைந்தது. இந்த தகவலை அமெரிக்க உளவுத்துறை அதிகாரி ஸ்பார்ட்போரிஸ் தெரிவித்துள்ளார். ஆனால் இது குறித்து ரஷ்யா எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. (இ-10)

# நீதிமன்றப் பணியாளர்கள் பயணித்த வாகனத்தின் மீது குண்டுத் தாக்குதல்

## 10 பேர் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நேற்று நீதிமன்ற பணியாளர்கள் சென்ற வாகனத்தின் மீது தற்கொலைப் படை தீவிரவாதி நடத்திய மனித வெடிகுண்டு தாக்குதலில் பத்துபேர் உடல் சிதறி பலியாகினர்.


ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள மேல்முறையீட்டு நீதிமன்ற பணியாளர்கள் ஒரு பேருந்தில் நேற்றுக் காலை பணிக்கு சென்று கொண்டிருந்தனர். அப்போது, அந்த பேருந்தை நோக்கி ஒருவன் ஓடி வந்தான்.

தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை அவன் வெடிக்கச் செய்ததில் பேருந்தில் இருந்த பத்து பேர் உடல் சிதறி பலியாகினர்.

இந்த தாக்குதலில் காயமடைந்தவர்கள் அருகாமையில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவத்துக்கு எந்த தீவிரவாத இயக்கமும் இன்னும் பொறுப்பேற்றுக் கொள்ளாத நிலையில் நேற்று தங்களது புதிய தலைவனாக முல்லா ஹைபத்துல்லா அகுந்த்ஸாதாவை தேர்வு செய்துள்ள தலிபான்களின் கைவரிசையாக இச்சம்பவம் பார்க்கப்படுகிறது. (இ-10)

# துண்டுதுண்டாகச் சிதறிய 80 மனித எச்சங்கள் மீட்பு



எகிப்து எயார் எம்.எஸ். 804 விமானம் மத்திய தரைக் கடலில் விழுந்த இடத்திலிருந்து பெறப்பட்ட மனித எச்சங்கள் அந்த விமானத்தில் பாரிய வெடிப்பு இடம்பெற்றுள்ளமையை எடுத்துக் காட்டுவதாகவுள்ளதாக எகிப்திய தடயவியல் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரியொருவரை மேற்கோள்காட்டி ஏ.பி. ஊடகம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த விமானம் கடந்த 19 ஆம் திகதி 66 பேருடன் மத்தியதரைக் கடலில் விழுந்ததையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது இதுவரை ஒரு கரம் அல்லது ஒரு கால் என்ற ரீதியில் சுமார் 80 உடல் பாகங்கள் துண்டு துண்டுகளாக சிதறிய நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது முழுமையாக எந்த உடலும் மீட்கப்படாத நிலையில் அவ்வாறு உடல்கள் சிதறியமைக்கு விமானத்தில் இடம்பெற்ற பாரிய வெடிப்பே காரணமாக இருக்கலாம் என நம்பப்படுவதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.


எனினும் மேற்படி தகவலுக்கு அந்நாட்டு நீதி அமைச்சின் தடயவியல் திணைக்களத் தலைவர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

மேற்படி தகவல் வெளியாவதற்கு முதல் நாள் எகிப்திய அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் வானில் பறக்கும் விமானங்களின் இடத்தைக்கண்டறியும்வேலையை வழங்கும் ஸ்தாபனத்தின் தலைவர், அந்த விமானம் ஏற்கனவே கிரேக்க பாதுகாப்பு அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது போன்று திரும்பலடையவோ அல்லது சடுதியாக செங்குத்தாக விழவோ இல்லை என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அந்த விமானத்தில் பயணித்தவர் களின் உடல் பாகங்களை அடையாளங்காண மரபணு பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப் படுகிறது. (இ-10)

# அமெரிக்காவில் ஸ்கை டைவிங் சுற்றுலா விமானம் மோதி விபத்து

## ஐந்து பேர் பலி



அமெரிக்காவில் ஹவாய் தீவில் கடந்த திங்கட்கிழமை 'ஸ்கை டைவிங் சுற்றுலா விமானம் ('ஸ்கை டைவ் காயை' நிறுவனத்துக்குரியது) ஒன்றில் விமானி, பயிற்சியாளர்கள் 2 பேர், ஒருவர் பின் ஒருவராக குதிக்க இருந்த 2 பேர் என 5 பேர் சென்றனர்.

அந்த விமானம் எதிர்பாராத விதமாக, போர்ட் ஆலன் விமான நிலையத்துக்கு வெளியே மோதி தீப்பிடித்தது. இதில் சம்பவ இடத்திலேயே 4 பேர் உயிரிழந்தனர். ஒருவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனால் அவரது உயிரும் வழியிலேயே பிரிந்துவிட்டதாக, அவரை பரிசோதித்த வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இதுபற்றி 'ஸ்கை டைவ் காயை' நிறுவனத்தின் தலைவர் டேவிட் டிம்கோ கருத்து எதுவும் தெரிவிக்க மறுத்துவிட்டார். விசாரணை நடந்து வரும் நிலையில், இப்போது எதுவும் கூற இயலாது என்று குறிப்பிட்ட அவர், பலியானவரகளுக்கு இரங்கல் தெரிவித்தார்.

விபத்துக்குள்ளான விமானம் செஸ்னா, ஒற்றை இயந்திரம் கொண்டது. விபத்துக்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை. இந்த விபத்து நடந்த சிறிது நேரத்தில் ஓஹு தீவில் இன்னொரு சிறிய விமானம் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் ஒருவர் காயம் அடைந்தார். அவர் மீட்கப்பட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (இ-10)

# உறுப்பினர்களை உயிருடன் நாய்களுக்கு இரையாக்கும் ஐ.எஸ். தீவிரவாதிகள்

ஐ.எஸ். தீவிரவாதிகள் தமது தீவிரவாத குழுவைச் சேர்ந்த கடமை தவறிய கட்டளைத் தளபதிகளை உயிருடன் நாய்களுக்கு இரையாக்கி அவர்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றி வருவது தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது.

தீவிரவாதகுழுவைச்சேர்ந்த தமது தலைமை அதிகாரிகளது கட்டளைகளைப் பூர்த்தி செய்யத் தவறிய கட்டளைத் தளபதிகளை மரத்துடன் கட்டி வைத்து அவர்களை நாய்களால் கடித்துக் குதறச் செய்து மரணதண்டனை நிறைவேற்றப்பட்டு வருவதாக வட ஈராக்கில் கவெர் முன்னரங்கில் போரில் ஈடுபட்ட குர்திஷ் பெஷ்மெர்கா கட்டளைத் தளபதியான ஹஸன் கலா ஹஸன் தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ். தீவிரவாத குழு உறுப்பினர்கள் பலர் அண்மைக் காலமாக அந்த தீவிரவாத குழுவிலிருந்து விலகுவதும் சிரியா மற்றும் ஈராக்கில் தாம் பலம்பெற்று விளங்கும் இடங்களிலிருந்து தீவிரவாத குழு உறுப்பினர்கள் பின்வாங்க நேர்வதும் அதிகரித்து வருகின்ற நிலையிலேயே இந்த மரணதண்டனை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமது குழுவிற்கு பயன் படாதவர்கள் எனக் கருதும் உறுப்பினர்களுக்கு எதிராக இந்த மரணதண்டனை முறைமையை பிரயோகிப்பதன் மூலம் அந்தக் குழுவைச் சேர்ந்த ஏனைய உறுப்பினர்களை அச்சுறுத்துவதே ஐ.எஸ். தீவிரவாதிகளின் நோக்கமாக உள்ளதாக கூறப்படுகிறது. (இ-10)

# கருணாநிதி, ஜெயலலிதா, ஸ்ராலின் சட்டமன்ற உறுப்பினர்களாக பதவியேற்பு



(சென்னை)

15 ஆவது தமிழக சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடர் நேற்று ஆரம்பமானது. முதல் நாள் நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியேற்றனர். 13ஆவது முறையாக கருணாநிதி சட்டமன்ற உறுப்பினராக பதவியேற்றுக் கொண்டார். தற்காலிக சபாநாயகர் செம்மலை முன்னிலையில் கரு ணாநிதி உறுதிமொழி ஏற்றார். சாய்தள வசதி செய்யப்பட்டுள்ளதால் 5 ஆண்டுகளுக்கு பிறகு கருணாநிதி பேரவைக்குள் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. முதல்வர் ஜெயலலிதா, எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ராலின் ஆகியோரும் சட்டமன்ற உறுப்பினர்களாக பதவியேற்றுக் கொண்டனர். இவர்களை தொடர்ந்து பிற சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியேற்றனர். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தற்காலிக சபாநாயகர் செம்மலை பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

முன்னதாக திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் சீனிவேல் மறைவுக்கு சட்டப்பேரவையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

சட்டப் பேரவையில் உறுபபினர்கள் இர ண்டு நிமிடம் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர். (இ-10)

## தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-12

### (25.05.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

| | | | |
|---|---|---|---|
| 1) 1 | 11) 2 | 21) 1 | 31) 3 |
| 2) 2 | 12) 3 | 22) 2 | 32) 3 |
| 3) 3 | 13) 3 | 23) 2 | 33) 1 |
| 4) 2 | 14) 3 | 24) 1 | 34) 1 |
| 5) 2 | 15) 1 | 25) 3 | 35) 1 |
| 6) 1 | 16) 3 | 26) 1 | 36) 2 |
| 7) 3 | 17) 1 | 27) 3 | 37) 2 |
| 8) 2 | 18) 2 | 28) 3 | 38) 1 |
| 9) 2 | 19) 3 | 29) 3 | 39) 2 |
| 10) 1 | 20) 2 | 30) 2 | 40) 1 |

# ஸ்ராலினை அவமதிக்கும் நோக்கம் எனக்கு இல்லை

## முதலமைச்சர் ஜெயலலிதா அறிக்கை

திமுக பொருளாளர் ஸ்ராலினை அவமதிக்கும் நோக்கம் எனக்கு இல்லை என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்

தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா 6ஆவது முறையாக கடந்த திங்கட்கிழமை பதவியேற்றுக் கொண்டார். இந்த விழாவில் தி.மு. க பொருளாளர் ஸராலின் மற்றும் அக்கட்சி எம். எல்.ஏக்கள் பங்கேற்றனர்.

இந்த விழாவில் ஸ்ராலினுக்கு பத்தாவது வரிசையில் இடம் அளிக்கப்பட்டிருந்தது. இதற்கு தி.மு.க தலைவர் கருணாநிதி கண்டனம் தெரிவித்திருந்தார்.

தி.மு.க.வை, ஜெயலலிதா திட்டமிட்டு அவமானப்படுத்தியதாக குற்றம்சாட்டியிருந்தார்.

இந்நிலையில் முதலமைச்சர் ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையில், எனது பதவியேற்பு விழாவில் மு.க. ஸ்ராலின் கலந்து கொண்டதில் மகிழ்ச்சியடைகிறேன். அவருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

விழாஅரங்கில் எம்.எல்.ஏ.க்கள் அமர்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் ஸராலின் அமர்ந்திருந்தார். பொதுப் பணித்துறை அதிகாரிகள் பதவி வரிசைப்படியே இருக்கையை ஒதுக்கியுள்ளனர்.

எனவே.ஸ்ராலின் அவருக்கு பின் வரிசையில் இருக்கை ஒதுக்கப்பட்டதில் ஏதேனும் வருத்தம் ஏற்பட்டிருந்தாலும், அவருக்கு நான் இத்தருணத்தில் ஒரு விளக்கத்தை தர விரும்புகிறேன்.இருக்கை ஒதுக்கீடுமூலம் திமுகவையோ, ஸ்ராலினையோ அவமதிக்கும் உள்நோக்கம் இல்லை. ஒருவேளை, ஸ்ராலின் எனது பதவியேற்பு விழாவில் கலந்து கொள்வதாக அதிகாரிகள் முன்னரே எனக்குத் தெரிவித்திருப்பார்கள் என்றால் நடைமுறை விதிகளைத் தளர்த்தி அவருக்கு முன்வரிசையில் இருக்கை ஒதுக்கியிருப்பேன். மாநில மேம்பாட்டிற்காக ஸ்ராலினும், அவரது கட்சியும் செயற்பட எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# பாக்கு நீரிணையில் மீன்பிடிக்கும் உரிமையை நிலைநாட்ட வேண்டும்

இலங்கை- இந்தியா மீனவர்கள் பாரம்பரிய நட்பின் அடிப்படையில், பாக்கு நீரிணையில் மீன்பிடிக்கும் உரிமையை நிலைநாட்ட, இந்திய அரசு உரிய பேச்சுவார்த்தை மேற்கொண்டு தீர்வு காண வேண்டும் என, அனைத்திந்திய மீனவர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து அனைத்திந்திய மீனவர்கள் சங்கத்தின் ஆலோசனைக் குழு உறுப்பினர் ஆர். எம்.பி. ராஜேந்திரநாட்டார், தமிழக முதல்வருக்கு அனுப்பிய கோரிக்கை மனுவில்,

ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் மே 30 ஆம் திகதி வரையிலான காலம் மீன்பிடித் தடைக் காலமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தக் காலத்தில் விசைப் படகுகள் மூலமான மீன்பிடிப்பு முழுமையாகக் கைவிடப்படுகிறது. மரபுவழி கட்டுமர படகுகள் மூலம் கரையோர மீன்பிடித் தொழில் மட்டுமே நடைபெறுகிறது.

நிகழாண்டில், மே மாத 2-வது வாரத்தில் உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக நீடித்த கனமழை, கடல் சீற்றம் உள்ளிட்டவைகளால் மே 18ஆம் திகதி வரை மீன்பிடித் தொழில் முழுமையாகத் தடைப்பட்டிருந்தது. இதனால், ஏழை மீனவர் குடும்பங்கள் வறுமை நிலைக்குள்ளாகியுள் ளன.

இந்த நிலையில், மரபு வழி மீன்பிடிப்பு மேற்கொள்ள கடலுக்குச் சென்ற இராமநாதபுரம் மாவட்ட மீனவர்களை, இலங்கைக் கடற்படையினர் மனிதாபிமானம் இல்லாமல் அடித்து, விரட்டியுள்ளனர். 2014-ம் ஆண்டு முதல் தற்போது வரை தமிழக மீனவர்களின் 96 மீன்பிடி படகுகள் இலங்கையில் சிறைபிடிக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசு, தமிழக மீனவர்களின் மீன்பிடி படகுகளை விடுவிக்கவும், இலங்கை- இந்திய மீனவர்கள் பாரம்பரிய நட்பின் அடிப்படையில், பாக்கு நீரிணையில் மீன்பிடிப்பு செய்யும் உரிமையை நிலைநாட்டவும், படகுகளை மீட்கவும் அரசு உரிய பேச்சுவார்த்தை மேற்கொண்டு தீர்வு காண வேண்டும்.

மேலும், அரசு தற்போது நடைமுறைப்படுத்தும் மீன்பிடித் தடைக்கால நிவாரணத் திட்டம் மூலம், தடைக்கால நிவாரணமாக ரூ. 2 ஆயிரம் மட்டுமே வழங்கப்படுகிறது.

இது, மீனவர்களின் வறுமையைப் போக்குவதாக இல்லை என்பதால், இந்தத் தொகையை நாள் ஒன்றுக்கு ரூ. 150 வீதம் கணக்கிட்டு 45 நாட்களுக்கான நிவாரணமாக ரூ. 6,750 வழங்க உத்தரவிட வேண்டும் என அந்தக் கோரிக்கை மனுவில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ-10)

பாரதச் செய்தி

# அ.தி.மு.க. எம்.எல்.ஏ. சீனிவேல் காலமானார்

## ஜெயலலிதா இரங்கல்



(சென்னை)

அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் முதலமைச்சருமான ஜெயலலிதா நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

மதுரை புறநகர் மாவட்ட எம். ஜி.ஆர். மன்றச் செயலாளரும், நடந்து முடிந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலில், திருப்பரங்குன்றம் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவருமான எஸ்.எம்.சீனிவேல் உடல் நலக்குறைவால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக்காலை மரணமடைந்து விட்டார் என்ற செய்தி கேட்டு மிகுந்த வருத்தமுற்றேன்.

கழகத்தின் மீதும், கழகத் தலைமையின் மீதும் மிகுந்த விசுவாசம் கொண்டு பணியாற்றி வந்த ஆரம்ப கால கழக உடன்பிறப்பு சீனிவேல், திருப்பரங்குன்றம் ஒன்றியக் கழக அவைத் தலைவர், ஒன்றியக் கழகச் செயலாளர் உள்ளிட்ட பல் வேறு பொறுப்புகளில் கழகப் பணிகளை ஆற்றி உள்ளதோடு, 2001 முதல் 2006 வரை திருப்பரங்குன்றம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் மக்கள் பணிகளை சிறப்புடன் ஆற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்புச் சகோதரர் சீனிவேலை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் அமைதி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.இவ்வாறு முதலமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார். (இ-10)

# உபி.யில் புழுதி புயலுக்கு 5 பேர் பலி



உத்தரப் பிரதேச மாநிலத்தில் திடீரென புழுதிப் புயல் வீசியதில் வீட்டுச் சுவர்கள், மரங்கள் மற்றும் மின் கம்பங்கள் சாய்ந்து விழுந்த விபத்தில் சிக்கி 5 பேர் உயிரிழுந்தனர்.

நாடு முழுவதும் கோடை வெயில் சுட்டெரித்து வரும் நிலையில், உத்தரப்பிரதேச மாநிலத்தில் கடந்த திங்கட்கிழமை திடீரென புழுதிப் புயல் வீசியது. இதனால் வெப்பம் தணிந்து இதமான சூழல் நிலவியது. எனினும் அம்மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் புயல் காரணமாக பலத்த காற்று வீசியதால் மின்கம்பங்கள் சாய்ந்தன. மரங்கள் மற்றும் வீட்டுச் சுவர்களும் இடிந்து விழுந்ததில் சம்பல், ஹர்தோய், உன்னாவ் மாவட்டங்களில் 5 பேர் உயிரிழுந்தனர்.

ஆக்ராவில் உள்ள உலகப் புகழ்பெற்ற தாஜ்மஹாலில் அமைந்துள்ள மிகப் பெரிய மரம் ஒன்றும் இந்த புழுதிப் புயலில் சிக்கி வேரோடு முறிந்து விழுந்தது. மதுரா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அருகே ரயில்வே மின் வயர்கள் அறுந்து விழுந்ததால், ரயில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது.

இதேபோல் மகசூலுக்கு தயாராக இருந்த மாமரங்களையும் புழுதிப் புயல் பதம் பார்த்ததால், விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. புயலை தொடர்ந்து சுல்தான்புர் உள்ளிட்ட மாவட்டங்களில் 4.6 மீ.மீற்றர் அளவுக்கு மழையும் பெய்தது. (இ-10)



# சிறுவர் அரங்கம்

1444

## தங்கக் காசு!

இரவு சுமார் பதினொன்றரை மணி இருக்கும். பேருந்து சிதம்பரத்திலிருந்து சென்னையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. சுமார் பத்து பயணிகள் இருந்தனர். அவர்களுடன் நடத்துனரும் சேர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். பேருந்து புவனகிரியை தாண்டிச் சென்று கொண்டிருந்தது. பயணிகளில் ஐவர் எழுந் தனர். மறைத்து வைத்திருந்த கத்தியையும் துப்பாக்கியையும் வெளியே எடுத்தனர். ஒருவன் ஓட்டுநரின் முதுகில் கத்தியை வைத்து அழுத்தினான். அவர் மிரண்டு போனார்.

"ஐயா, என்னை ஒன்றும் செய்து விடாதே... நீ சொன்னபடி எல்லாம் கேட்கிறேன். என்னை உயிரோடு விட்டு விடு சாமி," என்றார். பயணிகளும், நடத்துனரும் குறட்டை விட்டு தூங்கிக் கொண்டிருந்தார்.

ஒருவன் நடத்துனரின் நெஞ்சுக்கு நேராக துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்தான்.

"சத்தம் போட்டால் தொலைத்து விடுவேன். ஜாக்கிரதை!" மெல்லிய குரலில் சொன்னான்.

நடத்துனர் நிலைமையை நன்றாக அறிந்தார். ஓட்டுனரைப் பார்த்தார். அவர் முதுகில் கத்தி பாய தயாராய் இருந்தது.

"சாமி எனக்கு மனைவியும் இரண்டு பிள்ளைகளும் உள்ளனர். நீ என்ன சொல்கி றாயோ அதைச் செய்ய நான் தயார். என்னை விட்டு விடப்பா!" பயணிகள் விழித்து விடக்கூடாத ல்லவா அதனால் அவர் மிக மெதுவாகச் சொன்னார். அவர்கள் யாரும் விழித்துக் கொள்ளவில்லை. நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தனர். நடத்துனர் தன் கையிலிருந்த பணப்பை யையும் திருடனிடம் ஒப்படைத்தார்.



"ஏ! எல்லாரும் இரண்டு கையையும் மேலே தூக்குங்க... கையில கழுத்தில இருக்கிற நகைகளை எல்லாம் கழற்றி பக்கத்தில் வைங்க. சத்தம் போட்டா சுட்டுப் பொசுக்கிடுவேன்," உரத்த சத்தமாய்க் கத்தினான் திருடன்.

பேருந்தில் இருந்த ஒரு சிறுவன் உட்பட அனைவரும் கண்ணைக் கசக்கிக் கொண்டு விழித்தனர். எதிரில் திருடன் அவன் கையில் துப்பாக்கி. வலது கை ஆட்காட்டி விரல் துப்பாக்கி விசையை அழுத்த தயாராய் இருந்தது. இக்கட்டான நிலையை அறிந்து கொண்ட இரு பெண்கள் உட்பட அனைத்துப் பயணி களும் தங்கள் தங்கச் சங்கிலிகள், வளையல்கள், மோதிரங்கள் அனைத்தையும் கழற்றிப் பக்கத்தில் வைத்தனர்.

திருடன் துப்பாக்கியை நீட்டியபடி வந்து எல்லா தங்க நகைகளைகளையும் எடுத் துத் தன் பையில் வைத்தான். பின்னர் ஐவரும் பேருந்தை நிறுத்தி இறங் கத் தயாராயினர்.

"ஐயா, என்னிடம் ஒரு தங்கக்காசு இருக்கிறது. அதையும் பெற்றுக் கொள்ளுங்கள்," என்றான் சிறு வன். இதைக் கேட்ட ஐந்து திருடர்களும் அதிசயித்து நின்றனர்.

"ஐயா, இன்று நான் தனியாகப் பய ணம் செய்து கொண்டிருக்கிறேன். என் தாயாரும் தந்தையும் ஊரில் இருக்கி ன்றனர். எப்போதும் நீ உண்மையே பேச வேண்டும் என்று என் தாய் அடிக்கடி கூறுவார். நான் எப்போதும் உண்மையே பேசுவேன். நான் பர்ஸ்ட் ரேங்க் வாங்கியதால் எனக்கு இந்த தங்க டால ரைப் பரிசாகத் தந்துள்ளனர். இதன் மதிப்பு ஆயிரம் ரூபாய். நான் இதை உங்களிடம் தருகிறேன் ஏற்றுக் கொள்ளுங்கள்," என்றான் அவன்.

"தம்பி நீ உண்மை பேசும் உத்தமன் என்பதை நீரூபித்துவிட்டாய். உன்னை எப்படிப் பாராட்டுவது என்று தெரியவில்லை. அந்த தங்க டாலர் எங்களுக்கு வேண்டாம். நீயே வைத்துக் கொள்," என்றான் ஒரு திருடன்.

"ஐயா! நீங்கள் அப்படிச் சொல்ல வேண்டாம். இந்தப் பயணிகள் அனைவரும் உண்மையாகவே தங்களிடம் இருந்த எல்லா தங்க நகைகளையும் தந்துவிட்டனர். நான் மட்டும் தராமல் இருந்தால் எப்படி? தயவு செய்து பெற்றுக் கொள்ளுங்கள்," என்றான்.

அச்சிறுவனின் பேச்சு அந்த ஐந்து திருடர்களின் மனதை பாதித்தது. அவர்கள் மனம் மாறினர். கொள்ளையடித்த எல்லாப் பொருட்களையும் அவரவரிடம் ஒப்படைத்தனர். நடத்துனர் தன் பணப் பையை பெற்றுக் கொண்டார்.

உண்மையை பேசி தங்கள் உடமைகளை மீட்டுத் தந்த அந்தச் சிறுவனை அனைவரும் பாராட்டினர்.



## 05.2016 26 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1293 - ஜப்பான் கமகூரா என்ற இடத்தில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 30,000 பேர் கொல்லப் பட்டனர்.
- 1538 - ஜோன் கால்வின் மற்றும் அவரது சீடர்கள் ஜெனீவா நகரில் இருந்து வெளியேற்றப்பட்டனர். கால்வின் அடுத்த மூன்றாண்டுகள் பிரான்சின் ஸ்ட்ராஸ்பூர்க் நகரில் வாழ்ந்தார்.
- 1637 - பீக்குவாட் போர்: புரொட்டஸ்தாந்து, மொஹீகன் படைகள் ஜெர்மன் தளபதி ஜோன் மேசன் தலைமையில் ஐக்கிய அமெரிக்காவின் கனெடிக்ட்டில் பீக்குவாட் இனத்தவர்களின் ஊர் ஒன்றைத் தாக்கி ஐநூறுக்கும் மேற்பட்ட அமெரிக்கப் பழங்குடியினரைக் கொன்றனர்.
- 1838 - ஐக்கிய அமெரி க்காவில் செரோக்கீ பழங்குடிகளின் கட்டாயக் குடியகல்வின் போது 4,000 பேர் கொல்லப் பட்டனர்.
- 1879 - ஆப்கானிஸ்தான் அரசை உருவாக்க கண்டமாக் உடன்பாட்டில் ரஷ்யாவும் ஐக்கிய இராச்சியமும் கைச்சாத்திட்டன.
- 1896 - ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலாஸ் ரஷ்யாவின் சார் மன்னனாக முடி சூடினான்.
- 1912 - இலங்கையில் இருந்து 7 பேரைக் கொண்ட முதலாவது தொகுதி சிறைக்கைதிகள் அந்தமான் தீவுக்கு அனுப்பப்பட்டனர்.
- 1917 - இலினொய்யில் நிகழ்ந்த சூறாவளியின் தாக்கத்தினால் 101 பேர் கொல்லப்பட்டு 689 பேர் காயமடைந்தனர்.
- 1918 - ஜோர்ஜியா மக்களாட்சிக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1958 - இனக்கலவரம் கொழும்புக்குப் பரவியது. தமிழரின் வீடுகள், கடைகள், வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டு பலர் கொல்லப்பட்டனர்.
- 1966 - பிரித்தானிய கயானா விடுதலை அடைந்து கயானா எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1969 - அப்பல்லோ 10 விண்கலம் மனிதனை சந்திரனுக்கு அனுப்பும் தனது அடுத்த திட்டத்திற்கு தேவையான சோதனைகளை வெற்றிகரமாக முடித்து விட்டு பூமி திரும்பியது.
- 1983 - ஜாப்பானைத் தாக்கிய 7.7 ரிக்டர் அளவு நிலநடுக்கம் ஆழிப்பேரலையை உண்டு பண்ணியதால் 104 பேர் கொல்லப்பட்டனர்.
- 1987 - யாழ்ப்பாணம் வடமராட்சியில் இலங்கை ஆயுதப்படையினரின் ஒப்பரேஷன் லிபரேஷன் ராணுவ நடவடிக்கை இடம்பெற்றது.
- 1991 - தாய்லாந்தின் விமானம் ஒன்று வெடித்ததில் 223 பேர் கொல்லப்பட்டனர்.
- 2002 - மார்ஸ் ஒடிசி விண்ணூர்தி செவ்வாய்க் கோளில் நீர் பனிப் படிவுகள் இருப்பதை அறிந்தது.
- 2006 - ஜாவாவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 5,700 பேர் கொல்லப்பட்டு 200,000 பேர் வீடுகளை இழந்தனர்.

### பிறப்புகள்

- 1799 - அலெக்சாண்டர் புஷ்கின், உருசியக் கவிஞர். (இ. 1837)
- 1844 - மகா வைத்தியநாதையர், கருநாடக இசைக் கலைஞர். (இ. 1893)
- 1937 - மனோரமா, தமிழ்த் திரைப்பட, நாடக நடிகை. (இ. 2015)

### இறப்புகள்

- 1989 - கா. அப்பாத்துரை, தமிழறிஞர். (பி. 1907)

### சிறப்பு நாள்

- அவுஸ்திரேலியா - தேசிய மன்னிப்பு நாள்
- போலந்து - அன்னையர் நாள்
- ஜோர்ஜியா - தேசிய நாள்

### மனோரமா

**தமிழ்த் திரைப்பட, நாடக நடிகை**



மனோரமா தென்னிந்தியத் திரைப்பட நடிகையாவார். நகைச்சுவைக் கதாபாத்திரங்களில் தனது திறனை வெளிப்படுத்திய இவர் 1500 திரைப்படங்களுக்கு மேல் நடித்தார். இவர் தமிழ்த் திரையுலகினராலும், தமிழ்த் திரைப்பட ரசிகர்களாலும் "ஆச்சி" என அன்போடு அழைக்கப்பட்டார். இவர் தென்னிந்தியாவின் ஐந்து முதலமைச்சர்களுடன் நடித்த பெருமை கொண்டவர். கா. ந. அண்ணாதுரை, மு. கருணாநிதி இருவரும் நாடக மேடைகளில் மனோரமாவுடன் நடித்திருக்கிறார்கள். தவிர ஜெயலலிதா மற்றும் ம. கோ. இராமச்சந்திரன் இவருடன் தமிழ்த் திரைப்படங்களில் நடித்திருக்கிறார்கள். மேலும் என். டி. ராமராவ் தெலுங்கு படங்களில் இவருடன் நடித்திருக்கிறார். இவரது இயற்பெயர் கோபிசாந்தா. இவரது பெற்றோர் காசி "கிளாக்" உடையார் மற்றும் ராமாமிர்தம். மனோரமா தமிழ்நாடு மாநிலத்தில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ராஜமன்னார்குடியில் வசதியான குடும்பத்தில் பிறந்தவர். நாடக இயக்குனர் திருவேங்கடம், ஆர்மோனியக் கலைஞர் தியாகராஜன் ஆகியோர் இவருக்கு "மனோரமா" எனப் பெயர் சூட்டினர். ஆரம்பத்தில் "வைரம் நாடக சபா" நாடகங்களில் சிறு வேடங்களில் நடித்து வந்தார். அக்காலத்தில் புதுக்கோட்டையில் எஸ். எஸ். ராஜேந்திரன் நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்த போது அவருக்கு மனோரமா பி. ஏ. குமார் என்பவரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். மனோரமாவின் திறமையை அறிந்துகொண்ட இராசேந்திரன் தனது "எஸ்.எஸ்.ஆர். நாடக மன்றத்தில்" சேர்த்துக் கொண்டார். இந்நாடக நிறுவனத்தின் மணிமகுடம், தென்பாண்டிவீரன், புதுவெள்ளம் உட்பட நூற்றுக்கணக்கான நாடகங்களில் நடித்தார். மனோரமா முதன் முதலாக மஸ்தான் என்பவர் இயக்கிய ஒரு சிங்கள மொழித் திரைப்படத்தில் கதாநாயகிக்குத் தோழியாக நடித்திருந்தார். பின்னர் ராஜேந்திரன், தேவிகா நடித்த ஒரு திரைப்படத்தில் இவர் நடித்தார். ஆனால் இத்திரைப்படம் வெளிவராமல் பாதியிலேயே நின்று விட்டது. 1000 திரைப்படங்களுக்கு மேல் நடித்ததற்காக கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றார். மனோரமா தனது 78 ஆவது அகவையில் 2015 அக்டோபர் 10 அன்று இரவு 11:00 மணியளவில் மாரடைப்பால் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் காலமானார்.

# மாணவர்கள் 12பேர் பலி; 11 பேரைக் காணவில்லை



சப்ரகமுவ மாகாணத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் கேகாலை மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் 12 பேர் பலியானதுடன் 11 மாணவர் கள் காணாமற் போயுள் ளனர் என்று, சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சர் பானு முனிப்பிரிய தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாண சபையின் மாதாந்தக் கூட் டம், சபைத் தலைவர் காஞ் சன ஜயரத்ன தலைமையில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

"இயற்கை அனர்த்தங்களினால் கேகாலை மாவட்டமே கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தில் 63 பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன. அதில் கேகாலை மாவட்டத்தில் உள்ள 3 பாடசாலைகளில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் அப்பாடசாலைகளை அவ்விடத்திலிருந்து முழுமையாக அகற்றி, வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# இலங்.பொலிஸாருக்கு பயிற்சியை நீடிக்க ஸ்கொட்லாந்து எதிர்பார்ப்பு

(கொழும்பு)

இலங்கை பொலிஸாருக்கு பயிற்சியளிக்கும் திட்டத்தை தொடர்வதற்கு ஸ்கொட்லாந்து பொலிஸ் எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த செய்தியை தே பெரேட் (The Ferret) வெளியிட்டுள்ளது.

இந்த வருடம் மார்ச் மாதத்துடன் இலங்கை பொலிஸாருக்கு பயிற்சி வழங்கும் திட்டம் முடிவடைந்துள்ளது.

இந்த நிலையில் அதனை நீடிக்க எதிர்பார்ப்பதாக ஸ்கொட்லாந்து பொலிஸ் தரப்பு கூறியுள்ளது.

2012ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இலங்கையின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை மையமாகக் கொண்டு இந்த பயிற்சி நடவடிக்கைகள் விமர்சனத்துக்கு உள்ளாகியிருந்தன.

எனினும் மனித உரிமைகளை முன்னேற்றும் வகையிலேயே இந்த பயிற்சிகள் வழங்கப்படுவதாக ஸ்கொட்லாந்து பொலிஸ் நியாயம் கற்பித்திருந்தது.

இந்த நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியிலும் சித்திரவதைகள் தொடர்வதாக சித்திரவதையில் இருந்து விடுதலை என்ற அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளதாக தே பெரேட் கூறியுள்ளது.

இதேவேளை, இலங்கையின் சிறைச்சாலை நிலைமையும் மோசமானது என்று குறித்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (இ-10)

# அனர்த்த நிவாரணப் பொருட்களை மோசடி செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## நிதியமைச்சர் ரவி எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கையில் அனர்த்த நிலைமையினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக கிடைத்த, நிவாரணப் பொருட்களை மோசடி செய்பவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க எச்சரித்துள்ளார்.

பல்வேறு அமைப்புக்கள் மூலம் கிடைத்துள்ள நிவாரணப் பொருட்கள் பணத்திற்கு விற்கப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் இவ்வாறு மோசடி நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் மற்றும் இதற்கு துணைபோவருக்கும் எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் நாட்களில் இந்த விடயத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் பலர் கைது செய்யப்படுவர் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# நான்காம் ஆண்டு— மாணவிக்கு கடும் தண்டனை வழங்கிய ஆசிரியரால் சர்ச்சை

(கொழும்பு)

காலியிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் நான்காம்ஆண்டு மாணவிக்கு வழங்கப்பட்ட தண்டனை குறித்து சர்ச்சை நிலை ஏற்பட்டுள்ளது.

சிறு குற்றம் இழைத்த மாணவிக்கு, வகுப்பிலுள்ள ஏனைய 44 மாணவிகளை அவரின் தலையில் குட்டுமாறு, வகுப்பாசிரியை பணித்துள்ளார்.

பயிற்சி நிலை ஆசிரியையினால் வழங்கப்பட்ட தண்டனையினால், குறித்த மாணவி பலவித உடல் உபாதைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து தென் மாகாண கல்வி அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களமும் சம்பவம் குறித்து தனி விசாரணை ஒன்றை மேற்கொள்ள இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த படைவீரர்களுக்கு திடீர் சுகயீனம்

அரநாயக்க மண்சரிவில் பாதிக்கப்பட்டோர் தொடர்பான மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த படைவீரர்களுக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டுள்ளது.

மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த இராணுவப் படைவீரர்கள் மற்றும் அதிகாரிகளே இவ்வாறு நோய்வாய்ப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேயர் ஜெனரல் எல்.எம்.ஆர்.மார்க் சிங்களப் பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அரநாயக்கவின் தற்போதைய சுற்றுச்சூழல் மற்றும் சடலங்களிலிருந்து வெளியாகும் கிருமிகள் போன்றவற்றினால் இவ்வாறு நோய் வாய்ப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் எனவும் காணாமற் போனவர்களை தேடும் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். மண்சரிவு மற்றும் மழை வெள்ளம் காரணமாக ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்ய இன்னும் சில காலம் தேவைப்படும் என அவர் தெரிவித்தார். (இ-10)

# இன்று ஒரு தகவல்

## குடும்பத்தைக் கவனிக்கிறீர்களா?

பணத்தைச் சம்பாதித்துக் கொட்டுவதோடு தங்களது குடும்பக் கடமைகள் முடிந்துவிட்டதாக எவரேனும் எண்ணுவார்களேயானால் அவர்களை மூடர்களின் வரிசையில்தான் சேர்க்க வேண்டும்.

பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்து தருவது மட்டுமே குடும்ப உறுப்பினர்களைத் திருப்தி செய்து விடுவது இல்லை. இந்தா போனஸ் என்று பணத்தை நீட்டும் போது ஒரு மனைவி பெறும் மகிழ்ச்சியை விட ஒரு முழம்பூவோ அல்லது அவளுக்குப் பிடித்த ஆடை அணிகலனையோ தன் கைப்பட வாங்கித் தருவதே மன நிறைவைத் தரும் விடயம். நோட்டுக் கட்டால் மட்டுமே குடும்பத்தை திருப்திப்படுத்திவிட முடியும் என எண்ணுபவர்கள் தங்கள் கருத்தை மாற்றிக் கொள்ளட்டும். சூழ்நிலையையும் தேவைகளையும் அறிந்து அன்புடனும் ஆர்வத்துடனும் குடும்பப் பொறுப்பை ஏற்பதும் செயலாற்றுவதும் தான் அறிவு பூர்வமான செயல்.

என் குடும்பத்திற்காக எவ்வளவோ உழைக்கிறேன். ஆனாலும் எனக்குக் கெட்ட பெயர். நான் எனக்காகவா உழைக்கிறேன்? இருந்தும் என்ன பயன் என்று புலம்புபவர்களே சில அடிப்படை உண்மைகளை உணர வேண்டும்.

தேவையற்ற ஊர் வேலைகள், பொழுது போக்குப் பழக்கங்கள் ,நண்பர்கள் ஆகியவற்றுக்கென நேரத்தை வீணடித்துவிட்டுக் குடும்பத்தைக் கவனிக்க நேரமில்லை எனப் போலி வேஷம் போடுபவர்கள் மிகப் பலர். யாருக்காக வாழ்கிறோமோ அவர்களைப் புறக்கணித்துவிட்டு மற்றவற்றுக்கு நேரத்தைச் செலவழிப்பவர்களின் பேதமையை என்னவென்று சொல்லுவது?

சிலர் வீட்டிலேயே கிடப்பார்கள். ஆனால் பொறுப்பு என்பது துளியும் இருக்காது. எல்லாம் நேரம் காலம் வரும் போது தானாக நடக்கும் என்று வேதாந்தம் பேசிக் கொண்டு குடும்ப உறுப்பினர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்வார்கள். இவர்களையும் மெச்சுவதற்கில்லை. சிலர் பொறுப்பின்றி செலவு செய்து கொண்டு குடும்பத்தைக் கவனிக்க மாட்டார்கள்.

இவர்கள் தங்களை மாற்றிக் கொண்டு குடும்பத்தைக் கவனிப்பார்களேயானால் வாழ்வில் புதுச் சுவை கூடும். வாழ்வதில் ஏதோ அர்த்தம் இருப்பதாகத் தோன்றும்.

நீங்கள் குடும்ப உறுப்பினர்களை ஒரேயடியாக கவனிக்கத் தொடங்க ,ஏதோ வாழ்வில் புனர் ஜென்மம் எடுத்தது போல் இருக்கும்.

குடும்பத்தைக் கவனிப்பது என்பது என்ன?

குடும்ப உறுப்பினர்களின் உணர்வுகளை மதிப்பது அவற்றிற்கேற்பச் செயற்படுவது; சிறு தேவைகள் முதல் பெரும் கடமைகள் வரை மற்றவர்கள் சுட்டிக் காட்டும் முன் அவற்றைப் புரிந்து கொண்டு நிறைவேற்றுவது; அவர்களோடு பற்றுடனும் பாசத்துடனும் பணிவுடனும் பழகுவது.

எவ்வளவு முயன்றும் இவற்றுள் ஓரளவு தான் செய்ய முடிகிறதா? அதனால் பரவாயில்லை. உங்கள் இயலாமையை புலம்பலாக இல்லாமல் எரிந்து விழாமல் எடுத்துச் சொல்லி,பாவம் பரிதாபம் என்றி அனுதாபத்தையாவது பெற்றுக் கொள்ள வேண்டும்.

தேவையற்ற குற்றச்சாட்டு நம்மீது வராமலிருக்கவாவது இம் முயற்சி அவசியம்.

அது மட்டுமல்ல,

நம்மைக் காரணமாகச் சொல்லிக் கொண்டும், ஆகாத வேலைகளுக்கெல்லாம் நாம் முட்டுக்கட்டை போடுகிறோம் என்பதான பிரமையை உருவாக்கிக் கொண்டும் இருக்கும் குடும்ப உறுப்பினர்களின் வாயை அடைக்கவும் அது பயன்படும்.

**லேனா தமிழ்வாணன்**

# இயற்கையின் சீற்றத்தால் அலங்கோலமான கொழும்பு

## வெள்ளம் வற்றியபின் களநிலவரம்

(கொழும்பு)

கொழும்பில் நிலவிய சீரற்ற காலநிலையால் களனி, வெல்லம்பிட்டிய, கொலனாவ, சேதுவத்த உள்ளிட்ட கொழும்பின் பல பகுதிகள் வெள்ளத்தால் மூழ்கின.


வீடுகள், வீதிகள், வாகனங்கள் என அனைத்தும் நீரில் மூழ்கின. தற்போது காலநிலை வழமைக்கு திரும்பியுள்ளதால் வீடுகளை மூழ்கியிருந்த வெள்ளம் வற்றியுள்ளது.


தமது வருமானத்தில் சிறிது சிறிதாக சேர்த்து கட்டிய வீடுகள், சேர்த்த சொத்துக்கள், ஆவணங்கள், வாகனங்கள் என அனைத்தும் அலங்கோலமான நிலையில் காணப்படுகின்றன.

இவற்றில் ஒன்றை கூட மீளப் பாவிக்க முடியாத நிலைக்கு இந்த அப்பாவி மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.(இ-10)













# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாவிடின் சர்வதேசம் எம்மை ஒதுக்கித் தள்ளிவிடும்

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வை வழங்காவிட்டால் சர்வ தேசம் எம்மை ஒதுக்கித் தள்ளிவிடும். ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் தலைமையிலான இணக்கப்பாட்டு அரசில் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிட்டால் என்றுமே தீர்வைக் காண முடியாது என்று அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 30 வருட பூர்த்தியை முன்னிட்டு ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற விழாவில் உரையாற்றுகையிலேயே உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர் அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து இனப்பிரச்சினைக்கு தீர்வைக் கண்டிருக்க வேண்டும்.

ஆனால் சுதந்திரத்திற்கு பின்னர் எவரும் எந்த அரசாங்கத்தினரும் அனைத்து கட்சிகளுடனும் இணைந்து இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணத் தவறிவிட்டனர்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக் காண்பதன் மூலமே நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னோக்கி நகர்த்த முடியும்.

இதற்கு தீர்வை காணாததன் காரணமாகவே 30 வருட கால யுத்தம் ஏற்பட்டது.

சிங்கப்பூரில் பிரச்சினைகளுக்கு தீர்வை கண்டார்கள். எனவே தான் அந்நாடு இன்று எம்மைவிட அபிவிருத்தி கண்டுள்ளது. இனப்பிரச்சினைக்கு தீர்வைக் கண்டால் மட்டுமே சர்வதேசம் எமக்கு ஆதரவை வழங்கும். அத்தோடு எமது நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ளும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வை காணாது இழுத்தடித்தால் சர்வதேசம் எம்மை கைவிட்டுவிடும். சுதந்திரத்திற்குப் பின்னர் இன்று நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் நாட்டின் ஜனாதிபதியாகவுள்ளார். ஐ.தே.கட்சித் தலைவர் பிரதமராக பதவி வகிக்கிறார். எமது எதிராளிகள் இந்த இணக்கப்பாட்டு அரசாங்கத்திற்கு எதிராக என்ன விமர்சனம் செய்தாலும் இந்த இணக்கப்பாட்டு அரசை எதுவும் செய்ய முடியாது.

எனவே இன்றைய இணக்கப்பாட்டு அரசில் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக் காணமுடியும்.

இவ்வரசாங்கத்தில் நாம் இதற்கு தீர்வை பெற்றுக் கொள்ளாவிட்டால் எந்தவொரு அரசிலும் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது. வடக்கு, கிழக்கு, ஊவா மாகாணங்களில் அதிவேக நெடுஞ்சாலைகள் நிர்மாணிப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. கொழும்பு - கண்டி அதிவேக நெடுஞ்சாலை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று நாடு முழுவதும் 700 வீதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன என்றார். ராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா கருத்து வெளியிடுகையில், நெடுஞ்சாலை விதிகளை மீறி பாதையில் நடமாடினால் மரணம் தான். இதற்கு இன மத பேதங்கள் கிடையாது. அதேபோன்று இன, மத பேதமற்ற அரசியல் பயணத்தை நாம் முன்னெடுக்காவிட்டால் அழிவைத்தான் சம்பாதித்துக் கொள்வோம். இன்று அதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## குதிரை பந்தயத் திடலில் ஆடை அலங்காரக் கண்காட்சி



(கொழும்பு)

நுவரெலியா குதிரை பந்தயத் திடலில் ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடை அலங்கார கண்காட்சி நிகழ்வு ஒன்று அண்மையில் நடைபெற்றுள்ளது.


இதன்போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆடை வடிவமைப்பாளர்களின் கைவண்ணத்தில் உருவான அழகிய ஆடைகளை அணிந்து வந்திருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மொடலிங் ஆண்களும் பெண்களும் விதவிதமாக ஆடைகளை அணிந்து காட்சிப்படுத்தியுள்ளார்கள்.

இவர்களது நிகழ்வு பார்வையாளர்களை மிகவும் கவர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 731

ரதி




நிஷாந்தன்




அச்சு





ஜெய்


திருமண வாழ்க்கை

நீங்க சாப்பிட்டாதான்
நான் சாப்பிடுவேன்
என்ற பவுசில் ஆரம்பித்து
நான் சாப்பிட்டேன்
தேவைனா நீங்க
கடையில சாப்பிட்டு வாங்க
என்ற ரவுசில் நிற்கிறது

வின்ஜக்ஷன்




விதுஷன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# திருமண வாழ்க்கை முறிவடைய பொருளாதாரமும் காரணமா?

விவாகரத்தின் ஏற்புடமை பற்றிய ஒழுக்கவியல் நோக்கு திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டது என்று கூறுவர். இருமனங்களின் ஒன்றிணைவால் திருமண வாழ்க்கையில் இணைந்து கொள்ளும் தம்பதிகளின் வாழ்க்கையில் தொடர்ந்தும் வசந்தம் வீசுகிறதா? என்பது வினாவுக்குரிய ஒன்றாக விவாகரத்து விளங்குகிறது. இங்கு விவாகரத்து என்பது ஒத்துப் போகாத தம்பதியினர் அரச அனுசரணையுடன் பிரிதலே விவாகரத்தாக அமைகிறது. விவாகரத்து இன்றைய காலகட்டத்தில் எதிர் நோக்கப்படும் ஒரு பிரச்சினையாக உள்ளது. பல்வேறு தம்பதிகள் எமது குடும்ப வாழ்க்கையை குருவிக் கூட்டை கலைப்பது போல இலகுவாகப் பிரிந்து நிற்கதியாய் நிற்பது காணுதற்குரியதே. இத்தகைய சூழ்நிலையில் விவாகரத்து ஏன் ஏற்படுகிறது? அதற்கான காரணங்கள் என்ன? அதனால்ஏற்படும் விளைவு யாது? ஒழுக்க ரீதியில் ஏற்புடையதா? போன்ற வினாக்களை எழுப்பி அதற்கான விடைகளை காண முற்படுவதன் மூலம் இவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.


இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் விவாகரத்தை பொறுத்த வரையில் தினமும் 300 பேர் விவாகரத்துச்செய்து கொள்கின்றார்கள் என மாகாண சமூகசேவைதிணைக்களம் மேற்கொண்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றது. கடந்த வருடத்தில் மட்டும் கொழும்பு நீதிமன்றத்தில் ஒரு இலட்சம் விவாகரத்து வழக்குகள் பதிவாகியுள்ளது என்பது வேதனைக்குரியதாகும். குறிப்பாக விவாகரத்து கோரி நிற்கும் தம்பதிகளில் அதிகமானோர் காதல் திருமணம் செய்து கொண்டவர்களேயாவர். விவாகரத்துப்பெற்ற பெண்களில் 58 வீதம் காதல் திருமணம் செய்து கொண்டவர்கள் என்பது அதிசயப்பட வைப்பதாக உள்ளது.

ஒவ்வொரு வருடைய வாழ்க்கையிலும் பெரிய திருப்புமுனையாக அமைவதும் திருப்பு முனை ஏற்படுத்துவதும் திருமணமாகும். இத்திருமண முறிவு பற்றி திருமண சிறப்புத் திருமண சட்டம் விவாகரத்து ஏற்படுவதற்கான காரணங்களாக தம்பதியினரில் ஒருவர் வாழ்க்கைத்துணை அல்லாத ஒருவருடன் விரும்பி உடலுறவு கொள்ளுதல், தம்பதிகளில் ஒருவர் தீர்க்க முடியாத மன நோய்க்கு உள்ளாதல், மனுதாரரை உடல் ரீதியாகவோ அல்லது மன ரீதியாகவோ கொடுமை செய்தல், மனுதாரரை இரண்டு அல்லது மேற்பட்ட ஆண்டுகளுக்கு விட்டுப்பிரிந்து செல்லல், தம்பதிகளில் ஒருவர் தொடர்ந்து ஏழு ஆண்டுகளுக்கு மேலாக உயிருடன் உள்ளாரா அல்லது இல்லையா என்பதை தெரிந்து கொள்ளாமை, தம்பதியினரில் ஒருவர் பாலியல் நோய்க்கு உள்ளாதல் போன்ற சூழ்நிலையில்தான் விவாகரத்து செய்ய முடியும் எனக் குறிப்பிடப்படுகிறது. இதற்கு மேலாக இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் போன்றனவும் சில சட்ட விதிகளின் அடிப்படையில் விவாகரத்தைக் குறிப்பிடுகிறது.

விவாகரத்துப் பற்றி பல்வேறு மதங்களும் திருமணச் சட்டத்தில் குறிப்பிட்ட போதிலும் இன்றைய காலகட்டத்தில் விவாகரத்து இவ்விதி சட்டத்தின் அடிப்படைக் காரணங்களால் பெறப்படுகின்றதா என்பது வினாவுக்குரியதாகும். இன்றைய காலத்தில் தம்பதியினர்களுக்கிடையே விவாகரத்து ஏற்படுவதற்குரிய காரணங்களாக மனம் சார்ந்த விடயங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றது. கணவன்-மனைவிக்கிடையிலான சந்தேகம், தம்பதியினருக்கிடையிலான நேர் எதிர் எண்ணங்கள், கணவன்-மனைவிக்கிடையே விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையின்மை, தம்பதியினருக்கிடையேயான அதீதமான எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றத்தில் முடிவடைதல் போன்ற மன ரீதியான ஒருமைப்பாடு காணப்படாத சந்தர்ப்பத்தில் திருமண வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு இது என்ன வாழ்க்கை என்ற மனம் சார்ந்த நிலை ஏற்படும் போது திருமண உறவை முறித்து விவாகரத்தை நாடிச் செல்கின்றனர்.

இன்றைய கால கட்டத்தில் விவாகரத்து ஏற்படுவதற்கான காரணங்களில் சீதனப்பிரச்சினை, கணவன் மனைவிக்கான வேலைப்பழு, திருமணம் பற்றிய வழக்கங்களை அறிந்திராமை, போதைப்பொருட் பாவனை போன்றன முக்கிய செல்வாக்குச் செலுத்துகின்றன.

இன்று திருமணங்கள் எனும்போது பெரும்பாலானவை சீதனத்தை எதிர்பார்த்தே நிச்சயிக்கப்படுகின்றது. சீதனம் இல்லை என்றால் திருமணங்கள் இல்லை என்ற அளவிற்கு



திருமணத்தில் முக்கிய ஒன்றாக சீதனம் விளங்குகிறது. நிச் சயிக்கப்பட்ட அளவு சீதனக் கொடுப்பனவுகள் வழங்கப்படாதவிடத்து திருமணத்திற்குப்பின் கணவன்-மனைவிக்கிடையே அது ஒரு பிரச்சினையாக எழுந்து விரிசலை ஏற்படுத்துகிறது. இதன் காரணமாக தம்பதிகள் விவாகரத்துக் கோரி நின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. குறிப்பாக காதல் திருமணம் செய்து கொண்டவர்களில் சீதனத்தைக் காரணமாகக் கொண்டு திருமணமான ஒரு வருடத்திலேயே விவாகரத்துப் பெற்றவர்களின் வரலாற்றில் குறிப்பிடத்தக்கவர்களாக உள்ளனர்.

போதைப்பொருள் பாவனை இன்று உலகம் முழுவதிலும் எல்லாக் குடும்ப வாழ்க்கையிலும் பிரச்சினையையும் முறிவையும் ஏற்படுத்துவதாக உள்ளது. கணவன் அல்லது மனைவி போதைப்பொருளுக்கு அடிமையாவதால் குடும்பத்தில் பல்வேறு பேச்சுத் தகராறுகளும் வறுமையும் ஏற்பட்டு தம்பதியினர் திருமண முறிவைப்பெற்றுக்கொள்ள விரும்பி விவாகரத்தை நாடிச் செல்கின்றார்கள்.

விவாகரத்தை ஏற்படுத்துவதில் கணவன்-மனைவிக்கிடையிலான வேலைப்பழு முக்கிய இடத்தை வகிக்கின்றது. கணவன்-மனைவி ஆகிய இருவரும் வேலைக்குச் செல்வதால் தம்பதியினருக்கிடையே புரிந்துணர்வு இல்லாது போகின்றது. கணவன்-மனைவி ஆகிய இருவரும் பொருள் சேர்ப்பதிலேயே அதிக அக்கறை காட்டுவதால் குடும்ப வாழ்க்கை பற்றிய விடயங்களையும் தேவைகளையும் அறிந்து செயற்படாததால் இருவருக்கும் இடையே விளங்கிக் கொள்ளுதல் இல்லாமல் போய்விடுகின்றது. இதனால்

இனி வாழவே முடியாது என்று எண்ணி தனியான வாழ்க்கையை நாடி விவாகரத்தைத் தேடிச் செல்கின்றார்கள்.

விவாகரத்து ஏற்படுவதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்ற போதிலும் விவாகரத்து ஒழுக்கவியல் ரீதியில் ஏற்புடையதா? என்பது வினாவுக்குரியதாகும். ஒழுக்கவியல் ரீதியில் விவாகரத்து ஏற்புடையது என்றும் ஏற்கப்பட முடியாதது என்றும் இரு வகைப்பட்ட வாதத்தின் அடிப்படையில் விளக்க முடியும்.

ஒழுக்கவியல் ரீதியில் விவாகரத்து ஏற்புடையது என்பது பற்றிய வாதத்தை நோக்குவோமாயின் பெரும்பாலும் விவாகரத்து ஏற்பட கணவன்-மனைவிக்கிடையே மனக்கசப்பு காரணமாக உள்ள போது இத்தகைய மனக்கசப்புக்களுடன் தம்பதிகள் ஒன்றாக வாழும்போது குடும்பத்தில் வாழ்நாள் பூராகவும் பிரச்சினையையே எதிர்நோக்க வேண்டி ஏற்படும் இத்தகைய நிலை அவர்களின் குழந்தைகளின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்துவதாக உள்ளது. குறிப்பாக இத்தகைய சூழலில் வாழும் குழந்தை மன அழுத்தத்துடன் வாழ்வதாகவும் அத்துடன் பயந்த சுபாவம் உள்ளவராகவும் வளர வழி வகுக்கின்றது. அத்துடன் மனக்கசப்புகளின் மத்தியில் வாழும் தம்பதியினர் ஒருவருக்கு ஒருவர் அனுசரணை இல்லாமல் வாழ்வதால் குடும்பம் பின்னோக்கிய நிலைக்குத் தள்ளப்படும். எனவே கணவன்-மனைவி ஆகிய இருவரின் வாழ்க்கையில் மணமுறிவு ஏற்படும் சந்தர்ப்பம் உருவாகும் போது இவர்கள் சட்ட ரீதியான பிரிவு பெற்று வாழ்வதால் பெரும்பாலும் மன அழுத்தங்களில் இருந்து வாழ வழி வகுக்கும் என ஒழுக்கவியல் ரீதியாக எதிர்பார்க்க முடியும்.

ஒழுக்கவியல் ரீதியில் விவாகரத்து ஏற்புடையதல்ல என்பது பற்றி வாதத்தை நோக்கும் போது விவாகரத்து என்னும் விடயம் பிடித்தால் வாழ்வோம் இல்லாவிட்டால் சந்தோஷமாகப் பிரிவோம் என்ற மன நிலையை சாதாரண மக்கள் மத்தியில் ஏற்படுத்தும். இவ்வாறான நிலை திருமணம் பற்றிய வழக்க விதிகளுக்கு முரணாக செயற்பட வாய்ப்பை உருவாக்குகிறது. குறிப்பாக நோக்கும் போது தமிழர் திருமணச் சட்டத்தின் பிரகாரம் ஒருவனுக்கு ஒருத்தி எனும் விதி முறைஉண்டு எனவே இந்த விவாகரத்து இத்தகைய விதிக்கு மாறாக ஒருவர் எத்தனை திருமணமும் செய்யலாம் எனும் நிலை மக்கள் மத்தியில் உருவாக வாய்ப்பாக அமையும். அத்துடன் விவாகரத்து ஏற்புடையது என்ற அமைவில் நோக்கினால் கலாசார சீரழிவுகள் ஏற்படவும் வாய்ப்பு கள் உண்டு. இவ்வாறான நிலைகள் இள வயது மட்டத்தினரை தவறான பாதைக்கு கொண்டு செல்வதாக உள்ளது.

விவாகரத்தை ஒழுக்கவியல் ரீதியில் ஏற்புடையது அல்லது ஏற்புடையது அல்ல என்ற வகையில் நோக்கிய போதிலும் பெரும்பாலும் விவாகரத்தை ஏற்புடமை பற்றிய விடயம் ஒரு வினாவுக்குரிய ஒன்றாக உள்ளது. எனினும் இன்றைய காலகட்டத்தின் அடிப்படையில் பொதுவான பார்வையில் விவாகரத்தை நோக்கும் போது விவாகரத்து பெரும்பாலும் விரும்பத் தகாத ஒன்றாகவே பல்வேறு மட்டத்தினராலும் நோக்கப்படுகின்றது. திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர் என்று கூறுவர். இந்தத் திருமண வாழ்க்கை வாழ்நாள் பூராகவும் இனிமையானதாக அமைய வேண்டும். வாழ்வில் மன முறிவுகள் ஏற்பட்டாலும் தம்பதியினருக்கிடையிலான விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை புரிந்துணர்வு என்ற நிலைகள் எவ்வித பிரச்சினையையும் தீர்த்து தம்பதினரின் பிரிவுகளைத் தீர்த்து விவாகரத்துக்கு முற்றுப் புள்ளி வைப்பதாகவே உள்ளது. எனவே இத்தகைய மனப்பான்மையை வளர்ப்பதன் மூலம் சந்தோசமான குடும்ப வாழ்க்கையைஅமைத்துக்கொள்ள முடியும். குடும்பம் ஒரு கோயில் என்று கூறுவர். இத்தகையகுடும்பம்கோயில் போல திகழ மனதை தூய்மையாக வைத்து விட்டுக் கொடுப்புடன் வாழ்வோம். திருமண வாழ்வில் இனிமையான தென்றல் வீச வைப்போம். விவாகரத்தை வீணான ஒன்றாக்குவோம்.

கஸ்தூரி பாலசுப்பிமணியம்,
மெய்யியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்,

# படம் பிடித்தவரின் மீது பாய்ந்த பிள்ளையான்



(கொழும்பு)

விளக்கமறியலில் உள்ள, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும், சிவநேசதுரை சந்திரகாந்தன், ஊடகவியலாளர் ஒருவரைத் தாக்க முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாணசபையின் உறுப்பினரான பிள்ளையான், நேற்று முன்தினம் மாகாணசபை அமர்வில் பங்கேற்க வந்தார்.

அப்போது அவரைப் படம் பிடிக்க முயன்ற ஊடகவியலாளரை, பிள்ளையான் பாய்ந்து தாக்க முயன்றார்.

எனினும், அவரை அழைத்து வந்த பொலிஸ் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள், அவரைத் தடுத்து, ஊடகவியலாளரைக் காப்பாற்றினர்.

கிழக்கு மாகாணசபை அமர்வில் பங்கேற்கச் சென்றிருந்த பிள்ளையானுக்கு நேற்று முன்தினம் கை விலங்கு மாட்டப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# மெகா பொலிசி அபிவிருத்தித் திட்டங்களே கொழும்பு நகரின் அழிவுகளுக்கு காரணம்

(கொழும்பு )

கொழும்பு நகரில் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள பாரிய இயற்கை அனர்த்தங்களுக்கு நகர அபிவிருத்தி தொடர்பான செயற்றிட்டங்களே காரணம் என்று கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பில் பெரும்பான்மையாக வாழ்ந்த முஸ்லிம் மககளின் செறிவைக் குறைபதற்காக 1949ஆம் ஆண்டு முதல் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதில் தொடர்மாடி வீட்டுத் திட்டங்கள், சட்டவிரோதக் குடியேற்ற ஊக்குவிப்புகள் என்பனவும் இதில் உள்ளடங்கியுள்ளன.

இவ்வாறான செயற்றிட்டங்களின் ஊடாக தாழ் மற்றும் சதுப்பு நிலங்கள் மண் கொண்டு நிரப்பப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் மேலதிக நீர் வழிந்தோடுவதற்கு அமைக்கப்பட்டிருந்த வாய்க்கால்கள் பராமரிப்பின்றி கைவிடப்பட்டும், மண்நிரம்பி அடைந்தும் காணப்படுகின்றன.

இதன் காரணமாகவே அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் பாரிய அழிவு ஏற்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை கவனத்தில்கொளளாமல் தொடர்ந்தும் மெகா பொலிசி போன்ற பாரிய நகர அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தால் எதிர்காலத்தில் இதனையும் விட பாரிய இயற்கை அழிவுகள் ஏற்படலாம் என்று அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# 10 மாவட்டங்களின் 2866 குடும்பங்களுக்கு சொந்த இடங்களுக்குச் செல்லத்தடை விதிப்பு

மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள 10 மாவட்டங்களில் வசிக்கும் 2866 குடும்பங்களுக்கு அவர்களது சொந்த இடங்களில் வசிப்பதற்கு அனுமதிக்க முடியாது என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் ஆர்.எம்.எஸ். பண்டார தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்டத்தின் 1762 குடும்பங்களும், கண்டி மாவட்டத்தில் 652 குடும்பங்களும், இரத்தினபுரி மாவட்டத்தில் 230 குடும்பங்களும், நுவரெலியா, மாத்தளை, குருநாகல் மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் தலா 114, 42, 31, 15 குடும்பங்களும், கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் 15 குடும்பங்களும் இவ்வாறு முன்னைய இடங்களிலிருந்து அகற்றப்பட்டுள்ளதாக பணிப்பாளர் கூறியுள்ளார்.

பதுளை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள 661 இடங்கள் குறித்து ஆராய்ச்சிகள் ஆரம்பக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# தந்தை இறந்ததை அறியாத இரு பிள்ளைகள் அவரை எழுப்ப 5 நாட்கள் முயற்சித்துள்ளனர்

கணவரை பொல்லினால் தாக்கி கொலை செய்து தனது பிள்ளைகள் இரண்டினை வீட்டில் தனியாக விட்டு தப்பி சென்ற பெண்ணை தேடி பொலிஸார் விசாரணை களை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதி இருவருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறின் பின்னர் குறித்த பெண் கணவரை இவ்வாறு தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் அவர் வீட்டை விட்டு தப்பி சென்றுள்ளார்.

தமது தந்தை இறந்ததை அறியாத அவரின் பிள்ளைகள. தந்தையை எழுப்ப 5 நாட்களாக முயற்சி செய்துள்ளனர்.

அந்த 5 நாட்களும் குறித்த பிள்ளைகள், வீட்டில் இருந்த வாழைப்பழங்களை உண்டு பசியை போக்கியுள்ளனர்.

இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளவர், கேகாலை - பெலிகல - ஹத்தனாகொட பிரதேசத்தை சேர்ந்த 47 வயது நபராவார்.

தமது தந்தையும் தாயும் சண்டை போட்டு கொண்டதாகவும், பின்னர் தாய் பொல்லினால் தந்தையை தாக்கியதாகவும் அந்த பிள்ளைகள் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர்.

பின்னர் கீழே விழுந்த தந்தை பேசவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

5 மற்றும் 3 வயதான அந்த பிள்ளைகள் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (இ-10)

# அரநாயக்க விபத்தில் 15 படுகாயம்

(கொழும்பு).

அரநாயக்கவில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மற்றுமொரு அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட 15 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அரநாயக்க-மாவனெல்ல பிரதான வீதியில் பொல்அம்பேகொட பிரதேசத்தில் தனியார் பேருந்துக்ள் ஒன்றோடொன்று மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இதனால் இரண்டுபேருந்துகளின் சாரதிகள் உட்பட பயணிகள் 15 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் திப்பிட்டியவில் அமைந்துள்ள அரநாயக்க வைத்தியசாலை மற்றும் மாவனெல்ல ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துக் காரணமாக எலஹப்பிட்டிய சாமசர மலையில் ஏற்பட்ட மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இந்தப் பிரதேசத்தில் வாகனங்களைச் செலுத்தும் போது கூடுதல் அவதானத்தைச் செலுத்துமாறும் பொலிஸார் சாரதிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ

## செய்தித்துளிகள்

### உக்ரைன் நாட்டவர் யானை தாக்கி பலி

உக்ரைனிலிருந்து சுற்றுலாப் பயணிகளாக இலங்கைக்கு வந்திருந்த இருவர், காட்டு யானையொன்றால் தாக்கப்பட்டுள்ளனர்.

ஹபரணை - சிகிரியா வீதியில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததோடு, மற்றையவர் காயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவர் ஆணெனவும் காயமடைந்தவர் பெண்ணெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவரின் சடலத்தினை உக்ரைன் கொண்டு செல்வதற்கான நடவடிக்கையினை வெளிவிவகார அமைச்சு எடுத்துள்ளது. (இ-10)

### இணையப் பாவனையால் மனநோயாளிகள் அதிகரிப்பு

இணையப் பாவனையால் மன நோளாளிகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பல்வேறு உள தாக்கங்களால் மன நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதோடு, தற்போதையை காலகட்டத்தில் இணையப் பாவனைகளால் புதுவித மன நோயாளிகள் உருவாகி வருவதாக காலி கராப்பிட்டிய வைத்தியசாலையின் சிறப்பு உளவியல் வைத்தியரான ரமணி ரத்னவீர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டபோதே வைத்தியர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-10)

### வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

எம்பிலிப்பிட்டிய-இரத்தினபுரி பிரதான வீதியில் பெல்மடுல்ல,பாதகொட பிரதேசத்தில் நேற்று காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்தில் மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதால் 35 வயதான தெவுமான திகன்வல பிரதேசத்தைச் சேர்ந்த நிமல் சோமரத்ன என்ற ஆட்டோச் சாரதி ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

### கடற்படை அதிகாரியை திட்டித்தீர்த்த முதலமைச்சர்

கிழக்கு மாகாண முதலமைச்சர் நஷீர் அஹமட், கடற்படையின் உயரதிகாரியொருவரைத் திட்டித்தீர்த்த சம்பவம் தொடர்பிலான காணொளி, இணையத் தளங்களில் வெளியாகி, சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

பாடசாலையொன்றில் இடம்பெற்ற வைபமொன்றின் போதே, முதலமைச்சர் இவ்வாறு திட்டித்தீர்த்துள்ளார். அவ்வதிகாரியை, கையை நீட்டி ஏசிய போது, அவருடைய கை, அங்கு நின்று கொண்டிருந்த மாணவியின் தலையிலும் பட்டு விடுகின்றது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திருகோணமலை, சம்பூர் மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடத்தையும் கணனிப் பிரிவையும் திறந்துவைக்கும் நிகழ்விலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (இ-10)

### ஹெரோயினுடன் ஒருவர் கைது

வத்தளை பிரதேசத்தில், சுமார் 600 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன், பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரால் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர், பல குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டவர் என்றும் பாதாள உலகத் தலைவர் ஒருவருடன் தொடர்புடையவர் என்றும் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

### தேசிய அருங்காட்சியக புத்தர் சிலைக்கு அலரிமாளிகை கண்காட்சியில் சேதம்

வெசாக் தினத்தை முன்னிட்டு அலரிமாளிகையில் நடைபெற்ற புத்தரின் புனித தந்தம் கண்காட்சியின் போது தேசிய அருங்காட்சியகத்திலிருந்து கொண்டு வரப்பட்ட புத்தர் சிலை சேதமடைந்துள்ளது.

புத்தரின் புனித தந்தம் ஒன்று வெசாக் தினத்தை முன்னிட்டு இம்முறை பாகிஸ்தானிலிருந்து எடுத்துவரப்பட்டு அலரிமாளிகையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

அத்துடன், இக்கண்காட்சியில் காட்சிப்படுத்துவதற்காக பழைமைவாய்ந்த புத்தர் சிலையொன்று தேசிய அருங்காட்சியகத்திலிருந்து கொண்டு வரப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## சீரற்ற காலநிலையினால்
# மேல் மாகாணத்தில் மட்டும் 70 ஆயிரம் மாணவர்கள் பாதிப்பு

வெள்ளம் காரணமாக மேல் மாகாணத்திலுள்ள 70ஆயிரம் இற்கும் அதிகமான பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக, மேல் மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மாகாணத்திலுள்ள 11 கல்வி வலயங்களில் எட்டு வலயங்களைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு பாதிப்படைந்துள்ளதாக, அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய கொழும்பு வலயத்தைச் சேர்ந்த 6882 பேர், ஜெயவர்த்தனபுர வலயத்தைச்சேர்ந்த 10,994 பேர், ஹோமாகம கல்வி வலயத்தைச் சேர்ந்த 5281 பேர், களனி கல்விவலயத்தைச் சேர்ந்த 31,868 பேர் இவ்வாறு பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் நீர் கொழும்பு கல்வி வலயத்தின் 4611 மாணவர்களும், ஹொரன கல்விவலயத்தின் 252 மாணவர்களும் வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள், சீருடை, காலணிகள் மற்றும் புத்தகப்பை என்பன தேவையாகவுள்ளதோடு, இவற்றை விரைவில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும், மாகாண கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் 10,000 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் தேவை என்பதோடு அவற்றை விரைவில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருவதாக, அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-25.05.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.12 | 147.96 |
| பிரிட்டன் | பவுண்ட் | 209.73 | 217.33 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 159.56 | 166.07 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 144.13 | 150.31 |
| கனடா | டொலர் | 109.10 | 113.74 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 102.48 | 107.42 |
| சிங்கப்பூர் | டொலர் | 103.81 | 107.92 |
| இந்தியா | ரூபா | 2.1535 | -------- |
| சீனா | யுவான் | 22.2039 | --------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரைன் | டினார் | 386.5535 |
| குவைத் | டினார் | 482.4961 |
| ஓமான் | ரியால் | 378.5468 |
| கட்டார் | ரியால் | 40.0324 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.8630 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.6804 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 200 | 150 | 200 | 160 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 95 | 120 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 1000 | 300 | 500 | 300 | 250 | 400 |
| தக்காளி | 180 | 200 | 130 | 180 | 160 | 200 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 50 | 60 | 60 | 80 | 60 |
| கோவா | 150 | 200 | 120 | 150 | 160 | 200 | 160 |
| கரட் | 180 | 200 | 100 | 100 | 120 | 160 | 200 |
| பூசணி | 60 | 60 | 35 | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 120 | 120 | 70 | 120 | 80 | 120 | 180 |
| வாழைக்காய் | 60 | 20 | 35 | 30 | 30 | 120 | 40 |
| சின்ன வெங்காயம் | 140 | 200 | 150 | 100 | 120 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 | 80 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 400 | 200 | 320 | 120 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 180 | 200 | 90 | 140 | 120 | 120 | 180 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 80 | 120 | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 160 | 200 | 60 | 200 | 160 | 200 | 160 |
| லீக்ஸ் | 200 | 200 | 170 | 160 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 120 | 150 | 110 | 80 | 150 | 160 | 150 |
| கறிமிளகாய் | 200 | — | 150 | 180 | 160 | 240 | 160 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 100 | 100 | 120 | 200 | 120 |
| போஞ்சி | 250 | 400 | — | 280 | — | 300 | 200 |
| கத்தரிதம்புள்ள | 200 | 160 | 90 | — | — | 200 | 200 |
| கீரை - 1பிடி | 60 | 50 | 30 | 40 | 40 | 50 | 60 |
| தேசிக்காய் | 450 | 400 | 250 | 300 | 300 | 200 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 15-25 | 40 | 20 | 20-25 | 40 |
| இராசவள்ளி | 100 | 300 | 110 | 150 | 150 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 300 | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 150 | — | — | 120 | 100 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | — | 20 | 30 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | — | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | — | — | 80 | — | — | 70 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கை ஜனாதிபதியாக மீண்டும் சந்திரிகா 189

### எச்சரிக்கை

பதவி ஏற்பு விழா முடிந்ததும் கண்ணில் போடப்பட்டு உள்ள கட்டுடன் சந்திரிக்கா பேசினார். அப்போது விடுதலைப் புலிகளுக்கு அவர் எச்சரிக்கை விடுத்தார்.

அவர் கூறியதாவது-

எனது முகத்தில் உள்ள காயத்தைப் பாருங்கள்.இது அரசியல் காரணத்திற்காகவோ அல்லது சமத்துவத்துக்காக நடக்கும் சண்டையின் காரணமாகவோ ஏற்பட்ட காயம் அல்ல.

மனிதனை மனிதன் வெறுப்பதால் ஏற்பட்ட காயம் இது.இந்தக் காயத்தை ஏற்படுத்தியவர்கள் நீண்ட காலம் தண்டனை பெறாமல் இருக்க முடியாது. இந்த மண்ணில் தீவிர வாதத்தின் நாட்கள் எண்ணப்படுகின்றன. அந்த நாட்கள் அதிக தூரத்தில் இல்லை.

### வற்புறுத்துங்கள்

நாட்டில் அமைதியென்பது ஜனாதிபதியிடம் இருந்தோ அல்லது வேறு எங்கும் இருந்தோ வந்து விடாது. மக்கள் ஒவ்வொருவரும் வாக்களித்து ஜனாதிபதியை தேர்ந்தெடுக்கிறார்கள். எனவே அவர்கள் தான் நாட்டில் அமைதியைக் கொண்டுவர முடியும். அதாவது அமைதியை ஏற்படுத்தும் பொறுப்பு ஜனாதிபதிக்கு மட்டும் அல்லாமல் எல்லோருக்கும் உள்ளது. நாட்டில் முழு அமைதி ஏற்பட தாமதம் இன்றி அரசுடன் பேச்சு வார்தை நடத்த முன்வரும் படி விடுதலைப் புலிகள் இயக்கத்தை தமிழர்கள் வற்புறுத்த வேண்டும். விடுதலைப்புலிகள் அமைதிப் பாதைக்குத் திரும்ப வேண்டும்.

இவ்வாறு சந்திரிக்கா கூறினார்.

உரையை வாசித்துக் கொண்டிருந்த போது,ஒரு கட்டத்தில் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் அவர் கண்ணீர்விட்டு அழுதார். பின்னர் சிறிது நேரம் கழித்து பழைய நிலைக்குத் திரும்பிய அவர் தொடர்ந்து தனது உரையை வாசித்து முடித்தார்.

குண்டு வெடித்ததால் ஒரு கண் காயம் அடைந்து அதில் கட்டுப் போட்டு இருப்பதால் மற்றொரு கண்ணில் உதவியுடனேயே சந்திரிகா சிரமப்பட்டு உரையை வாசித்தார்.

### எவ்வளவு சதவீதம்?

ஜனாதிபதி தேர்தலில் பதிவான மொத்த வாக்குகளில் சந்திரிகாவுக்கு 51.32 சதவீத வாக்குகளும், எதிர்க்கட்சி வேட்பாளரான ரணில் விக்கிரம சிங்கவுக்கு 42.97 சதவீத வாக்குகளும் கிடைத்தன.

சந்திரிகா தெற்கு,வடமேற்கு ,வடக்கு மத்தி ,அனுராதபுரம் ,ஊவா, சப்ருகமுவா ஆகிய பிராந்தியங்களில் எதிர்க்கட்சி வேட்பாளரான விக்கிரம சிங்கவைவிட கூடுதல் வாக்கினைப் பெற்றிருந்தார்.கொழும்பு உள்ளிட்ட மேற்கு மாகாணம் ,இந்தியத் தமிழ் தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கும் மத்திய கண்டி ஆகிய பகுதிகளில் விக்கிரம சிங்கவுக்கு அதிக வாக்குகள் கிடைத்தன.

### தமிழர் வாக்குகள்

பெருவாரியான சிங்களர்வர்கள் சந்திரிகாவுக்கு ஆதரவாகவே வாக்களித்து இருந்தனர்.


கடந்த ஜனாதிபதி தேர்தலில் 90 சதவீதத்திற்கும் அதிகமாகத் தமிழர்களின் வாக்குகளைச் சந்திரிக்கா பெற்றார். ஆனால் இந்தத் தேர்தலில் தமிழர்களின் ஆதரவு அவருக்குக் குறைந்து விட்டது. பெருவாரியான தமிழர்கள் எதிர்க்கட்சி வேட்பாளரான ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆதரவாக வாக்களித்து இருந்தனர். என்றாலும் யாழ்ப்பாணத்தில் எதிர்க்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரம சிங்கவை விட சந்திரிகா 4 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்றார்.யாழ்ப்பாணத்தில் மொத்தம் 1 லட்சத்து 18 ஆயிரம் வாக்குகள் பதிவாகியிருந்தன.

### குறைந்தது

கடந்த 1994 ம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் மொத்தம் பதிவான வாக்குகளில் சந்திரிக்கா 62 சதவீதம் வாக்குகளை பெற்றார். ஆனால் இந்தத் தேர்தலில் அவருக்கு 51.32 வாக்குகளே கிடைத்தன.

நாட்டின் பிரதமரும், ஜனாதிபதி சந்திரிக்காவின் தாயாருமான சிறிமாவோ பண்டாரநாயக்கா அலுவலகம் அருகே மனித வெடி குண்டு பெண் நடத்திய தாக்குதலில் ,குண்டு வெடித்து 13 பேர் பலியானார்கள். அலுவலகத்தில் இல்லாததால் சிறிமாவோ பண்டாரநாயக்கா உயிர் தப்பினார்.

இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவைக் கொலை செய்ய 18.12.1999 அன்று வெடி குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.



குண்டு வெடிப்பில் படுகாயம் அடைந்த சந்திரிகா, கண்ணில் கட்டுடன். அருகே தாயார் சிறிமாவோ பண்டாரநாயகா.

(தொடரும்)

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம். -தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஆளுநர் அலுவலகத்தில் நடந்த கூட்டம் கண்டீரோ!

யாழ்ப்பாண நகர அபிவிருத்தி என்ற பெயரில் ஆளுநர் அலுவலகத்தில் ஒரு கூட்டம் நடந்துள்ளது. கூட்டத்தின் நோக்கம், திட்டம் என்ன என்பதை மக்கள் நன்கு அறிந்து கொள்வராயினும் அதற்கு யாழ்ப்பாண நகர அபிவிருத்திக்கூட்டம் என்பது கொடுக்கப்பட்ட தலையங்கம்.

பரவாயில்லை. நகர அபிவிருத்தி தொடர்பில் கூட்டம் வைப்பது நல்லது தானே என்றால் அந்தக் கூட்டத்திற்கு முதலமைச்சர் செல்லாதது ஏன்? என்ற கேள்வி எழுகிறது.

இது தவிர யாழ்ப்பாண நகர அபிவிருத்தி தொடர்பில் ஆளுநர் அலுவலகத்தில் கூட்டம் கூட்டப்பட்டதின் உள்நோக்கம் என்ன என்ற கேள்வி எழுவதும் நியாயமானதே.

யாழ்ப்பாண நகர அபிவிருத்தி பற்றிப் பேசும்போது அதில் வடக்கு முதலமைச்சரின் பிரசன்னம் மிகவும் அவசியம் என்பதுடன் அனைத்து மாகாண சபை உறுப்பினர்களும் யாழ்-கிளிநொச்சி தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்டாயம் கலந்து கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் வடக்கு மாகாண சபையைச் சேர்ந்த ஏழு உறுப்பினர்களும் மட்டுமே அக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாண நகர அபிவிருத்தி என்பது எங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டியது. எனவே அது சார்ந்த கூட்டத்தை ஆளுநர் அலுவலகத்தில் நடத்துவது ஏன்? என்று வடக்கின் முதலமைச்சர் எழுப்புகின்ற வினாவை எவரும் எளிதில் புறக்கணித்து விட முடியாது.

ஆக, வடக்கின் ஆளுநருக்கும் முதலமைச்சருக்கும் சில இடங்களில் இருக்கக் கூடிய கருத்து ஒவ்வாமையைப் பயன்படுத்தி முதலமைச்சருக்கு எதிரானவர்கள் ஆளுநர் அலுவலகத்தில் கூட்டத்தைக் கூட்டியுள்ளனர்.

இதன் மூலம் ஆளுநருக்கும் முதலமைச்சருக்கும் இடையில் கடுமையான கருத்து முரண்பாட்டை ஏற்படுத்தி, வடக்கு மாகாண அரசின் இயங்கு நிலைக்குப் பாதகம் செய்வது,

இவ்வாறு செய்வதன் மூலம் வடக்கு மாகாண சபை செம்மையாக இயங்கவில்லை என்றொரு குற்றச்சாட்டை முதலமைச்சர் மீது சுமத்த முடியும் என்பது கூட்டத்தை நடத்தியவர்களின் நோக்கம்.

ஐயா! அவ்வாறான நோக்கம் எதுவும் இல்லை என்று சம்பந்தப்பட்டவர்கள் கூறுவார்களாயின் நல்லது அதை ஏற்கலாம்.

ஆனால் நமக்கு எழும் சந்தேகம் எல்லாம் முதலமைச்சர் இல்லாமல்; வடக்கு மாகாண சபையில் இருக்கக் கூடிய 38 உறுப்பினர்களில் 31 பேர் இல்லாமல் கூட்டத்தைக் கூட்டியது ஏன்? என்பதுதான்.

யாழ்ப்பாண நகரத்தின் அபிவிருத்தியில் உங்களுக்கு அக்கறை இருந்திருந்தால் வடக்கின் முதலமைச்சரையும் ஆளுநரையும் ஒற்றுமைப்படுத்தி வடக்கின் அனைத்து மாகாண சபை உறுப்பினர்களும் யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர்களும் யாழ். அரச உயர் அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலர்கள் உள்ளடங்கியதான கூட்டத்தை கூட்டியிருந்தால், அந்தக் கூட்டத்தால் நன்மை விளைந்திருக்கும். இதைச் செய்யாதது ஏன்?

வடக்கின் முதல்வரையும் ஆளுநரையும் ஒற்றுமைப்படுத்தி அவர்களை இணக்கப்பாட்டிற்கு கொண்டு வருவது நல்லதல்லவா? இதை விடுத்து முதலமைச்சரைப் புறம் தள்ளி, ஏழு மாகாண சபை உறுப்பினர்களுடனும் நான்கு எம்.பிக்களுடனும் கூட்டத்தை நடத்தியதை நகர அபிவிருத்திக் கூட்டம் என்று சொல்வதா? அல்லது முதல்வரையும் ஆளுநரையும் கடுமையாகப் பகைக்கவைக்கும் கூட்டம் என்று சொல்வதா? என்பதை தமிழ் மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

# நான் கடற்படை அதிகாரியை திட்டியது இதற்காகத்தான்

## முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் விளக்கம்

தான் கடற்படை அதிகாரியை திட்டியதாக கூறப்படும் விவகாரம் அவதூறு ஏற்படுத்தும் வகையில் சித்திரிக்கப்படுவதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் தெரிவித்துள்ளார்.

கடற்படை அதிகாரியொருவரை கிழக்கு மாகாண முதல்வர திட்டிய காணொளியொன்று இணையத்தளங்களில் தீவிரமாக பரவி வருகின்றது.

கடந்த 20 ஆம் திகதி திருகோணமலை - சம்பூர் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற பரிசளிப்பு விழா ஒன்றில் முதலமைச்சர் உள்ளிட்ட சிலர் கலந்து கொண்டிருந்தனர். இதன் போதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவ் விவகாரம் தற்போது பூதாகரமாகியுள்ள நிலையில், அதற்கு பதிலளிக்கும் வகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாராக இருந்தாலும் மாகாணத்தின் நெறிமுறைகள், கௌரவம் மதிக்கப்பட வேண்டியது கட்டாயம் இருக்கின்றது என இதன்போது கிழக்கு மாகாண முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இது தனிப்பட்ட ரீதியான பிரச்சினை இல்லை என அவர் இதன்போது தெரிவித்ததுடன், மாகாணத்தின் கௌரவத்தை காக்க வேண்டிய பொறுப்பு இருப்பதாகவும், நான் பேசியதால் தனிப்பட்ட ரீதியாக புண்பட்டிருந்தால் மனம் வருந்துவ தாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

# பகிரங்க அரசியலுக்கு விமுக்தி குமாரதுங்கவும்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் புதல்வர் விமுக்தி குமாரதுங்கவை பகிரங்க அரசியலுக்கு கொண்டு வர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

விமுக்தியை பகிரங்க அரசியலுக்கு கொண்டு வந்து, அவரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால தலைவராக்கும திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமுக்தியை அரசியலுக்கு கொண்டு வரும் பிரதான பங்கை அமைச்சர் டிலான் பெரேரா வகித்து வருவதுடன, அவர் உரையாற்றும் கூட்டங்களில் விமுக்தி குமாரதுங்க குறித்து பேசி வருகிறார்.

முன்னாள் ஜனாதிபதியின் மகனை அரசியலுக்கு கொண்டு வரும் முயற்சியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த உயர்மட்ட தரப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்தவர்களும் சம்பந்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (இ-10)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை வவுனியா பிரதேசத்தில் கோவில்குளம் சிவன் கோவிலடி பிரதேசத்தில் மின் தடைப்படும்.(இ-9)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும் பிற்போடல்

2016.05.28 ஆம் திகதி (சனிக்கிழமை) முற்பகல் 10 மணிக்கு நடைபெற இருந்த யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 2016.06.11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.எனவே அன்றையதினம் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாதுகலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.(இ

# அனுமதிக்கடிதம் வழங்கல்

மத்தியஸ்தர் சபையினர் 27 பேருக்கான பதவி அனுமதிக் கடிதம் வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிரதேச செயலகத்தில் மேற்படி பிரதேச செயலர் பொ.தயானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கியூடெக் நிர்வாக அலுவலர் ஆர்.ஏ.திலகரட்ணம் மத்தியஸ்தர் சபையின் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-51)

# சத்திய தரிசனம்



## பயமே நோய்க்கு காரணம்

❖ இன்று மனிதன் கவலையின் கைதியாக இருக்கிறான். மனநிறைவின்மையே கவலைக்கு காரணம். கவலை வேகத்தை விளைவிக்கிறது. இதய நோய்களுக்கு காரணம் கவலை. பயமே நோய்க்கு பெருங்காரணம்.

❖ ஆரோக்கியத்தின் இன்னொரு பகைவன் கோபம். அது ரத்த ஓட்டத்தில் விஷத்தை செலுத்திவிடுகிறது. சாத்வீக உணவை உட்கொள்ளுங்கள். கொழுப்பு சேர்த்த, வறுத்த உணவு இதயநோய்க்கு காரணம். கனிகள், முளை தானியங்கள் ஆகியவை உடலுக்கு மிகவும் சிறந்தது.

❖ ஒவ்வொரு நாளும் உணவு உண்ணும்போது, உணவுப் பொருட்களை, ஜீரணமாவதற்கென கடவுள் அளித்துள்ள நெருப்பில் அர்ப்பணிக்கிறோம். இறைவனுக்கு நன்றி பாராட்டி வழிபடும் வகையில் சாப்பிட வேண்டும். உணவை சமைக்கும் நெருப்பை கடவுள் என கீதை சொல்கிறது. உண்பதன் நோக்கம், கடவுள் நமக்கு அளித்த கடமைகளைச் செய்வது அல்லது அவனை மகிழ்விப்பதாகும். இதன் விளைவு கடவுளை நோக்கி முன்னேறுவது.

❖ மனிதன் இன்பமாக வாழவே பிறந்திருக்கிறான். ஆனால், அவன் துன்பத்தில் தவழுகிறான். இது வருத்தமான விடயம். ஆனந்தத்தின் ஆதாரம் அவனிடமே இருக்கிறது. உண்மையான கல்வி, மனிதனுக்கு இன் பத்தை எவ்வாறு பெற வேண்டும் என்பதுபற்றி கற்பிக்க வேண்டும். கல்வி உன்னை இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துச்செல்ல வேண்டும்.

❖ ஒருவன் உன்னை குற்றம் கூறியோ, அவதூறாக பேசியோ, துன்புறுத்தினாலும், அதனையே அவனுக்கு திருப்பாதே. சகிப்புத்தன்மையுடன் நடந்துகொள். ஒருவனை நாய் கடித்தால் அவன் அதை திரும்ப கடிப்பதில்லை.


# குடிநீர் விநியோகக் குழாய் உடைந்து நீர்விரயமாகிறது

குருநகர் சென்.றோக் கடற்கரை வீதியில் சுவக்காலைச் சந்தியில் குடிநீர் குழாய் நிலத்துக்கடியில் உடைந்துள்ளதால் தினமும் நன்னீர் விரயமாகிக் கொண்டிருக்கிறது. வீதி அதிகார சபையினருக்கு இச் சம்பவம் குறித்து முறையிடப்பட்டுள்ளதாகவும் விரைவாக இப் பிரச்சினையை தீர்த்துத் தருமாறும் சென்றோக் சனசமூக நிலையத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர் என அதன் தலைவர் க.திருவம்பலம் தெரிவித்துள்ளார். (இ-51)

# போதைவஸ்துக்கான விழிப்பூட்டல் நிகழ்வு

புகைத்தல் மற்றும் போதைவஸ்துக்கான விழிப்பூட்டல் நிகழ்வு கியூடெக் கரித்தாஸ் சர்வமத அமைப்பினால் சமூக மக்களை ஒன்று திரட்டிபுகைத்தல் போதைப்பொருள் தினத்தை முன்னிட்டு நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி முற்பகல் 10.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை கலந்துரையாடல், கருத்தமர்வுகள் நாவாந்துறை சந்தை முன்றலிலும் பொம்மைவெளிப் பிரதேசத்திலுமாக ஜே/86 கிராம சேவகர் பிரிவில் நடத்தப்படவுள் ளது. (இ-51)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## இறந்தவர்களின் படங்களை பூஜை அறையில் வைக்கலாமா?

இறந்தவர்கள் படங்களை பூஜையில் தெய்வ படங்களுடன் மாட்டக் கூடாது. இறந்தவர்கள், தெய்வமாக இருந்து நம்மை காப்பாற்றுவார்களே தவிர அவர்கள் தெய்வம் அல்ல. அதனால் இறந்தவர்கள் படங்கள் தனியாக வைத்து பூஜை செய்வது நல்லது.

தெய்வங்களுக்கு பொதுவாக நாம் எந்த மலரால் அர்ச்சனை செய்கிறோமோ அதற்கு ஏற்ற பலன் இப்பிறவியில் மட்டுமேயன்றி, மறுபிறவிக்கும் அது பயன் தரும். அலங்காரத்திற்காக பயன்படும் எதுவுமே பூஜையறையில் வைக்கக்கூடாது. ஒரு படம்வைத்து பூஜை செய்தாலும் அது உருப்படியாக இருக்க வேண்டும். தூசி, ஒட்டடை படிந்து சுத்தம் செய்யாமல் வைத்திருக்கக் கூடாது.

பழைய படங்கள், உடைந்த பொம்மைகள் மற்றும் கறைபடிந்த உடைந்த கண்ணாடியுடன் இருக்கும் படங்கள் கண்டிப்பாக பூஜையறையில் வீட்டிலேயே இருக்கக் கூடாது. சிலபேர் முப்பாட்டனார் காலத்தில் உள்ள படங்கள், கடையில் விற்கும் சக்கரம், இயந்திரங்கள், உறவினர், நண்பர்கள் கொடுத்தார்கள் என்று பூஜையறை முழுவதும் படங்களை ஒட்டி அது பாதி கிழிந்த நிலையில் இருக்கும். அப்படி இருக்கும் படங்களை நாம் கடலில் போடுவது நல்லது.

வீட்டில் பூஜையறையில் ஒற்றை குத்து விளக்கு ஏற்றக் கூடாது. காமாட்சி அம்மன் விளக்கு, மண் அகல் மற்றும் இரண்டு குத்து விளக்குகள் ஏற்றினால் நல்லது. மூன்று அடுக்கு வைத்த விளக்கு மிகச் சிறப்பானது. விளக்கு பூஜை செய்பவர்கள். ஒரு குத்து விளக்கில் ஐந்து முகமும் ஏற்றி பூஜை செய்யலாம். விளக்கு பூஜை செய்பவர்கள் ஒரு முகம் மட்டும் ஏற்றி செய்வது அவ்வளவு உகந்தது அல்ல. வீட்டில் பூஜை அறையில் எப்பொழுதும் ஒரு செம்பு தண்ணீர் இருப்பது நல்லது. அதே போல் கற்பூரம் ஆரத்திக்குப் பதிலாக நல்லெண்ணெய் தீபம் ஏற்றி ஆரத்தி செய்வது நல்லது. எக்காரணத்திலும் கடலெண்ணெய் தீபம் ஏற்றக் கூடாது.

பூஜை அறையாக இருந்தாலும் சரி, சுவரில் தெய்வ படங்கள் வைத்து பூஜை செய்தாலும் சரி, எதுவாக இருந்தாலும் சுத்தமாக மனத் தூய்மையுடன் செய்தால் தெய்வம் நம்மில் குடிகொள்ளும். சுத்தமாக வீட்டை வைத்திருந்து பூஜை செய்தாலே எல்லா நலனும் நம்மைத் தேடிவரும்.

# JPL வெற்றிக்கிண்ணம் - 2016

# பற்றீசியன்ஸ் முதலாவது வெற்றி

J.P.L வெற்றிக்கிண்ணத்திற்காக யு.ஆர்.பவுண்டேசன் 4ஆவது வருடமாக நடத்திவரும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் முதலாவது சுற்றுப்போட்டி கடந்த சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலாவது தகுதிகாண் போட்டியில்பற்றீசியன் அணி, ஓல்ட்கோல்ஸ் அணியை 50 ஓட்டங்களால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 20 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது.


ரியூடர்-38, டானியல்-41,பத்மமுரளி-24, லிவிங்ரன்-13, மிலான்டோ-27, கவஸ்கர்-12 ஓட்டங்களைப் பெற்றனர்.


களத்தடுப்பில் ஓல்ட்கோல்ஸ் அணியைச் சார்ந்த பிரியதர்ஸன்-01, சிறிகுகன்-03, பால்ராஜ்-01, கஜேந்திரன்-01, மாதவரூபன்--03 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ஸ் அணி 19.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றது.

பிரசோபனன்-20,மாதவன்-12, சீராளன்-16, பிரியலக்ஷின்-25, கஜேந்திரன்-14 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில்பற்றீசியன்ஸ்அணி சார்பாக ஸ்பிறிங்கிள்-01, அஜித் டார்வின்-01, மிலான்டோ-03, லிவிங்ரன்-01, நோபேட்-02, கவஸ்கர்-01 இலக்கினைக் கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசைப் பட்டியலுக்கு பற்றீசியன்ஸ் அணி 5.21 புள்ளிகளையும் ஓல்ட்கோல்ஸ் அணி 2.11 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன. (கு)





அண்மையில் வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாச கடற்கரையில் நடைபெற்ற யாழ்.மாவட்ட கடற்கரை கரப்பந்தாட்டத்தில் ஆண்கள் பெண்கள் பிரிவில் கோப்பாய் பிரதேச அணி சம்பியனாகியது அவ் அணியினரை படங்களில் காணலாம்.

அமிலன் சிறப்பாட்டம்

# விடத்தல்தீவு யுனைற்றற்றை வீழ்த்தி சென்.நீக்கிலஸ் லீக் சுற்றுக்கு தகுதி



பரபரப்பான "நொக்கவுட்" ஆட்டத்தில் விடத்தல்தீவு யுனைற்றற் அணியை வீழ்த்தி லீக்சுற்றுக்குத் தகுதிபெற்றது நாவாந்துறை சென் நீக்கிலஸ் அணி.

"ஹென்றீசியன் சவால் கிண்ண" உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இரண்டாவது சுற்றின் விலகல் முறையிலான ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இரண்டாவது போட்டியில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை எதிர்த்து மன்னார் தோட்டவெளி யுனைற்றற் அணி மோதியது.

ஆரம்பம் முதல் இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தின. இளம் வீரர்களின் வேகமான ஆட்டத்தால் யுனைற்றற் அணியின் ஆட்டம் சற்று மேலோங்கியே காணப்பட்டது.

22 ஆவது நிமிடத்தில் யுனைற்றற் அணி வீரர் ஜோன்சன் அற்புதமான கோலொன்றைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார்.

இரண்டாவது பாதியில் சென்.நீக்கிலஸ் அணியும் ஆட்டத்தை வேகப்படுத்தியது. இரு அணிகளும் இறுதிப் போட்டியில் ஆடுவது போல் பலமான ஆட்டத்தை வெளிப்படுத்தின. பரபரப்பாக சென்ற ஆட்டத்தில் 60. 66ஆவது நிமிடங்களில் அமிலன் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப்போட்டு ஆட்டத்தின் போக்கை மாற்றினார். இதைத் தொடர்ந்து ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. யுனைற்றற் வீரர்கள் வெற்றிக்காகப் போராடியபோதும் சென்.நீக்கிலஸ் வீரர்களின் போராட்டத்தால் இறுதியில் 2:1 என்ற கோல்கணக்கில் சென் நீக்கிலஸ் அணி வெற்றிபெற்று D பிரிவில் முதல் அணியாக லீக்சுற்றுக்கு முன்னேறியது. (கு)



# இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் மன்னார் அடம்பன் ஐக்கியம் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி கருணாகரன் விளையாட்டுக்கழகமும் மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் மன்னார் கில்லறி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் மத்தி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

அராலி வடக்கு திருமகள் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக்கழகங்களுக்கிடையே உதைபந்தாட்ட போட்டியை அராலி வடக்கு மடத்தடி திருமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்துகின்றது.இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து குலனை கலைவாணி விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது . (கு)

# கடற்படை உயரதிகாரி மீது கிழ.முதலமைச்சர் வசை பொழிவு

## தவறாக எண்ணியதால் கோபாவேசம்

கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட், கடற்படையின் உயரதிகாரியொருவரைத் திட்டித்தீர்த்த சம்பவம் தொடர்பிலான காணொளி, இணையத்தளங்களில் வெளியாகி, சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

பாடசாலையொன்றில் இடம்பெற்ற வைபமொன்றின் போதே, முதலமைச்சர் இவ்வாறு கோபாவேசமாக நடந்து கொண்டுள்ளார்.

அவ்வதிகாரியை, கையை நீட்டி ஏசிய போது, அவருடைய கை, அங்கு நின்று கொண்டிருந்த மாணவியின் தலையிலும் பட்டுவிடுகிறது.

திருகோணமலை, சம்பூர் மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடத்தையும் கணினிப் பிரிவையும் திறந்துவைக்கும் நிகழ்விலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை இந்நிகழ்வு நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக, கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்ணான்டோ கலந்துகொண்டதோடு, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷப்பும் கலந்துகொண்டார். சிறுவர்களுக்கான புத்தகங்களை விநியோகிப்பதற்காக இவர்கள்இருவரும், மேடையில் காத்துநின்றுள்ளனர்.

இதன்போது, மேடையை நோக்கி முதலமைச்சர் வர, அங்கு குழுமியிருந்த ஊடகவியலாளர்களும் அவ்விடத்தில் குழுமியுள்ளனர். புத்தகங்களைப் பெறுவதற்காக மாணவர்கள் மேடையை நோக்கி வருவதற்கு, ஊடகவியலாளர்கள் தடையாக இருப்பதை அவதானித்த, அந்நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய கடற்படை அதிகாரி, அங்கிருந்தோரைப பார்த்து, வழிவிடுமாறு கேட்டுள்ளார். எனினும், புத்தகங்கள் வழங்குவதில் தான் (கடற்படை அதிகாரி) விடுபட்டுள்ளதாகவும், ஏனையோருக்கு வழிவிடுமாறும் கோரப்படுவதாகத் தவறாக எண்ணிய முதலமைச்சர், கடற்படை அதிகாரியைத் திட்டித் தீர்த்துள்ளார். முட்டாளே, இங்கிருந்து வெளியே போ. ஒழுங்குமுறையென்றால் என்னவென்று உனக்குத் தெரியாவிட்டால், வெளியே போ. என்னை நிறுத்துவதற்கு நீ யார்? உனக்கு என்னைப்பற்றி தெரியாது, வாயை மூடு. (ஆளுநரைப் பார்த்து) ஆளுநரான நீங்களும் கூட, ஒழுங்குமுறை என்னவென்று தெரிந்திருக்கவில்லை. மரியாதைக்குரிய தூதுவரை நான் மதிக்கிறேன். ஆனால் ஒழுங்குமுறை உள்ளது. உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும் ஆளுநரே, ஒழுங்குமுறையென்றால் என்னவென்று தெரிந்திருக்க வேண்டும் என, அந்தக் கடற்படை அதிகாரியையும் ஆளுநரையும் பார்த்து, முதலமைச்சர் வசைபாடுவது பதிவாகியுள்ளது. இவ்விடயம் தொடர்பாக, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சியிடம் கேட்டபோது, குறித்த காணொளியை தான் பார்த்துள்ளதாகவும், ஆனால் அது குறித்து முறைப்பாடெதுவும் இதுவரை வந்திருக்கவில்லையெனவும் தெரிவித்ததோடு, முறைப்பாடு கிடைக்கப்பெற்றால் விசாரணை மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவித்தார்.

(மற்றுமொரு செய்தி உள்ளே)

---

### அமைச்சர்...

ன்டோ குறிப்பிட்டார்.

இந்த நிலையில் அரசியல்வாதி என்ற அடிப்படையில் தாம் செய்த தவறுக்காக மன்னிப்பை கோருவது சிறந்த செயற்பாடு என்று குறிப்பிட்ட சபாநாயகர் இதனை தாம் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார்.

இதேவேளை இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் இடம்பெற்றால், தண்டிக்கக் கூடிய அதிகாரத்தை தமக்கு கட்சி தலைவர்கள் வழங்கியுள்ளதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டார்

இதற்கிடையில் ஹரின் பெர்ணான்டோவை போன்று தகாத வார்த்தை பிரயோகத்தை பயன்படுத்திய மேலும் இருவர் நாடாளுமன்றத்தில் இருப்பதாகவும் அவர்களும் மன்னிப்பு கோரினால் சிறந்த விடயம் என்றும் சபாநாயகர் கூறினார். (செ-12)

### ஜீ7 மாநாட்டில்...

கொள்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

சமாதானம், சுபீட்சத்திற்கான சிறந்த வழியைக்காட்டும் சுதந்திரம், ஜனநாயகம், சட்ட ஆட்சி, மனித உரிமைகளின் அடிப்படைப் பெறுமானங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் ஆகிய நோக்கங்களுடன் இந்த முறை ஜீ7 மாநாடு நடைபெறுகின்றது.

சம்பிரதாய பூர்வமான ஜீ7 நிகழ்ச்சி நிரலுக்கு மேலதிகமாக பூகோள பொருளாதாரம் வெளிநாட்டுக் கொள்கை, தேசிய பாதுகாப்பு, பூகோள சுகாதாரம், பெண்களை வலுவூட்டுதல் ஆகிய விடயங்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

உச்ச பயனைப் பெற்று பலம் மிக்க ஏழு அரச தலைவர்களின் முன்னிலையில் இலங்கையின் பிரதிமையை எடுத்துச் செல்லவும், இந்த நாட்டின் பொருளாதாரத்துக்குத் தேவையான உச்ச பயனைப் பெற்றுக் கொள்வதற்கும் ஜனாதிபதிக்கு இந்த விஜயம் பயனுள்ளதாக அமையும்.

ஜனாதிபதியுடன் இந்த விஜயத்தில் அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, மங்கள சமரவீர, மலிக் சமரவிக்கிரம, நவீன் திசாநாயக்க, மகிந்த அமரவீர ஆகியோர்களும் இணைந்து கொண்டுள்ளனர். (செ-12)

### நிலங்களை...

இறுதி யுத்தம் நடைபெற்ற போது வன்னி மாவட்டத்தில் இருக்கின்ற தங்களது காணிகளை விட்டுச் சென்றதாக தெரிவித்த பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பு மனுதாரர்கள் யுத்தம் முடிவு க்கு வந்த பின்னர் 2012ஆம் ஆண்டு அங்கு சென்ற போது தங்களது காணிகளில் வேறு நபர்கள் குடியேறியுள்ளதாக உச்ச நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தனர்.

இதன்படி தங்களது காணிகளை மீண்டும் பெற்றுத் தரும் உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி 2013ஆம் ஆண்டு அவர்கள் இந்த வழக்கை தாக்கல் செய்தனர்.

சம்பந்தப்பட்ட காணிகளை மீண்டும் மனுதாரர்களுக்கு பெற்றுக் கொடுப்பதாக காணி ஆணையாளர் 2013ஆம் ஆண்டு வாக்குறுதியொன்றை வழங்கினார்.

அதனை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் வழக்கை முடிவுக்கு கொண்டுவர தீர்மானித்து.

ஆனால் பல வருடங்கள் கடந்துள்ள போதிலும் காணி ஆணையாளர் வழங்கிய வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்று சம்பந்தப்பட்ட மனுதாரர்கள் கடந்த புதன்கிழமையன்று நீதிமன்றத்தில் மீண்டும் புகாரொன்றை முன்வைத்தனர்.

அதனை ஆராய்ந்த தலைமை நீதிபதி ஶ்ரீபவன் உட்பட மூவர் அடங்கிய நீதிபதிகளின் குழு, 2013 ஆண்டு காணி ஆணையாளர் வழங்கிய உத்தரவின்படி காணிகளை மனுதாரர்களுக்கு பெற்றுக் கொடுக்க தவ றியமை தொடர்பாக எதிர் வரும் ஜூலை மாதம் 26ஆம் திகதி விளக்கமளிக்குமாறு சட்ட மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.(செ-12)

### மாணவனின்...

ஜெசிந்தன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேலும் இந்த மாணவன் கடந்த 23 ஆம் திகதி காணாமல் போன நிலையில் நேற்று முன்தினம் சடலமாக பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளார்.

மாணவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக, வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். (செ-4)

# அனர்த்த அரசியல் பொருத்தமற்றது

## நாடாளுமன்றில் மகிந்த பேச்சு

(கொழும்பு)

அனர்த்த நிலைமை சம்பந்தமாக எவர் மீதாவது குற்றம் சுமத்தி அரசியல் செய்வது பொருத்தமற்றது என முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அனர்த்த நிலைமை தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேரழிவு நடந்து முடிந்துள்ளது. எவர் மீதாவது குற்றத்தை சுமத்தி அரசியல் செய்வது பொருத்தமற்றது என்பதே எனது நம்பிக்கை.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க தேவையான நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட வேண்டும்.

சுற்றாடலை பாதுகாக்கும் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. மண்சரிவு மற்றும் வெள்ளத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த அனர்த்தங்களில் பிள்ளைகளே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். பிள்ளைகளின் பாடப்புத்தகங்கள், புத்தக பைகள் இல்லாமல் போயுள்ளன.

வீடுகளை இழந்தவர்களுக்கு மீண்டும் வீடுகளை பெற்றுக்கொடுப்பது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அனர்த்த நிலைமையில், ஊடகங்கள் முனவந்து செய்த சேவைகளை பாராட்ட வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் எங்களால் வழங்கப்பட வேண்டிய உதவிகளை நாங்கள் பெற்றுக் கொடுப்போம் என மகிந்த தெரிவித்தார். (செ-11)

# துறைமுகங்கள் அமைச்சருடன் டென்மார்க் தூதுவர் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான டென்மார்க் தூதுவர் பீட்டர் டக்சொய் ஜேன்சன், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவை நேற்று காலை துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சில் சந்தித்துள்ளார்.

கொழும்பில் நடைபெறுகின்ற ஐக்கிய நாடுகள் சபை அபிவிருத்தி மாநாட்டில் (UNDP Conference) கலந்துகொள்ளும் பொருட்டு நேற்றுமுன்தினம் இலங்கைக்கு வருகைத்தந்த ஜேன்சன் நேற்றுக் காலை துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சிற்கு வருகை தந்துள்ளார்.

இவரை அர்ஜுன ரணதுங்க வரவேற்றதுடன் அவருடன் விசேட கலந்துரையாடலிலும் ஈடுபட்டுள்ளார்.

இந்த கலந்துரையாடலின் போது இலங்கை துறைமுக துறையிலுள்ள முதலீட்டுச் சந்தர்ப்பங்கள் தொடர்பாக பீட்டர் டக்சொய் ஜேன்சன் விசேட கவனம் செலுத்தியதுடன் இரு நாடுகளிடையே கப்பற் சந்தை தொடர்பிலான ஒத்துழைப்புகளை மேம்படுத்தல் தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளார்.

பீட்டர் டக்சொய் ஜேன்சன் இலங்கை, இந்தியா, பூட்டான் மற்றும் மாலைதீவுகள் ஆகிய நாடுகளிற்கான டென்மார்க் தூதுவராக செயற்படுகின்றார். இவருடைய தூதரகம் புது டில்லியில் அமையப் பெற்றுள்ளது.

2010ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையில் பீட்டர் டக்சொய் ஜேன்சன் ஐக்கிய அமெரிக்காவிற்கான டென்மார்க் தூதுவராக செயற்பட்டார். மேலும் 2003ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரையில் ஐக்கிய நாடுகளுக்கான சட்ட விவகாரங்களிற்கான உதவி செயலாளராகவும் இவர் கடமையாற்றியுள்ளார். (செ-11)

# வீரவன்ஸவிடம் கடிதத்தை கையளிக்க நாடாளுமன்றத்திற்கு வந்த அதிகாரி!

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ நேற்று நாடாளுமன்றத்தில் சிறப்புரிமை பிரச்சினை ஒன்றை எழுப்பியுள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தன்னை ஆணைக்குழுவில் ஆஜராகுமாறும் அறிவிக்கும் கடிதம் ஒன்றை வழங்க நாடாளுமன்றத்திற்கு வந்துள்ளதால், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக விமல் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார்.

மெண்டிஸ் என்ற ஆணைக்குழுவின் அதிகாரியே இவ்வாறு நாடாளுமன்றத்திற்கு வந்துள்ளதாகவும் இது குறித்து நாடாளு மன்றம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதனையடுத்து விடயத்தை பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால, சபை முதல்வரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இதன் போது கருத்து வெளியிட்ட சபை முதல்வர், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை விசாரணைக்கு அழைக்க நாடாளுமன்றத்திற்கு வர முடியாது எனவும் அவரது வீட்டுக்கு சென்றே இந்த கடிதத்தை வழங்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

மேலும் இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதி சபாநாயகர் உறுதியளித்துள்ளார். (செ-11)

## வறுத்தலைவிளான்...

இராணுவத்தின் வலிகாமம் உயர்பாது காப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்ட யாழ்ப்பாணம் வறுத்தலைவிளான் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை 26 வருடங்களின் பின்னர் நேற்றைய தினம் மீள திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையினை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ரி.சித்தார்த்தன், வலிகாமம் கல்வி வலய பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா, வலி.தெற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எஸ்.சுகிர்தன் ஆகியோர் திறந்து வைத்துள்ளனர்.

நேற்றைய தினம் நடைபெற்ற இந்த திறப்பு விழாவில் பெற்றோர்கள் அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். கடந்த வருடம் ஏப்ரல் 10 ஆம் திகதி அன்று இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து 25 ஆண்டுகளின் பின்னர் விடுவிக்கப்பட்ட இந்த பாடசாலை புனரமைக்கப்படாமல் பற்றைகளால் நிரம்பி காணப்பட்டது.

இந்நிலையில் குறித்த பாடசாலை புனரமைக்கப்பட்டு நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேற்படி பாடசாலையில் அப்பிரதேச மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் இணைந்து கொள்ள முடியும் என பாடசாலை சமூகம் அறிவித்துள்ளது.

மேலும் குறித்த பாடசாலை மேலும் திறம்பட இயங்க வேண்டுமாயின் அயல் பகுதிகளும் விடுவிக்கப்பட்டு அங்கும் மக்கள் மீள் குடியமர அனுமதிக்கப்படல் வேண்டும் எனவும். இவ்வாறு மீள குடியமர அனுமதிக்கப்படுவதன் மூலமே பாடசாலையில் மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு சிறந்த கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமெனவும் பாடசாலைச் சமூகம் சுட்டிக் காட்டியுள்ளது. (செ-4)

Accounting Group Class
(புங்களா லேன் அருகாமை மல்லாகம்)
2016 A/L
முதலீட்டு தீர்மானங்கள்
2018 A/L
வங்கி இணக கூற்று
கணக்கீடு - திரு-வின்சன்
2016 Day
கம்பனி
2017 A/L
பங்குடமை
(4762)




## இயற்கை அன...

யாகியுள்ள தகவல்களில் முரண்பாடுகள் காணப்படுகின்றது. அந்தப் பகுதியில் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள இராணுவ மீட்புக் குழுவினால், 6 பெண்கள் உட்பட 27 சடலங்களும் 20 மனித உடற் பாகங்களும் மீட்கப்பட்டுள்ளன. காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 132 என இராணுவ பேச்சாளரான பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர தெரிவித்திருக்கின்றார்.

இடர் முகாமைத்துவ அமைச்சினால் இறுதியாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மழை வெள்ளத்தால் 28, நிலச்சரிவுகள் காரணமாக 73 மரணங்கள் பதிவாகியுள்ளன.

பாரிய நிலச்சரிவு அனர்த்தம் என கருதப்படும் கேகாலை அரநாயக்க பிரதேசத்தில் இறந்தோர் எண்ணிக்கை 47 ஆக அதிகரித்துள்ளது. அதேவேளை, காணாமல்போனோர் எண்ணிக்கை 97 ஆக குறைந்துள்ளது.

மழை வெள்ளம் தற்போது வடிந்துள்ள நிலையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கியிருந்த குடும்பங்களில் 60 சதவீத குடும்பங்கள் தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

நேற்றைய தகவல்களின்படி கொழும்பு, கம்பஹா உட்பட 256 மையங்களில் 26 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேர் தங்கியுள்ளனர்.

அதேவேளையில் ஊவா, சப்ரகமுவ மாகாணங்கள் உட்பட 11 மாவட்டங்களிலுள்ள 661 இடங்களில் நிலச்சரிவு அபாயம் இருப்பதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக இந்த அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள 25-க்கும் மேற்பட்ட பெருந்தோட்டங்களிலிருந்து, ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெளியேறி பாதுகாப்பு மையங்களிலும், உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர். (செ-12)

## கருத்தறியும் குழு...

வின் தலைவரும், சட்டத்தரணியுமான லால் விஜேநாயக்க, "நாட்டில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் உருவாக்குவதற்காக புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் முதல்கட்டமாக கடந்த பெப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை நாடளாவிய ரீதியில் உள்ள 25 மாவட்டங்களிலும் புதிய அரசியலமைப்பு தொடர்பில் மக்களின் கருத்துகள் பெறப்பட்டன. இவ்வாறு பெறப்பட்ட கருத்துகளின் அறிக்கை கடந்த 10ஆம் திகதி பிரதமரிடம் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் மொழிபெயர்ப்பில் ஏற்பட்ட சிக்கல் மற்றும் காலநிலை சீர்கேட்டால் இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்க முடியாது போய் விட்டது.

இந்நிலையில், புதிய அரசியலமைப்பு தொடர்பில் மக்களின் கருத்துக்களையும், எங்களின் அபிப்பிராயங்களையும் கொண்டு 300 பக்கத்தில் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையை நாளை வெள்ளிக்கிழமை அலரி மாளிகையில் வைத்து பிரதமரிடம் சமர்ப்பிக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-12)

## ரயர் வெடித்ததில்...

வெடித்தில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த பேருந்து வீதி எல்லை கற்களை உடைத்துக் கொண்டு கடலில் பாய்ந்ததில் மேற்படி விபத்து சம்பவித்துள்ளது.

குறித்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்து கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து மேற்படி மண்டைதீவு சந்தி பகுதியை அண்மித்ததும் பேருந்தின் முன் சக்கர ரயர் காற்றழுத்தத்தினால் வெடித்துள்ளது.

ஏற்கெனவே வேகமாக பேருந்து பயணித்து கொண்டிருந்த நிலையில் ரயர் வெடித்துப் போனதன் காரணமாகவும் சாரதியால் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல்போக வீதியின் ஓரத்தில் இருந்த மதகொன்றுடன் மோதிதுண்ட பேருந்து, சுமார் 30 மீற்றர் தூரம் வரை தூக்கியெறிப்பட்டு வீதியின் ஓரத்தில் இருந்த சதுப்பு நிலப் பகுதிக்குள் வீழ்ந்து இவ் விபத்து ஏற்பட்டிருந்தது. அத்துடன் பேருந்தின் பாகங்கள் பலவும் தூக்கியேறியப்பட்டு சிதறுண்டு காணப்பட்டன.

பேருந்தில் 45 பயணிகள் வரை பயணித்திருந்த நிலையில் மேற்படி விபத்தில் சிக்கி 16 காயமடைந்துள்ளனர். காயமடைந்த அனைவரும் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வாகனச் சாரதியான வட்டுக்கோட்டையை சேர்ந்த நவசிவாயம் சுவீந்திரன் (வயது46), நாச்சிக்குடாவைச் சேர்ந்த அருள்நேசி சிசிலியா (வயது52), யாழ்ப்பாணத்தை சேர்ந்த அருள்நேசன் வசந்தி (வயது42), சாவற்கட்டினை சேர்ந்தவர்களான மகேந்திரம் சிவமணி (வயது49), கணேந்திரராசா சிவநிதி (வயது48), வசிகரன் அருள்வேணி (வயது30), கனகரட்ணம் பொன்மயில் (வயது49), உருத்திராபதி ரஞ்சினிதேவி (வயது 39) ஆகிய 8 பேருடன்மேலும்8பேர்காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் தொடர்பாக யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி கூறுகையில்,

குறித்த விபுத்தில் காயமடைந்த நிலையில' சிகிச்சைக்காக 16 பேர் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் அவர்களில் 11 ஆண்களும் 5 பெண்களும் அடங்குவதாகவும் தெரிவித்தார்.

மேலும் விபத்தில் பேருந்து சாரதியே படு காயமடைந்த நிலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனையவர்களது நிலைமை அச்சமின்றி உள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(செ-4-30)

## போதைப்பொருள்...

உள்ள சென். றோக்ஸ் சனசமூக நிலையத்தில் 'மறைந்த முன்னோடிகள் நினைவுத் தூபி'யை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய முதலமைச்சர்,

இன்றைய அரசியல் மாற்றங்களின் அடிப்படையில் ஏனைய கட்சித் தலைவர்கள் தமது அரசியல் சிந்தனைகளை மாற்றிக் கொண்டு எம்முடன் இணைந்துகொண்டு அரசியலில் ஈடுபடக்கூடிய சூழ்நிலைகள் கூடுதலாகக் காணப்படுகின்றது.

அவ்வாறான ஒரு நிலை ஏற்படுகின்ற போது ஒட்டுமொத்தத் தமிழர்களும் ஒரு குடையின் கீழ் அணிதிரண்டு தமது உரிமைகளை வென்றெடுக்கப் பாடுபடக்கூடிய நாட்கள் வெகுதொலைவில் இல்லை.

நாம் வெறுமனே பொருள் ஈட்டுவதையும் வருமானத்தையும் மட்டும் கருத்தில் கொள்ளாது ஆரோக்கியமான சமூகம் பற்றியும் சமூக மேம்பாடு பற்றியும் சிந்தித்தல் அவசியமாகின்றது. எங்கள் பிள்ளைகளின் ஆரோக்கியம், அவர்களின் கற்றல் நடவடிக்கைகள், அவர்களின் பழக்கவழக்கங்கள் பற்றியெல்லாம் நாங்கள் கவனம் எடுக்க வேண்டும்.

உங்கள் பகுதியில் இடம்பெறக்கூடிய சட்ட விரோத செயல்கள் மற்றும் தீய பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் இருந்து உங்கள் பிள்ளைகளைப் பாதுகாத்தலும் அவர்கள் பற்றி விழிப்பாக இருத்தலும் பெற்றோர்களாகிய உங்களின் தலையாய கடமை. இவை பற்றி நீங்கள் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும்.

கலாசார பிறழ்வு அற்ற மிகவும் பண்பட்ட சீரிய சமூகமாக வாழ்ந்த வடபகுதி தமிழர்களின் வாழ்க்கை முறை, கலாசாரம், கல்வி என்பவற்றை திட்டமிட்டு அழிக்கக் கூடிய இவ்வாறான தீய நடவடிக்கைகளுக்கு நாம் ஒரு போதும உடந்தையாக இருக்கக் கூடாது. எனவே, இவ்விடயம் தொடர்பில் உங்களது ஒத்துழைப்பும் ஆதரவும் மிகவும் வேண்டப்படுகிறது.

உங்கள் பங்குத்தந்தைமார் உங்களைச் சரியாக வழி நடத்துவார்கள் என்பதில் எமக்குச் சந்தேகமில்லை. ஆனால் அவர்களின் அறிவுரைகளை மனதில் எடுக்க நீங்கள் யாவரும் முன்வர வேணடும் என முதலமைச்சர் தனது உரையில் தெரிவித்தார். (செ-12)



வற்றாப்பளை
அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரகாளி அம்மன் ஆலய
வருடாந்த பொங்கல் உற்சவம் - 2016
வீரபத்திரகாளி அம்மன் மெய்யடியார்களே!
வற்றாப்பளை ஸ்ரீ வீரபத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நாளை 27.05.2016 வெள்ளிக்கிழமை காலை பூசை 5.00 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி 6.30 மணிக்கு விசேட பூசையும் மதியப் பூசை 12.00 மணி, மதிய பூசையை தொடர்ந்து அன்னதானம் இடம்பெறும். மாலைப் பூசை 5.00 மணி, இரவு 10.00 மணிக்கு வழுந்து கட்டும் பூசையும், மறுநாள் காலை 3.00 மணிக்கு வளி வெட்டுப் பூசையுடன் பொங்கல் உற்சவம் இனிதே நிறைவு பெறும்.
முக்கிய குறிப்பு : வருடாந்தம் நடைபெறும் மாலை ஏலம் கூறும் நிகழ்வு 4.30 மணிக்கு ஆரம்பமாகும்
அடியார்கள் தங்களாலான பால்,தயிர், இளநீர், பூ, பூமாலை முதலான திரவியங்கள் கொடுத்து திருவிழாவில் கலந்து வீரபத்திரகாளி அம்மன் இஷ்டசித்திகளை பெற்றுய்வீர்களாக!
இவ்வண்ணம் இறை சேவையில்
ஸ்ரீ வீரபத்திரகாளி அம்மன் ஆலய பரிபாலனசபை
(சி-4690)

af ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்
பிரெஞ்சு மொழி




• பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது,தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
• எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA ( DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவையில்லை.
• இலவசம் படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
• யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்
ஆரம்பம் விரைவில், உடன் அழைத்துப் பதியவும்.
021 222 8093 ௭, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(4761)

A/L பொருளியல்
வினாவிடை 6
ரூபா. 250/-
◆ பொருளாதார வளர்ச்சி-அபிவிருத்தி
◆ இலங்கைப் பொருளாதாரம்
• இறுதி இரு அலகுகள் முழுவதும் ஆகப் பிந்திய தரவுகள், தகவல்கள் அடங்கிய புதிய வெளியீடு.
• போட்டிப் பரீட்சைகளுக்கும் ஏற்றது
2015 A/L பரீட்சையில் 99 புள்ளிகள் பெறவைத்த மற்றும் பொருளியல் நூல்கள்
ஆசிரியர் : வே. கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை, அன்னை புத்தகசாலை
(4764)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்-5 மாணவர்களுக்கான
# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-12

வலம்புரி கல்விப்பிரிவு

பகுதி-II

**ஆசிரியர் திரு. வே.அன்பழகன்**

நேரம்:- 1மணி 15 நிமிடங்கள்

01.பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்குரிய விடையைப் பாடலில் இருந்து தெரிந்து எழுதுக.

எண்ணிய முடிதல் வேண்டும்.
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவமெல்லாம்
பரிதி முன்பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்.

1. உவமைத் தொடரை எழுதுக? ..............................
2. "கலங்கிய" என்பதன் எதிர்ப்பதம் ? ..............................
3. உயர்திணைப் பெண்பாற் சொல் ? ..............................
4. சூரியனைக் குறிக்கும் ஒரு சொல் பாடலில் உண்டு அதனை எழுதுக. ..............................
5. "பாவம்" என்பதற்கு உவமானமாகக் கூறப்படும் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக. ..............................
6. நாம் எண்ணுவதை எவ்வாறு எண்ண வேண்டும் என்கிறார்? ..............................

02) இடைவெளியில் பொருத்தமான சொல்லை வைத்து எழுதுக.
1. இரும்பு வேலை செய்பவன் கொல்லன் என்பதுபோல தளபாட வேலை செய்பவன். ..............................
2. மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என்பது போல வயலும் வயல் சார்ந்த இடமும். ..............................

03) வேறுபட்ட சொல்லின் கீழ்க் கீறுக.
1. அழகு , வனப்பு , மதி , எழில்
2.மரம் , விருட்சம் , தரு , பூ

04) தொடர்மொழிக்கொரு சொல்லை எழுதுக.
1. பேருந்தில் பயணச் சீட்டு வழங்குபவர். ..............................
2. விசாரணை முடிவில் நீதிபதி வழங்குவது ..............................

05) பொருத்தமான மரபுச்சொற்களை எழுதுக.
1. மயில் அகவும் என்பது போல குரங்கு ..............................
2. குதிரை கனைக்கும் என்பது போல நரி ..............................

06) பழமொழிகளின் கருத்தை எழுதுக.
1. குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி மங்காது.
..............................
2. காகந்திட்டி மாடு சாகாது
..............................

07) இடைவெளியில் பொருத்தமான சொல் வைத்து எழுதுக.
1. அவன் எய்த .............................. பட்டு மான் கீழே விழுந்தது. ( பாணம் / பானம்)
2. நீண்ட நாட்கள் நோய் நொடியின்றி உயிர்வாழ வேண்டுமானால் .............................. உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும் ( ஊண், ஊன்)

08) பின்வரும் தமிழ்ச் சொல்லுக்குரிய ஆங்கிலக் கருத்தை எழுதுக.
1. தயவு செய்து அமருங்கள் - ..............................
2. நாளை நான் வருவேன் - ..............................
3. ஆயத்தமாக இருங்கள் - ..............................

**09) பின்வரும் ஆங்கிலக்கருத்துக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக.**

1. This is my bag - ..........................................................................................
2. I am going out - ..........................................................................................

**10) பின்வரும் சிங்கள உச்சரிப்புக்கேற்ப தமிழ்க்கருத்தை எழுதுக.**

1. ஓயா இன்னே கீ வெனி பதியே த? ..........................................................................
2. லமாய் செல்லம் கறனவா. ..........................................................................

**11) பின்வரும் தலைப்பை நன்கு விளங்கிக் கொண்டு ஒரு வாக்கியத்தில் ஆறு சொற்களுக்கு குறையாமல் சரியான எழுவாய் பயனிலைகளுடன் மூன்று வாக்கியம் எழுதுக.**

ஒருநாட்டின் உயிர் நாடிகள் அங்குள்ள ஆறுகளே . ஆறுகளில் இருந்து பெறப்படும் நீரைக் கொண்டே அநேக தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றன. அவ்வகையில் எங்கள் களனிநதியானது.....

1 ..........................................................................................................
..........................................................................................................
2 ..........................................................................................................
..........................................................................................................
3 ..........................................................................................................
..........................................................................................................

**12) பின்வரும் பிரசின்னங்களைத் தீர்க்குக.**

01. 67 432 இதனைச் சொற்களில் எழுதுக.

..........................................................................................................

02. 6090, 6100, 6110, ................, .................. இடை வெளியில் வரவேண்டியதை எழுதுக.

03. வடகிழக்குத் திசைக்கு எதிர்த்திசையில் உள்ள திசையாது? ..........................................

04. 2 kg 500 g முடன் 750 g கூட்டி 1200 g ஐக் கழித்தால் மிகுதி எவ்வளவு? ..........................................

05. ஓர் இனிப்புப் பானப் போத்தல் 6 பேரை உபசரிக்கப் போதுமானது . 27 பேரைக் கொண்ட குழுவினரை உபசரிக்க எத்தனை இனிப்புப் பானப் போத்தல் வாங்க வேண்டும்? ..........................................


06. விழா மு.ப 8.45 இற்கு ஆரம்பித்து மு.ப 10.55 இற்கு முடிவடைந்ததெனில் விழா எவ்வளவு நேரம் நடைபெற்றது?
.......................மணித்தியாலம் ................ நிமிடங்கள்

07. 150 g தேயிலையின் விலை 132 ரூபாய் எனின் 500g தேயிலையின் விலை யாது? ..........................................

08. 714 இனிப்புக்களை ஏழு குவியலாக்கினால் ஒரு குவியலில் எவ்வளவு இனிப்புகள் இருக்கும்? ..........................................

09.

2cm




தரப்பட்டுள்ள முழுஉருவின் சுற்றளவு யாது?
..........................................................................


நிறந்தீட்டப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?
..........................................................................

10. 7 m நாடாவிலிருந்து 2 m 85 cm நீளமான துண்டு வெட்டப்பட்டபின் எஞ்சிய துண்டின் நீளம் யாது?
..........................................................................

11. கடிகாரம் Aயின் முகத்தில் காணப்படும் நேரத்தைக் கடிகாரம் Bயின் முகத்தில் காட்டுவதற்கு அதில் மணித்தியால முள்ளையும் நிமிட முள்ளையும் வரைக.





A



B

12. சிறிய குவளையொன்றினால் பெரிய பாத்திரமொன்று ஐந்து தடவைகள் ஊற்றியதும் நிரம்பி விட்டது. பெரிய பாத்திரம் 750 *ml* கொள்ளுமாயின் சிறிய குவளையின் கொள்ளும் கனவளவு யாது? ..........................................



13. இந்த உருவில் உள்ள

1.முக்கோணிகள் எத்தனை? ..............................

2. செங்கோண முக்கோணிகள் எத்தனை?

..............................

14. ஒரு பாத்திரத்தில் 2 *l* 500 *ml* வர்ணப்பூச்சு உள்ளது. அதிலிருந்து 750 *ml* சுவரில் பூசப்பட்டது. மீதியாக உள்ள வர்ணப்பூச்சின் அளவு யாது?

..............................

15. ஒரு பரீட்சைக்கு 998 பேர் தோற்றினர். அவர்களுள் 489 பேர் பெண்கள் எனின், ஆண்கள் எத்தனை பேர்?

..............................

**13) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. இலைகளை உணவாக உண்ணக் கூடியது
1) தேனீ 2) மயிர்க்கொட்டி 3) வண்ணத்துபூச்சி 4) அணில்

02. சீனி தயாரிக்கப்படும் தாவரம்
1) வாழை 2) கமுகு 3) மூங்கில் 4) கரும்பு

03. டெங்கு நோய் எவ்வாறு எமக்கு ஏற்படுகின்றது.
1) டெங்கு நோய் உள்ள ஒருவர் எமக்கு அருகில் இருப்பதனால்
2) நுளம்புகள் எம்மைக் கடிப்பதனால்
3) பழுதடைந்த உணவுகளை உண்பதனால்
4) அசுத்தமான நீரைப் பருகுவதால்

04. தனிப்பட்ட முறையில் ஒருவர் மட்டும் பாவிப்பது
1) தொலைபேசி 2) கத்தி 3) குறடு 4) பத்திரிகை

05. மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் வழிகள்
1) பகலில் மின்விளக்குகளை எரிய விடுதல்
2) குளிரூட்டியைத் அடிக்கடி திறந்து மூடுதல்
3) தேவையில்லாத போது மின் விசிறியை நிறுத்துதல்
4) CFL விளக்குகளை விட சக்தி விரய மின்குமிழைப் பாவித்தல்

06. வரண்ட சூழலில் வளரக் கூடிய இசைவாக்கம் அடைந்துள்ள தாவரம் எது?
1) பலா 2) தக்காளி 3) எலுமிச்சை 4) கள்ளி

07. உடலில் தீப்பற்றிக்கொண்ட ஒருவர் செய்யக் கூடாதது.
1) நிலத்தில் விழுந்து உருளுதல்
2) காற்றின் எதிர்த்திசைக்கு வேகமாக ஓடுதல்
3) தடித்த போர்வையால் உடலை மூடுதல்
4) ஈரச்சாக்கினால் மூடி உருட்டுதல்


08. நெல்லைத் தாக்கும் ஒரு பூச்சி
1) வண்ணத்துப்பூச்சி 2) எறும்பு 3) அந்து 4) நுளம்பு


09. இலங்கையில் கட்டப்பட்ட முதலாவது குளம்
1) இரணைமடு 2) அபயவாவி 3) கலாவாவி 4) ஜின்கங்கை

10. "நிலத்தில் விழும்ஒரு நீரையும் வீணாக்கக் கடலைச் சென்றடைய விடமாட்டேன்" என்று கூறிய மன்னன்.
1) காசியப்பன் 2) பராக்கிரமபாகு 3) வசபன் 4) 2ம் அக்கபோதி

11. கீரையைச் சமைக்குமுன்பு
1) மிளகு நீரில் கழுவுதல் 2) புளிகலந்த நீரில் கழுவுதல்
3) சீனிகலந்த நீரில் கழுவுதல் 4) உப்புக்கலந்த நீரில் கழுவுதல்

12. தண்டில் உணவு சேகரிக்கும் தாவரம்
1) ஆல் 2) வேம்பு 3) கரும்பு 4) வெற்றிலை

13. 
அருகில் உள்ள தாவரங்கள் முறையே
1) வேப்பிலை, ஆமணக்கு 2) ஆமணக்கு , கொன்றை
3) கறிவேப்பிலை, ஆமணக்கு 4) நெல்லி, இலுப்பை

14. 
அருகிலுள்ள விளையாட்டுக்கள்
1) கிளித்தட்டு, கிரிக்கெட் 2) சதுரங்கம், எல்லே
3)வலைப்பந்து, தாயம் 4) சதுரங்கம், கூடைப்பந்து

15. புனித வெள்ளரசுமரம் நாட்டப்பட்டுள்ள இடம்.
1) யாழ்ப்பாணம் 2) கண்டி 3) அநுராதபுரம் 4) கொழும்பு

16. உடலில் தேனீ கொட்டினால் உடனடியாக கொட்டிய இடத்தில் பூசத்தக்கது.
1) உப்பு 2) மிளகு 3) பழப்புளி 4) தேன்

17. மகாவலி கங்கை கடலுடன் சங்கமமாகும் இடத்திற்கு அண்மையிலுள்ள நகரம்
1) களனி 2) களுத்துறை 3) காலி 4) திருகோணமலை

18. வீட்டிலிருக்கும் வாகனங்களுக்கான வருடாந்த அனுமதிப் பத்திரம் பெறுமிடம்
1) கிராமசேவை அலுவலர் 2) தபால் திணைக்களம்
3) சமுர்த்தி அலுவலகம் 4) பிரதேச செயலகம்

19. தேசிய அடையாள அட்டையை வழங்குவோர்.
1) அஞ்சல் திணைக்களம் 2) பிரதேச செயலகம்
3) ஆட்பதிவுத்திணைக்களம் 4) பொலிஸ் திணைக்களம்

20. பண்டைய காலங்களில் வித்துக்களிலிருந்து எண்ணெய் பிரித்தெடுக்கப் பயன்படுவது.
1) வனை சில்லு 2) கிறைண்டர் 3) செக்கு 4) திருகைக்கல்

21. பின்வரும் தாவரங்களில் முட்களில்லாத தாவரம்
1) தூதுவளை 2) ரோஜா 3) காசித்தும்மை 4) போகன்விலா

22. தோசம் நீங்கப் "பிரித்ஓதிய" நீர் தெளிக்கும் பண்பாட்டை உடையவர்கள்
1) தமிழர்கள் 2) பௌத்தர்கள் 3) இஸ்லாமியர் 4) பறங்கியர்

23. கலாவாவியைக் கட்டுவித்தமன்னன்.
1) பண்டுகாபயன் 2) தாதுசேனன் 3) மகாசேனன் 4) வசபன்

24. பயிர்ச்செய்கையின் போது பயிருக்குத் தீங்கு விளைவிப்பது.
1) நத்தை 2) கும்பிடுபூச்சி 3) செண்பகம் 4) தும்பி

25. வித்து முளைத்தலுக்கு அவசியமில்லாத காரணி
1) வெப்பம் 2) ஒளி 3) நீர் 4) வளி

இவ் வினாக்களுக்குரிய விடைகள் நாளை வெள்ளிக்கிழமை (27.05.2016) வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.